# தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள்

தொகுப்பாசிரியர் :

நா. வானமாமலை, எம். ஏ., எல். டி.,

சேகரித்தவர்கள் :

எஸ். எஸ். போத்தையா, எஸ். எம். கார்க்கி.

என்சிபிஎச் பிரைவேட் லிமிடெட்

6, நல்லதம்பிச் செட்டுத் தெரு,

சென்னை-2.

# தமிழ் நாட்டுப்
# பாமரர் பாடல்கள்

நா. வா

தொகு

எஸ். எஸ். பே ம். கார்க்கி

என் ஸி பி எச் பிரைவேட் லிமிடெட்
6, நல்லதம்பிச் செட்டி தெரு,
சென்னை-2.

© என்சிபிஎச் பிரைவேட் லிமிடெட்

முதற் பதிப்பு: அக்டோபர் 1960

வெளியீடு:
என் சி பி எச் பிரைவேட் லிமிடெட்
6, நல்லதம்பி செட்டி தெரு,
சென்னை-2.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. முன்னுரை | ... | 1 |
| 2. முதற் பகுதி<br>குழந்தை, விளையாட்டு | ... | 13 |
| 3. இரண்டாம் பகுதி<br>உழைப்பும் தொழிலும் | ... | 39 |
| 4. மூன்றாம் பகுதி<br>காதல் | ... | 65 |
| 5. நான்காம் பகுதி<br>சமூகம் | ... | 107 |
| 6. ஐந்தாம் பகுதி<br>நாட்டுப் பிரச்சினைகள் | ... | 127 |
| 7. ஆறாம் பகுதி<br>ஊர், காடும் | ... | 137 |
| 8. ஏழாம் பகுதி<br>பல் சுவை | ... | 147 |

# பாராட்டுரை

சோர்ந்த மனத்துக்கு ஊக்கம் அளிப்பது பாட்டு; ஒடிந்த உள்ளத்தை நிமிர்ந்து நிற்கச் செய்வது செய்யுள். உழைக்கும் போது களைப்புத் தோன்றாமல் வேலையை விரைந்து செய்யும்படி நடத்திச் செல்வது பாட்டு; அழுகின்ற குழந்தைகளைத் தூங்கும் படி செய்யும் சக்தி பாட்டுக்கு உண்டென்றால் பாட்டின் பெருமை யைச் சொல்லி முடியாது.

எவ்வளவு கஷ்டமான வேலைகளையும் பாட்டுப் பாடிக் கொண்டே எளிதிலே செய்யும் வழக்கம் எங்கும் உண்டு. நமது நாட்டில் ஒவ்வொரு தொழிலாளர்களும் அவரவர்கள் தொழிலுக் கேற்பப் பல பாடல்களைப் பாடுகின்றனர். ஏற்றப்பாட்டு; உழவுப்பாட்டு; வண்டிக்காரன் பாட்டு; நடவுப்பாட்டு; ஓடக் காரன் பாட்டு; சுண்ணம் இடிப்போர் பாட்டு; இவ்வாறு பல பாடல்கள் வழங்குவதைக் காண்கின்றோம். ஆண் தொழிலாளர் களும் பாட்டுப் பாடிக்கொண்டு வேலை செய்கின்றனர்; பெண் தொழிலாளர்களும் பாட்டுப் பாடிக்கொண்டு வேலைசெய்கின்றனர்.

பிள்ளைகள் விளையாடும்போது பாட்டுக்கள் பாடுகின்றனர். பழங்காலத்து விளையாட்டுக்களான கண்ணாமூச்சி, சடுகுடு, கிளிக் கோடு அல்லது சதுரக்கோடு போன்ற பல விளையாடல்களிலே பாட்டுக்கள் வழங்குகின்றன. இப்படி வழங்கும் பாடல்களைத் தான் நாட்டுப் பாடல்கள் என்று சொல்லுகின்றோம். நாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் எழுதாக் கவிதைகளாகவே வழங்கி வரு கின்றன. ஆதலால் அக்கவிதைகளிலே காலத்துக்கேற்ப மாறுதல் கள் தோன்றி வருகின்றன.

நாட்டுப் பாடல்களைப் படைக்கும்—அல்லது படைத்த—கவி ஞன் யார் என்று சொல்ல முடியாது. அவைகளைக் காலத்திற்கு ஏற்றவாறு எந்தக் கவிஞனும் மாற்றுவதும் இல்லை. பொதுமக்கள் தாம்—பெரும்பாலும் உழைக்கும் மக்கள் தாம்—நாட்டுப் பாடல் களைப் பாடும்-பாடிய கவிஞர்கள் ஆவார்கள்; திருத்தும் கவிஞர் களும் ஆவார்கள். ஆகவே நாட்டுப் பாடல்களைப் பொதுஜன இலக் கியம் என்று சொல்வது பொருந்தும். பொதுஜனக் கவிதை என்று

சொன்னாலும் பொருந்தும்.

நாட்டுப் பாடல்களின் வழியாக, நமது நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைக் காணலாம். மதுரை, இராமநாதபுரம், திருநெல் வேலி ஜில்லாக்களிலே வழங்கும் நாட்டுப் பாடல்களில் பாண்டி நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைக் காணலாம். தஞ்சாவூர், திருச்சி, தென்னாற்காடு முதலிய பகுதிகளில் வழங்கும் நாட்டுப் பாடல்களில் சோழ நாட்டுப் பழக்கவழக்கங்களைக் காணலாம். செங்கற்பட்டு, வடஆற்காடு ஜில்லாக்களில் வழங்கும் நாட்டுப் பாடல்களில் தொண்டை நாட்டுப் பழக்க வழக்கங்களை காண லாம். சேலம், கோவைப் பகுதிகளில் வழங்கும் நாட்டுப் பாடல் களில் கொங்கு நாட்டுப் பழக்க வழக்கங்களைக் காணலாம்.

ஆகவே, நாட்டுப் பாடல்கள் தொகுக்கப்பட்டுப் புத்தகங் களாக வெளிவருமானால், நமது நாட்டுப் புராதன பழக்கவழக்கங் களை அறிவதற்கு அவை துணை செய்யும்.

நாட்டுப் பாடல்கள் பழமையும் புதுமையும் கலந்த இலக்கிய மாகவே விளங்கும். பழமையான பண்பாட்டை விளக்கும் நாட்டு பாடல்களுக்கு இத்தொகுப்பிலேயே பல உதாரணங்களைக் காணலாம்.

இத்தொகுப்பின் மூன்றாவது பகுதி, **காதல்** என்னும் தலைப்பிலே அமைந்திருக்கிறது. இப்பகுதியில் உள்ள **10. நாயின் காவல்** என்னும் பாட்டு, தமிழரின் பழமைப் பண்பைக் குறிப் பது, கள்ளக் காதலில் ஈடுபட்டு வாழும் தலைவன் தன் காதலி யைக் காண இரவில் வருவதைக் குறிப்பிடுவது. இதனை இர வுக்குறி என்பர். **12. என்ன குற்றமோ?** என்னும் பாட்டு, காதல் நோய் கொண்ட ஒருத்தியின் துன்பத்தைக் குறிப்பிடுவது இது தலைவியின் துயரம் என்ற பகுதியில் அடங்கும். **33. பறப் படுவோம்** என்னும் பாட்டு, உடன்போக்கு என்னும் அகப் பொருள் துறையைப் பின்பற்றியதாகும். **42. காலம் கடத்துவேனே** என்னும் பாட்டு. தலைவன், தலைவியை மணந்து கொள்ளுவதற்கு வாக்களித்தலாகும். இதனை வரைவு கடாதலும், வரைவு உடன் படுதலும் என்ற அகப்பொருள் துறையில் சேர்க்கலாம்; இவ்வாறு பழம் பண்பை விளக்கும் பாடல்கள் நாட்டுப் பாடல்களில் மிகுதி யாகக் காணப்படுகின்றன.

'மில்'லைப் பற்றிக் குறிப்பிடுவது; 'ஏரோப்ளேன்' பற்றிப் பாடுவது; 'ரயில்' வண்டியைப் பற்றிப் பாடுவது; போன்ற பாடல்கள் எல்லாம் புதுமையான பாடல்கள். புதுமையை ஏற்றுக் கொண்ட பாடல்கள்; பழம் பண்பிலிருந்து பிறந்த பாடல்கள்.

நாட்டுப் பாடல்களிலே பெரும்பாலான பாடல்கள் உள்ளத்திற்கு ஊக்கம் அளிக்கும், பொழுது போக்குப் பாடல்கள் தாம். ஆயினும் அவைகளிலே அறிவுரை புகட்டும் பாடல்களும் உண்டு; நீதி புகட்டும் பாடல்களும் உண்டு.

இத்தொகுதியிலே சமூகம் என்ற பகுதியில் அமைந்திருக்கும் பாடல்களில் பல நீதிகளைக் காணலாம். 8. குடியாதே என்ற பாட்டு, ஒரு நல்ல பாட்டு. மனைவி, தன் கணவனுக்குக் குடிக்கவேண்டாம் என்று புத்திமதி சொல்லுகின்றாள். 9. கொடுமைக்காரன் என்ற பாட்டு, குறிப்பிடத் தக்கது. நல்ல குணமுள்ள மனைவியைக் கொடுமையான கணவன் துன்புறுத்துகின்றான்; கொடுமைப் படுத்துகிறான். அக்கொடுமை தாங்காமல் அவள் அவனைவிட்டு பிரிகின்றாள். இது விவாக விடுதலை எதனால் ஏற்படுகிறது என்பதை உணர்த்துகின்றது. 14. சாதிக்கலகம் என்ற பாட்டு, சாதிச் சண்டையால் ஏற்படும் தீமைகளைக் குறிப்பிடுவது. 61. கோர்ட்டுக்குப் போய் வீடு போச்சு என்னும் பாட்டு, கோர்டுக்குச் செல்லும் குடும்பம் நாசமாகும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு நீதிகளை—அறங்களை எடுத்துக்காட்டும் பாடல்களும் நாட்டுப்பாடல்களிலே உண்டு.

நாட்டுப் பாடல்களில் வரும் கற்பனைகள், உவமைகள் சிறந்தவை; கவிஞர்களுக்கும் எட்டாத உவமைகளும் அவற்றில் உண்டு.

ஊருணித் தண்ணிபோல
    ஒத்திருந்தோம் ஒரு வருஷம்;
கம்மாத்தண்ணி மண்டிபோல
    கலங்கிட்டோமே நாலுவிதம்.

என்ற பாட்டு, நான்காம் பகுதி—சமூகம், என்பதில் உள்ள 7 சேர்ந்தவர் பிரிந்தனர் என்ற தலைப்பில் உள்ள பாட்டாகும்.

இப்பாடலில் உள்ள 'ஓமமும் சீரகமும் போல்' 'வண்டியிலே வரிச்சட்டம்' 'கூடினமே கூடினமே' 'சேர்ந்தோமே சேர்ந்தோமே' என்ற பகுதிகள் நம் மனத்தைக் கவரும் புதிய உவமைகள். அவை

களைப் படித்தால் அருமை அறியலாம். இவை போன்ற இயற்கையான கற்பனை அமைந்த பாடல்கள் பலவற்றைக் காணலாம்.

நாட்டுப் பாடல்களை எல்லோரும் பாடலாம்; எல்லோரும் படிக்கலாம். அவ்வளவு எளிய முறையிலே—சாதாரணமாகப் பேசும் பாஷையிலே அவைகள் அமைந்திருக்கின்றன. பொது ஜனங்களால் உருவாக்கப்படும் பாடல்கள் வேறு எப்படியிருக்க முடியும்?

சிலர்—நாட்டுப் பாடல்கள் என்ற பெயரால் பாடல்களை வெளியிட்டிருக்கும் சிலர்—அப்பாடல்களைத் திருத்தமான மொழியிலே வெளியிட்டிருக்கின்றனர். இந்தத் தொகுப்பின் ஆசிரியர் அத்தகைய தவறு செய்யவில்லை. இதைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இத்தொகுதியில் உள்ள பாடல்கள் எல்லாம் திருநெல்வேலி ஜில்லாவில் கோயில்பட்டி தாலுக்கா, சிவகிரிப்பகுதி, விளாத்திகுளம் வட்டாரம் ஆகிய பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டவை என்று தொகுப்பாசிரியர் கூறுகின்றார். அப்பாடல்களை அப்படியே வழங்குகிறபடியே திருத்தாமல் வெளியிட்டிருப்பதனால் அவர்களுடைய பேச்சு வழக்கை அறிய முடிகிறது.

பறந்திருச்சு, போயிருச்சு, சூட்டிருவேன், பேசிருவேன், அடியாதிய, பிடியாதிய, மாத்தையிலே, ஙிக்கேன், போன்ற சொற்கள். திருநெல்வேலி ஜில்லா மக்கள் பேச்சு. இவைகள் தஞ்சை ஜில்லாவில் முறையே பறந்தாட்டுது, போயிட்டுது, சூட்டிடுவேன் அல்லது சூட்டுவேன், பேசிடுவேன் அல்லது பேசுவேன், அடிக்காதீங்க, பிடிக்காதீங்க, மாசத்திலே. ஙிக்கிறேன் என்று வழங்கும், இவ்வாறு ஒவ்வொரு பகுதி மக்களின் பேச்சிலே வித்தியாசங்கள் உண்டு.

நாட்டுப் பாடல்களைத் தொகுப்போர், அந்தந்த வட்டாரத்து மக்கள் பேச்சுக்களை அப்படியே அமைத்துத் தொகுக்கவேண்டும். இதனால் இலக்கியச் சுவை குறைந்துவிடாது. உலக வழக்கு வேறு; இலக்கிய வழக்கு வேறு; என்பதைப் படித்தவர்கள் அறிவார்கள். நாட்டுப்பாடல்கள் உலக வழக்கை உணர்வதற்கு உதவும் பாடல்கள்; ஆதலால் அவைகள் வழக்கில் உள்ளபடியே எழுதப்படுவதுதான் சிறந்தது.

இப்பாடல்களின் தொகுப்பாசிரியர் இப்பாடல்களைப் பகுதிப் பகுதியாக வரிசைப்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. ஒவ்வொரு பாடலுக்கும் அவர் கொடுத்திருக்கும் விளக்கம், தெளிவானது. இதற்குமேல் அழகும் தெளிவும் அமையும்படி விளக்கம் எழுதுவது அருமை. ஆசிரியர் எழுதியிருக்கும் முன்னுரை ஒரு சிறந்த ஆராய்ச்சியாகும். நாட்டுப் பாடல்களின் சிறப்பை அறிவதற்கு அம்முன்னுரை பெரிதும் துணை செய்கின்றது.

தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள் என்ற தலைப்பிலே வெளி வந்திருக்கும் இம்முதல் பாகத்திற்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பிருக்கும் என்று நம்புகின்றேன்.

நாட்டுப் பாடல்களைத் தொகுப்பது என்பது எளிதான வேலையல்ல. ஒருவரால் செய்யக்கூடிய வேலையும் அல்ல. பலர் உதவியும் ஒத்துழைப்பும் வேண்டும். நண்பர்கள் சிலரின் உதவியைக் கொண்டு, பேராசிரியர் திரு. வானமாமலை அவர்கள் இப்பெரிய காரியத்தைச் செய்து முடித்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

இதைப்போலவே, தமிழ் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வழங்கும் நாட்டுப் பாடல்களின் தொகுப்பும் வெளிவரவேண்டும். இவ்வாறு வெளிவருமானால், நாட்டுப் பாடல்களில் மேலும் மேலும் புதிய புதிய பாடல்கள் பிறக்கவும் வழி செய்யும்.

புதிய பாடல்கள் தோன்றத் தோன்றப் பழைய பாடல்கள் மறைந்து போவது இயல்பு. எழுதாத பாடல்கள் மறையாமல் எப்படி வாழ முடியும்? இப்படி மறைந்துபோன நாட்டுப் பாடல்கள் எவ்வளவோ? கணக்கிட யாரால் முடியும்? ஆதலால் வழங்கும் பாடல்களைத் தொகுத்து அச்சிட்டுவிட்டால், புதிய பாடல்கள் பிறந்தாலும் பழையபாடல்களைப் புத்தகங்களிலாவது படிக்கலாம்.

ஆதலால், நாட்டுப் பாடல்களைத் தொகுத்து வெளியிடும்பணி, தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் செய்யும் சிறந்த பணிகளில் ஒன்றாகும். இப் பணியிலே ஈடுபட்ட, நண்பர், பேராசிரியர் வானமாமலை அவர்களைப் பாராட்டுகின்றேன். இம் முயற்சியில் அவர் மேலும் ஈடுபட்டு வெற்றிபெற விரும்புகின்றேன், இம் முயற்சிக்குத் துணைசெய்யும் என் சி பி எச் (பிரைவேட்) லிமிடெட் புத்தக வெளியீட்டாளரையும் பாராட்டுகின்றேன்.

சவுராஷ்டிரநகர்
சென்னை-24.
24—9—60

சாமி. சிதம்பரன்.

# முன்னுரை

நமது சமுதாயத்தின் அடித்தளம் உழைக்கும் மக்கள். அவர்களது வாழ்க்கை நாடோடிப் பாடல்களில் சித்தரிக்கப்படுகிறது. அவர்களது வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் நாடோடிப் பாடல்கள் சித்தரிக்கின்றன. குழந்தை கருவாக இருக்கும் காலத்திலிருந்து உலகில் தோன்றி பிள்ளைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி சாகும் வரைக்கும் மனித வாழ்க்கையிலுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பாக நாடோடிப் பாடல்கள் உள்ளன.

குழந்தை இல்லையே என்று ஏங்கும் மலடியின் ஏக்கத்தையும், கருவுற்று இருக்கும் காலத்தில் பிள்ளைப்பேற்றை எதிர்நோக்கி நடக்கும் சடங்குகளையும், கருவுயிர்த்த காலத்தில் தாயடையும் இன்பத்தையும், குழந்தையின் முதலாண்டு நிறையும் வரை தாய் அதனை அன்போடு தாலாட்டிச் சீராட்டுவதையும், குழந்தைகள் பிள்ளைப் பருவமெய்தி, ஓடியாடி விளையாடுவதையும், மணப்பருவம் எய்திய இளைஞர் காதல் வாழ்க்கையையும், மணமான தம்பதிகளின் குடும்ப வாழ்க்கையையும், இன்னும் இவை போன்ற நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் நாடோடிப் பாடல்கள் சித்தரிக்கின்றன. சமூக வாழ்க்கையில், உழைப்பாளி மக்கள் அனுபவிக்கும் ஆர்வங்களைப் பொருளாகக் கொண்டுள்ள பாடல்களும் உள்ளன. உழைக்கும் மக்களில் பெரும் பகுதியினர் சாதிக் கொடுமைக்கு உள்ளாகின்றனர். இக் கொடுமைகளை எதிர்த்து அவர்கள் எழுப்பும் உரிமைக் குரலையும், நாடோடிப் பாடல்களில் நாம் கேட்கிறோம்.

சுருக்கமாகச் சொன்னால் உலக வாழ்க்கையை உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்தில் காட்டும் கண்ணாடி நாடோடிப் பாடல்களாகும். நாட்டுப் பாடல்களில் உழைக்கும் மக்களின்

வாழ்க்கைக்கும் உழைக்காமல் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் உயர்ந்த வர்க்கத்தினரின் வாழ்க்கைக்கும் வேறுபாட்டைக் காணலாம். உதாரணமாக மேல்தட்டிலுள்ள ஓர் தாய் தனது குழந்தையைத் தாலாட்டுவதையும், ஒரு பள்ளிப் பெண் தனது குழந்தையைச் சீராட்டுவதையும் அவர்கள் பாடும் தாலாட்டில் கேட்கலாம்.

உயர்ந்த வர்க்கத்தில் பிறந்த தாய் பாடும் தாலாட்டு :

மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம் போட்டு
தேன் பாய்ந்து செந்நெல் விளையும் செல்வமுள்ளார் புத்திரனே!
வெள்ளித் தேர் பூட்டி மேகம் போல் மாடு கட்டி
அள்ளிப் படியளக்கும் அதிர்ஷ்ட முள்ளோர் புத்திரனே!
வாரிப் படியளக்கும் மகிமையுள்ளோர் புத்திரனே!
மதுரை இரு காதம் வாழ் மதுரை முக்காதம்
ஐம்பத்தாறு தேசம் ஆளவந்த சீமானே!
பாட்டனார் ஆண்ட பதினெட்டு ராஜ்யமும்
காட்டமுடன் ஆளவந்த ராஜகுல நாயகனோ!
வெள்ளி வளை பூட்டி விசாலமாய்த் தொட்டில் கட்டி
தங்க வளைபூட்டி சதுர அலங்காரமாய்த் தொட்டில் கட்டி
பச்சை இலுப்பை வெட்டி பால்வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலிலே அட்டணைக்கால் தூங்குறது யாரு மகன்!

[தாலாட்டு—அரங்கண்ணல்]

சொத்து சுகமுடைய குடும்பத்திலுள்ள தாயின் மகன் சொத்தை ஆளவந்தவன்; உலக இன்பத்தை அனுபவிக்கப் பிறந்தவன்.

பள்ளர் வீட்டில் பிறந்த பாலனைப் பள்ளி தாலாட்டும்போது அவனுடைய குடும்ப நிலையையும், வறுமை நிலையையும் குறிப்பிட்டுப் பாடுகிறாள் :

"முத்துச் சிரிப்பழகா! முல்லைப்பூ பல்லழகா!
வெத்துக் குடிசையிலே விளையாட வந்தாயா!
ஏழைக் குடிசையிலே சாக்குத்தரை மேலே
தாமரைப்பாய் போட்டு தவழ்ந்தோட வந்தாயோ!

# முகவுரை

தரையெல்லாம் மேடுபள்ளம் தவழ்ந்தால் உறுத்தாதோ !
பளிங்கால் அரண்மனையும் பவளத்தூண் மாளிகையும்
பணக்காரன் வீடிருக்க, பஞ்சனிடம் வந்ததும் ஏன் ?
பச்சரிசிச் சோறும் பாதிநாள் பட்டினிதான்

பசும்பால் கொடுத்துன்தன் பசி தீர்க்கப் பார்த்தாலும்
பருத்தி விதை இல்லையடா பசு பாலு தரலையடா !
ஆட்டுப் பாலூட்டியுன்னை ஆதரிக்கப் பார்த்தாலும்
ஆடுகடிக்கும் மரம் அத்தனையும் மொட்டையடா !

பின்னைப் பாலூட்டியுன்னை போஷணைகள் செய்திடவே
கொள்ளை யுத்தம், பஞ்சம், தரங்காகிப் போனேனடா,
நெல்லைப் பதுக்கி வைத்து கிட்டிரம் பண்ணிடுவோர்
கொல்லை வழி போகாமல் குடிசை வழி வந்தாயோ !

தொட்டால் பிசுக்கொட்டும் துணிமுட்டை தையலிட்டு
தொட்டில் கட்டித் தாலாட்ட தூக்கம் வருமோடா
கதிரறுக்கும் நேரத்திலே கட்டியுன்னைத் தோளிலிட்டால்
மதியத்து வெயிலிலே மயக்கமுந்தான் வருகாதோ !

வயலிலே வேலை செய்வேன், வரப்பினிலே போட்டிடுவேன்,
வயலைவிட்டு ஏறுமுன்னம் வாய்விட்டு அழுவாயோ !
சித்தாள் வேலைசெய்வேன் கொத்தனார் கோவிப்பார்,
கொத்தனார் கோபித்தால் குழந்தை மனம் கோணாதோ !

மேற்கண்ட இரு தாலாட்டுப் பாட்டுகளும் கிராமப்புற சமுதாய அமைப்பின் அடித்தட்டையும், மேல் தட்டையும், படம் பிடித்துக் காட்டுகின்றன. செல்வச் செழிப்பில் திளைக்கும் நிலவுடைமையாளர்களின் வீட்டில் குழந்தையை செல்வம் ஆளவந்த சீமானென்று வரவேற்றுப் போற்றுகிறார்கள். ஆனால் எல்லாச் செல்வத்தையும் தனது உழைப்பினால் படைக்கும் உழவர் வீட்டிலேயோ "எங்கள் துன்பத்தில் பங்குகொள்ள நீயும் ஏன் பிறந்தாய்?" என்று குழந்தையைப் பார்த்துத் தாய் கேட்கிறாள். குழந்தைப் பேறு என்ற ஒரே நிகழ்ச்சியை செல்வமுள்ளவர்களும் இல்லாதவர்களும் வெவ்வேறு மனப்போக்கோடு காண்கிறார்கள்.

இது போலவேதான் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவர்கள் காணும் கண்ணோட்டம் வேறுபடுகிறது. இவற்றுள் உழைப்போர் கண்ணோட்டத்தில், வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவர்கள் எப்படிக் காண்கிறார்கள் என்பதை நாடோடிப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. பெரிய பணக்காரர்களைப்போற்றி வயிறு வளர்க்கும் புலவர்கள், அவர்களை வீரத்தில்விஜயனென்றும் கொடையில் கர்ணனென்றும், புகழுகிறார்கள்; நாட்டுப் பாடல்களிலோ அவர்களைப் பற்றிய உழவர் கண்ணோட்டம் வெளியாகிறது.

எருக்கலங் காட்டை வெட்டி.
எரு அள்ளி பாரம் ஏற்றி
பாடு இருக்கையிலே
மாயுராரோ கர்ண ராஜா,

இப்பாடல் இரக்கமின்றி ஒரு உழவனிடம் ஏழுபேர் வேலையை வாங்கும் கொடுமையைச் சுட்டிக் காட்டுகிறது. புலவர்களால் கர்ணனென்று புகழப் பெற்ற பணக்காரர்கள் ஏழைகள் வயிற்றிலடித்துத்தான் பணம் சேர்த்தார்கள் என்பதைப் புலவர் சொல்லமாட்டார். இந்த நாட்டுப் பாடல் சொல்லுகிறது. செய்த வேலைக்குக் கூலி கேட்டால், முதலாளி கோபித்துக் கொள்ளுவாரோ என்று பயந்து சுற்றி வளைத்துப் பேசும் உழவன் ஒருவனை கீழ்க்கண்ட பாட்டில் காண்கிறோம்.

1. வீடு ரெண்டும் கடவீடு
வேட்டி ரெண்டும் வெள்ளை வேட்டி
இரக்கமுள்ள புண்ணியர்க்குப்
பிறக்கிறது ஆண் குழந்தை!

2. சம்பளமும் கட்டுதில்லே
சாதியுள்ள மாணிக்கமே,
எங்க இரக்கம் பார்த்து,
ஏந்த கூலி போடுமையா!

3. பொழுது அடைஞ்சுதே
பூமரமும் சாஞ்சுதே,
இன்னம் இரங்கலையோ,
எசமானே உங்க மனம்!

இவ்வாறு உழவர்களின் வறுமை நிலையையும், உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும், சித்தரிப்பவை நாடோடிப் பாட்டல்கள்.

சொத்துறவு முக்கியமாகி விட்ட உடைமை வர்க்கத்தாரிடையே திருமண உறவைக்கூட சொத்துரிமைதான் நிர்ணயிக்கிறது. உழைப்பையே தங்களது சொத்தாகக் கொண்ட உழவர் மக்களிடையே ஆண் பெண் உணர்ச்சிகளுக்குச் சிறிதளவு சுதந்திரம் இருக்கிறது. சொத்துரிமை உடையவர்களது வழக்கங்களை அவர்கள் பின்பற்றினாலுங்கூட சட்டதிட்டங்களை எதிர்க்கும் புரட்சி மனோபாவமும் அவர்களிடம் காணப்படுகிறது. சமூகக் கட்டுப்பாடுகளை எதிர்த்து மனித உணர்ச்சியைப் போற்றும் உறுதியும், இளைஞரது புரட்சி உள்ளமும் கீழ்வரும் பாடலில் வெளியாவதைக் காணலாம்.

ஊரு தெருவிலே
ஒலிசமாய்ப் போற ராமி
பாராதடா என் முகத்தை
பழி வந்து சேர்ந்திடுமே.

பழிவந்து சேர்ந்தா என்ன?
பத்துநூறு சொன்னா என்ன?
கழுவேறி இருந்தாலும்
காண்பனடி உன்முகத்தை.

உடைமை வர்க்கத்தாரும், உழவர் வர்க்கத்தாரும் வீர வணக்கத்திலும் வேறுபடுகிறார்கள். ஒவ்வொரு வர்க்கமும் தனது நலன்களைப் பாதுகாக்கும் மனிதனை வீரனாகக் கருதுகிறது. சொத்துடைய வர்க்கத்திற்கு அரசனும் அதிகாரிகளும், பணம் சம்பாதிப்பவர்களும் வீரர்களாகத் தோன்றுகிறார்கள். அவர்களுடைய வர்க்க நலன் சொத்து சேர்ப்பதிலும், பணம் சேர்ப்பதிலும்தான் இருக்கிறது. உழைக்கும் மக்கள் அவர்களை வீரர்களாகக் கருதுவதில்லை. பிறர் நலனுக்காகத் தனது சொந்த நலன்களையும் உயிரையும் தியாகம் செய்யத் துணிந்தவர்களையே, உழைக்கும் மக்கள் வீரர்களெனக் கருதுகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கும் நாட்டுப் பாடல்களான வில்லுப் பாட்டு

களில் இத்தகைய பல வீரர்களின் கதைகளை நாம் கேட்கிறோம். முத்துப்பட்டன் கதை, உழைக்கும் மக்கள் வீரன் எனக் கருதும் ஒருவனுடைய கதை. அவன் தனது குல உயர்வைக் காதலுக்காகத் தியாகம் செய்கிறான். உழைக்கும் மக்களோடு தானும் ஒன்றிவிட்டான். அவர்களது இன்ப துன்பங்களைத் தன்னுடைய தாக்கிக் கொண்டான். உழவர் மக்களது மாட்டு மந்தையைப் பாதுகாக்க உயிர் கொடுத்தான். இவ்வீரனை உழைக்கும் மக்கள் சிலைவில் சிறுத்தி கோயில் கட்டி வணங்குகிறார்கள். இவனைப் போலவே இன்னும் பல வீரர்களுடைய கதைகளை வில்லுப் பாட்டுகள் கூறுகின்றன. ஒவ்வொரு வேளை உடைமை வர்க்கத்தில் பிறந்தவர்கள் அதன் சட்ட திட்டங்களை மீறும் பொழுது அதன் கொடுமைக்கு ஆளாகி, உயிர் துறப்பதும் உண்டு. இத்தகைய வீரனொருவனின் கதையைச் சின்ன நாடான் கதை கூறுகிறது. ஐந்து சகோதரர்கள் குடும்பத்தில் ஒரே மகன் பிறந்தான். அவன் தான் சின்ன நாடான். அவன் இளைஞனான். அவனுக்குத் தங்கள் ஒரே சகோதரியின் ஒரே மகளைத் தந்தை மணமுடித்து வைத்தான். அவள் சிறு குழந்தை. சொத்துரிமையைப் பாதுகாக்க இத்திருமணம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. பருவத்தில் ஒத்திராத கணவனும், மனைவியும், இல்லறம் நடத்த முடியவில்லை. சின்ன நாடான் வேற்றுச் சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலித்து அவளோடு சேர்ந்து வாழத் தொடங்கினான். அவன் தாலி கட்டிய மனைவி பருவமெய்தும்வரை அவனது நடத்தை குறித்து அவனுடைய பெற்றோர்கள் கவலைப்படவில்லை. பின்னர் அவனை மனைவியோடு சேர்ந்து வாழ அழைத்தனர். அவன் மறுத்தான். பெற்றோர் பன்முறை மன்றாடிப் பார்த்தனர். அவன் தன் காதலியைக் கைவிட மறுத்தான். அவர்கள் அரசனிடம் முறையிட்டுப் பார்த்தார்கள். சின்ன நாடான் மன்னனையும் எதிர்க்கத் துணிந்தான். மன்னன் தந்தையிடம் மனம்போல் சின்ன நாடானைத் தண்டிக்க உத்தரவிட்டான். தந்தையும் சிற்றப்பன்மாரும் ஆயுதம் தாங்கி சின்ன நாடான் தனித்திருக்கும் சமயம் அவன் வீட்டினுள் நுழைந்து அவனை இழுத்து வந்து கொலை செய்துவிட்டனர். சொத்துரிமைக்கு சொந்த மனைவியிடம் குழந்தை பிறக்க வேண்டுமென்பது சமூகச் சட்டம். இச்சட்

டத்தை மனித உணர்ச்சிக்காக மீறத் துணிந்த மகனையே தந்தை கொலை செய்யத் தயங்கவில்லை. சின்ன நாடானது உறுதியையும், வீரத்தையும், சின்ன நாடான் வில்லுப் பாட்டு போற்றிப் பாடுகிறது. நாட்டுப் பாடல்கள் வீரத்தைப் பற்றியும் வீரர்களைப் பற்றியும் உழைப்பாளி மக்களின் கண்ணோட்டத்தை நமக்கு அறிவிக்கின்றன.

சரித்திர நிகழ்ச்சிகளைப்பற்றியும் உழைக்கும் மக்களது கண்ணோட்டத்தை சில நாட்டுப் பாடல்கள் வெளியிடுகின்றன. கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள், பூலுத் தேவன், தேசிங்கு ராஜன் போன்ற வரலாற்று வீரர்களைப்பற்றிப் பல கதைப் பாடல்கள் உள்ளன. கடந்த இருநூறு வருஷங்களில் தமிழ் நாட்டின் வரலாற்றை அறிய வெளிநாட்டு ஆசிரியரின் சரித்திரக் குறிப்புகளைத் தவிர வேறு எழுதப்பட்ட ஆதாரங்கள் இல்லை. அவை ஒரு புடைச் சார்புடையனவாக இருக்கின்றன. உள்நாட்டு ஆசிரியர்கள் தங்கள் காலத்திய நிகழ்ச்சிகளைப்பற்றி அதிகமாக எழுதிவைக்கவில்லை. கர்நாடக ராஜாக்கள் சரித்திரம், கொங்கு தேச ராஜாக்கள் சரித்திரம் போன்ற வரலாற்று நூல்கள் ஆங்கிலேயர்களிடம் விசுவாசம் கொண்டிருந்த தமிழர்களால் எழுதப்பட்டன. இவர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்களைப் பற்றிய உண்மையான விவரங்களை மறைத்துவிட்டார்கள். உண்மையான விவரங்களில் பலவற்றை நாம் அறிந்துகொள்ளத் துணை செய்வன இவ்வீரர்களைப்பற்றிய நாட்டுப் பாடல்கள்தாம். உதாரணமாக கீழ் வரும்நாட்டுப் பாடல்களைக் குறிப்பிடலாம். மருது சகோதரர்களைப் பற்றி **'சிவகெங்கை அம்மானை'**, **'சிவகெங்கைக் கும்மி'** போன்ற கதைப் பாடல்களாலும், வேறு பல தனிப் பாடல்களாலும் பல உண்மையான விவரங்களை நாம் தெரிந்துகொள்கிறோம். அவை இன்று வரை வழங்கி வராமலிருந்திருக்குமானால் வெள்ளைக்காரர்கள் எழுதிய **'பாளையக்காரர் யுத்தங்கள்'** கர்னல் வெல்ஷின் ஞாபகக் குறிப்புகள், 'திருநெல்வேலி ஜில்லா சரித்திரம்' 'மதுரை கெசட்டியர்' ஆகிய நூல்களில் மருதுவைப் பற்றிச் சொல்லியுள்ள விவரங்களையே நாம் தெரிந்துகொண்டிருப்போம். அவை மருதுவை முரடனென்றும், பிடிவாதக்காரனென்றும், மூளை இல்லாதவனென்றும், வஞ்சகத்தால் அரசைக் கைப்பற்றிக் கொண்டவனென்றும் வரு

ளிக்கின்றன. வெள்ளைக்காரர்களுடைய கண்ணோட்டத்தில் மருது அப்படித்தான் தென்பட்டிருக்கவேண்டும். ஆனால் நாடோடிப் பாடல்களிலோ, மருது வெள்ளையரை எதிர்த்த வீரனாகவும், சிறந்த நண்பனாகவும், நம்பினவர்களுக்கு உயிர் கொடுக்கும் பெருந்தகைமை உடையவனாகவும், மக்களுடைய அன்பிற்குரியவனாகவும் காட்சி அளிக்கிறான். தமிழ் மக்கள் கண்ணோட்டத்தில் மருதுவின் சித்திரத்தை நாடோடிப் பாடல்கள் வரைந்து காட்டுகின்றன. இதுபோலவே கட்டபொம்முவைப் பற்றியும் ஏராளமான நாடோடிப் பாடல்கள் உள்ளன. அவனுடைய சரித்திரத்தை உண்மை வழுவாமல் சொல்லும் கதைப் பாடல்கள் உள்ளன. அவனுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டும் தனி நாட்டுப் பாடல்களும் பல உள்ளன. இவை அனைத்தையும் தொகுத்தால் கட்டபொம்முவைப் பற்றி உண்மையான வரலாற்றுச் சித்திரத்தை நாம் தீட்டமுடியும். இதுபோலவே, ஊமைத்துரையைப் பற்றியும் ஏராளமான நாட்டுப் பாடல்களும், நாடோடிக் கதைகளும் வழங்குகின்றன. பூலுத் தேவரைப் பற்றியும், பூலுத் தேவர் சிந்து, பொலிப்பாட்டு, முதலிய நாட்டுப் பாடல்கள், புளியங்குடி, வாசுதேவ நல்லூர், நெற்கட்டும் செவல் முதலிய ஊர்களில் வழங்கி வருகின்றன என்று அறிகிறேன். அவை அனைத்தும் தொகுக்கப்படுமானால் வெள்ளைக்காரர்கள் அவனைப் பற்றித் தீட்டியுள்ள சித்திரத்திற்கும், தமிழ்வாணன் திட்டியுள்ள சித்திரத்திற்கும் மாறுபட்ட உண்மையான வாலாற்றுச் சித்திரமொன்றை நாம் தீட்டமுடியும். இவ்வாறு சரித்திர நிகழ்ச்சிகளை மக்கள் கண்ணோட்டதில் சித்திரமாகத் தீட்டிக்காட்டும் கதைப் பாடல்கள் பல இடங்களில் வழங்கிவரலாம். அவற்றைத் தொகுக்கும் முயற்சி ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

இன்றும் நமது சமூகத்தில் தீர்க்கப்படாத சில பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்ட கதைகளையும் நாம் நாட்டுப் பாடல் வடிவத்தில் காண்கிறோம் உதாரணமாக நல்லதங்காள் கதையை எடுத்துக்கொள்ளுவோம். பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாததால் ஏற்படும் விளைவுகளை நல்லதங்காள் கதை சுட்டிக்காட்டுகிறது. அவள் தண்ணீர் ஊற்றி வளர்த்த தோட்டத்தில் ஒரு மாம் பழம் பறிக்கக்கூட அவள் குழந்தைகளுக்கு உரிமை இல்லாமற்

போய்விடுகிறது. அவள் தன் தகப்பனோடும், அண்ணனோடும் சேர்ந்து உழைத்து வளர்த்த தோட்டம் அண்ணனுக்கும் அண்ணன் மனைவிக்கும் உரிமையாகிவிடுகிறது. அண்ணன் மிகவும் நல்லவனாக இருந்தும், பஞ்ச காலத்தில் சில நாட்கள் அண்ணன் வீட்டில் தங்கவந்த நல்லதங்காளை அண்ணன் மனைவி, மூளி அலங்காரி படாதபாடுபடுத்தி வைக்கிறாள். பிறந்த வீட்டில் எவ்வித உரிமையும் இல்லை என்பதை நல்ல தங்காள் உணருகிறாள். நல்ல தங்காள்மீது நமக்குத் தோன்றும் அனுதாபம் பெண்ணினத்திற்குச் சொத்துரிமை வேண்டும் என்ற உணர்வையும், உண்டாக்குகிறது.

இவ்வாறு உழைக்கும் மக்களது வாழ்க்கை முழுவதையும் பிரதிபலித்து அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டும் நாட்டுப் பாடல்கள் முழுவதும் முறையாக தொகுக்கப் படவில்லை. அவை முழுவதும் தொகுக்கப்பட்டு முறையான ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும். இப்பொறுப்பை தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும், சமீபத்தில் சென்னை அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கும் நாடோடிக் கலை ஆராய்ச்சிக் குழுவினரும் முக்கியமாக மேற்கொள்ளவேண்டும். தமிழ் எழுத்தாளர்களுக்கும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கும் இப்பணியில் பொறுப்புண்டு. இப்பணி நிறைவேற்றப்பட்டாலன்றி தமிழ் நாட்டின் பண்பாட்டை நாம் முழுமையாக உணர்ந்தவர்கள் ஆகமாட்டோம். இத்துறையின் சிற்சில பிரிவுகளில் சில எழுத்தாளரும், ஆராய்ச்சியாளர்களும் கவனம் செலுத்தி வருவது வரவேற்கத்தக்கது. பல்கலைக் கழகங்களும், அரசாங்கமும் தமிழ் எழுத்தாளர்களும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், நாட்டுப் பாடல்களிலும், நாடோடிக் கலைகளிலும் வருங்காலத்தில் அதிகக் கவனம் செலுத்துவார்களென்று நான் நம்புகிறேன்.

## இத்தொகுப்பைப் பற்றி

நாடோடிப் பாடல் தொகுப்புகள் சில, கடந்த நாலைந்து ஆண்டுகளில் வெளியாகி உள்ளன. அவற்றுள் முக்கியமானவை நாடோடி இலக்கியம். காற்றிலே மிதந்த கவிதை, ஏட்டிலே எழுதாத கவிதைகள், தாலாட்டு, முதலியன. இவை யனைத்

தூமே இலக்கியத் தரத்தை முதன்மையாகக் கருதித் தொகுக்கப்பட்டவை.

இத்தொகுப்பு இலக்கியத் தரத்தையும், உழைப்போர் வாழ்க்கையையும், கருதித் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள் பெரும்பாலும் புன்செய் நிலப் பிரதேசங்களில் பாடப்படுவன. கோவில்பட்டித் தாலுகாவில் விளாத்திகுளம் பகுதியில் அவை, சேகரிக்கப்பட்டன. ஆகவே அவை புன்செய் நிலத்தில் உழைக்கும் உழவர்களுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கின்றன. நடவுப் பாட்டு, அறுவடைப் பாட்டு ஆகியவை நன்செய் நில உழவர்களால் பாடப்படுவன. அவை இத் தொகுப்பில் காணப்படுவதற்குக் காரணமுண்டு. அறுவடைக் காலங்களில் புன் செய் நில உழவர்கள் நன்செய்ப் பகுதிகளுக்கு அறுவடைக்காகச் செல்வார்கள். அங்கு பாடப்படும் பாடல்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு தங்கள் கிராமங்களுக்குச் சென்று பாடுவார்கள். அவை நன்செய்ப் பகுதிகளிலிருந்து அவர்கள் கற்றுக்கொண்டவையாகும்.

இத்தொகுப்பில் தேயிலைத் தோட்டம், ஏலத்தோட்டம் முதலியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களின் துன்பங்களை வெளியிடும் பாடல்களும் உள்ளன. அவை புன்செய்ப் பிரதேசத்தில் ஏன் பாடப்படுகின்றன என்ற கேள்வி எழலாம். கடந்த பன்னிரண்டு வருஷகாலத்தில் இப்பகுதியில் மூன்று முறை கடும் பஞ்சம் உண்டாயிற்று. அதன் காரணமாக தேவிகுளம், பீர்மேடு முதலிய தேயிலைத் தோட்டங்களுக்கும் கம்பம், கோம்பை முதலிய ஊர்களுக்கு அருகிலுள்ள ஏலத் தோட்டங்களுக்கும் இப்பகுதி மக்கள் குடியேறிப் போயினர். மழை பெய்து புன்செய்ப் பயிர் செய்ய வேண்டிய காலம் வந்தவுடன் அவர்கள் ஊர் திரும்பினார்கள். தேயிலைத் தோட்டங்களிலும், ஏலத்தோட்டங்களிலும் அவர்கள் பட்ட கஷ்டங்களைப் பாட்டாகப் பாடுகின்றனர். அப்பாடல்களே இத்தொகுப்பில் காணப்படுகின்றன.

இத்தொகுப்பிலுள்ள சில பாடல்கள் திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்குப்பகுதியிலுள்ள சிவகிரிப்பகுதியில் வாழும் உழைக்கும் மக்கள் பாடுவன. சிவகிரிக்கு அருகில் காடடர்ந்த மலை இருக்கிறது. பயிரில்லாத காலத்தில் விவசாயிகள் மலைக்குச் சென்று

சுள்ளி பொறுக்கி வருவார்கள். அவர்கள் பாடும் பாடல்கள் சிலவும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. சாதிக்கலவரத்தைப் பற்றி ஒரு பாடல் இத்தொகுப்பில் உள்ளது. அது கழுகு மலையில் நடந்த கலவரம் ஒன்றைக் குறிப்பிடுகிறது.

முத்துப் பட்டனைப் பற்றிய பாடலென்று முத்துப் பட்டன் வில்லுப் பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது. மருதுவைப் பற்றிய பாடல் ந. சஞ்சீவி எழுதிய 'மருதிருவர்' என்ற நூலில் காணப்படுவது. பெரும்பாலான பாடல்கள் விளாத்திகுளம் வட்டாரத்தில் பாடப்படுவனவே.

இப்பாடல்களில் மிகப் பெரும்பாலானவற்றை எஸ். எஸ். போத்தையா சேகரித்து எனக்கு அனுப்பினார். ஆனால் அவை வரிசைக் கிரமமாக இல்லாமல் ஒருபாட்டு முதலிலும், அதற்கு அடுத்து வரவேண்டிய பாட்டு பல பாடல்களுக்கப்பாலும் காணப்பட்டன. ஒரே தலைப்பில் வரவேண்டிய பாடல்கள், பல பகுதிகளில் சிதறிக் காணப்பட்டன. பாடல்களின் கருத்தையும் சந்த அமைப்பையும் நோக்கி அவை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

சிவகிரி பகுதியைப் பற்றிய பாடல்கள், வில்லுப்பாட்டுக் கலைஞர் எஸ். எம். கார்க்கி சேகரித்து அளித்தவை.

இரண்டொரு பாடல்கள் தோழர் ஆர். கே. நல்லகண்ணு எழுதியனுப்பியவை.

'கீரை விதைக்கலாம்' என்ற பாட்டு டாக்டர் பி. ராமச்சந்திரன் உதவியது.

தாலாட்டுப் பாடல்கள் எனது தாயாரும், ஸ்ரீமதி தேவகி அம்மாளும் பாடக்கேட்டு எழுதியவை.

இப்பாடல்கள் அனைத்தும் ஒரு மாவட்டத்தின் ஒரு சிறு பகுதியில் பாடப்படுவன என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தின் பல பகுதிகளிலும் பாடப்படும் பாடல்களைத் தொகுக்க முயன்றால் ஆயிரக்கணக்கான பாடல்கள் கிடைக்கும். கிராமப் புறங்களில் வேலைசெய்யும் ஆசிரியர்களும், விவசாயிகள் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களும் சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் சமூக கல்வி அமைப்பாளர்களும் நாட்டுப்

பாடல்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். கிடைக்கும் பாடல்களை எனக்கனுப்பி வைத்தால் அடுத்த தொகுப்புகளில் சேர்த்துக்கொள்ள உதவியா யிருக்கும். பாடல்களைச் சேகரிக்கும் வேலையில் சலியாது முயன்ற எனது பழைய மாணவர் தங்கம்மாள்புரம் போத்தையா எனது பாராட்டுதலுக்கும், நன்றிக்கும் உரியவர் ஆவார். முன்னால் குறிப்பிட்ட பாடல்கள் அனுப்பிய தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

இம்முயற்சியில் என்னை ஈடுபடுத்திய இரு தோழர்களைப் பற்றி நான் குறிப்பிடவேண்டும். ஒருவர் பூர்ணசந்திர ஜோஷி. அவர் தாம் வெளியிடவிருக்கும் 'இந்திய நாடோடிப் பாடல்கள்' என்ற நூலில் சேர்த்துக் கொள்ளுவதற்காக தமிழ்ப் பாடல்கள் சேகரித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பவேண்டினார். அதற்காக அவர் என்னைச் சந்தித்தபோது நாடோடிப் பாடல்களின் அருமையை எனக்கு உணர்த்தி, இத்துறையில் ஈடுபட ஆர்வமுண்டாக்கினார். பலமுறை, பாடல்களைச் சேகரிக்க முயன்று சோர்வுற்றபோது சோர்வைப்போக்கி இத்துறையில் தொடர்ந்து ஈடுபடுமாறு தூண்டிய மற்றொரு தோழர். ப. மாணிக்கம் ஆவார். அவருடைய விமர்சனங்கள் பல இந்நூல் உருப்பெறப் பெரிதும் உதவியாக இருந்தன. அவர்களிருவருக்கும் எனது நன்றி.

இப்பாடல்களைப் பன்முறை திருத்தவும், வரிசைப்படுத்தவும், தலைப்புகள் தயாரிக்கவும், பிரதி செய்யவும் சலிப்பில்லாமல் உதவிய குமாரி T. மங்கைக்கு எனது ஆசியும், நன்றியும் உரித்து.

வாசகர்கள், தங்கள் பகுதியில் வழங்கும் நாடோடிப் பாடல்களைச் சேகரித்து அனுப்புவார்களானால், நான் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

திருநெல்வேலி,
1—3—'60.

நா. வானமாமலை.

# முதற் பகுதி

## குழந்தை

1. தாலாட்டு
2. பாட்டனார் பெருமை
3. அழாதே
4. மாமன் பெருமை
5. குடும்பப் பெருமை
6. பிள்ளைக் கலி தீர்த்த பெருமான்
7. கண் நோக்கு
8. மலடு
9. கொஞ்சல் மொழி

## விளையாட்டு.

10. கழற்சி (கழங்கு)
11. சடுகுடு
12. கண்ணாமூச்சி.

# தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்

## 1. குழந்தை

குழந்தை முதலில் கேட்கும் இனிய ஒலி தாலாட்டுப் பாடலாகும். தாலாட்டுப் பாட்டின் இனிமை கருதி கவிஞர்களும் அவற்றைக் கையாண்டு வந்தார்கள். பெரியாழ்வாரும் பிற்காலப் பிள்ளைத் தமிழ் ஆசிரியர்களும், தெய்வக் குழந்தையீது தாலாட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்கள். தாய் பாடும் தாலாட்டுப் பாட்டின் கருத்து அக் குழந்தையின் குடும்பத்தின் செல்வ நிலைக்கு ஏற்றாற் போல் வேறுபடும். நிலச்சுவான்களின் குடும்பத்தில் குழந்தையை ராஜ்யம் ஆள வந்தவன் என்றும், உலக இன்பத்திற்கெல்லாம் உரிமை உடையவனென்றும் பாடல் வருணிக்கும். உழைக்கும் மக்களின் குடும்பத்தினர் "எங்கள் துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்ள ஏன் வந்தாய்?" என்று தாய் பாடுவாள். தாலாட்டில் குடும்பத் தொழில்களுக்கு ஏற்ற முறையில் குழந்தையின் வருங்காலத்தைக் கற்பனை செய்து அமைத்துப் பாடுவார்கள். இத்தொகுப்பில் நிலச்சுவான் வீட்டுக் குழந்தையைத் தாலாட்டும் பாடல்களும் பூத் தொழில் செய்யும் ஒரு தொழிலாளியின் குழந்தையின் தாலாட்டுப் பாடலும் சேர்க்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களில் தாய்மார் காணும் கனவுகளின் வேறுபாடுகளை இப்பாடல்களில் காணலாம்.

## தாலாட்டு

ஆராரோ, ஆரிவரோ
ஆராரோ, ஆரிவரோ!
ராரிக்கு ராரி மெத்தை
ராமனுக்குப் பஞ்சு மெத்தை
பஞ்சு மெத்தை மேலிருந்த
குஞ்சரமே நித்திரை போ!
ஆடுமாம் தொட்டில்
அசையுமாம் பொன்மணி
பொன்னுக்குப் பொன்மணியா
பொன்னூஞ்சல் தாலையா
நித்திரை போ கண்ணே!
சித்திரப் பூந் தொட்டிலிலே
கண்ணே காதும் கண்மைதாசல்.
காது ரெண்டும் செண்பகப்பூ
முல்லை முருக்கே
முத்தரசே நித்திரை போ!
முத்தென்ன முத்தோ
மூவ ரீந்த முத்தோ?
சங்கு முத்தோ
வாவி முத்தோ
சமுத்திரத்தில்
நல்ல முத்தோ?
காஞ்ச குல ஆபணைக்கு
காட்டு வழி போகறச்சே
நீமறந்த குல வம்சத்தை
வழி திருத்த வந்தவனே!
இலை தீய்ந்து கொடி கருகி
மழை இல்லை யென்ற ராஜ்யத்தில்
மழைத் துளியாய் வந்து நீ
மனக் கவலை தீர்த்தாயோ? (ஆராரோ)

## 2. பாட்டனார் பெருமை

மதுரை அறுகாதம்
வாழ் மதுரை முக்காதம்
மதுரையிலே குதிரை கட்டி
மாந்தோப்பில் விடுதி வைத்து

சடுதியிலே வந்திறங்கும்
சமர்த்தனார் பேரனோ!
இருந்து கணக்கெழுதும்
இந்திரனார் பேரனோ!

சாஞ்சு கணக்கெழுதும்
சமர்த்தனார் பேரனோ!
பாய்போட்டு முத்தளக்கும்
பாண்டியனார் பேரனோ!

தோல்போட்டு முத்தளக்கும்
சுந்தரனார் பேரனோ!
அரசே குணசாஞ்சா
அந்திபட்டால் எந்திரிப்பாய்! (ஆராரோ)

## 3. அழாதே!

ஆரடித்து நீயழுதாய்—உன்
அஞ்சனக் கண் மையழிய
அடித்தாரை சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்.

தொட்டாரைச் சொல்லியழு
சுண்டு விரல் தறிப்போம்
பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் கையாலே?

அத்தை அடித்தாளோ
அரவணைக்கும் கையாலே?
அம்மான் களத்திலே
அவளுக்கு நெற்கேட்டு

பொன்னான வாயாலே
பதில் சொல்ல மாட்டாமல்
போம் பிள்ளாய் என்று—பொட்டி
பிடிச் செறிஞ்சாரோ?

அங்கெடுத்த கண்ணீர்
ஆறாய்ப் பெருகவிட்டு
இஞ்சிக்குப் பாஞ்சு
இளமிச்சை வேரோடி

புஞ்சைக்குப் பாஞ்சு
நஞ்சை பயிராச்சு
ஆரடித்து நீயழுறாய்?
அடித்தாரைச் சொல்லியழு (ஆராரோ)

## 4. மாமன் பெருமை

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ

சங்கரனார் கோயிலிலே
நடுச் சந்தியிலே பின்ன மரம்
அதிலே அடை கிடக்கும்
அஞ்சு தலைச் செந்நாகம்

சுத்திவந்து பூவெடுத்து
சூரியனார் உங்களம்மான்
அஞ்சி அஞ்சிப் பூ வெடுக்கும்
காஞ்சியூர்ப் பண்டாரம்

அஞ்சாமல் பூ எடுக்கும்
பஞ்சவர்கள் பெத்த கண்ணு
அஞ்சி சடையாண்டி
ஆறுமுக வேலாண்டி

பிச்சைக்கு வந்தாண்டி
பிள்ளை வரம் தந்தான்டி
தந்த பிச்சை வளர்ந்தேற
விரும்பிச் செல்லும் ஆழ்வாரே!

பாலும் அடுப்பிலே
பாலகனும் தொட்டிலிலே
காய்ச்சிப் பால் காய்ச்சியுன்
கலத்திலே விட்டாச்சு

போட்டுப் பால் போட்டி
என் அப்ப னுன்னை
தொட்டிலிலே போட்டாச்சு. (ஆராரோ)

## 5. குடும்பப் பெருமை

ஏழு பலாமரத்தை எய்தார் இளைய பெருமாள்
பரதராமர் சங்கீதத்தை அப்பா நீ பார்க்கப் பிறந்தாயோ!
தாழை ஒரு மரமாம் தாழை பூத்தாலும் ஆயிரமாம்
தாழை சுற்றிப் பூவெடுக்கும் சந்திரராம் உங்களம்மான்
பின்னை ஒரு மரமாம் பின்னை பூத்தாலும் ஆயிரமாம்
பின்னை சுத்திப் பூ எடுக்கும் புண்ணியராம் உங்களப்பா
பாசிபடர்ந்த மலை பங்குனித்தேர் ஓடும் மலை
ஊசி படர்த்தமலை உத்திராட்சம் காய்க்கும் மலை
ஆக்கமுள்ள தேக்குமரம் யாருவந்தால் தேரோடும்
செல்வமகன் சீருடையான் சென்றுவந்தால் தேரோடும்
வருஷமகன் வாழ்வுடையான் வடந்தொட்டால் தேரோடும்

(மேலே கண்ட பாடல் பூவெடுத்து மாலைகட்டிப் பிழைக்கும் பண்டாரச் சாதியினர் வீட்டில் தாய்மார் பாடுவது.)

## 6. பிள்ளைக் கலிதீர்த்த பெருமான்

பொன்னே நவமணியே
பூலோக சுந்தரமே !
தவத்தினால் வந்துதித்த
தற்பரனே கண்ணுறங்கு !

எங்கள் செல்வக் கொடி தனக்கு
இளவரசாய் வந்துதித்த
சிங்கப் பெருமானே
செல்வனே கண்ணுறங்கு !

மலடன் மலடி என்று
வையகத்தோர் பேசாமல்
பிள்ளைக் கலி தீர்க்கவந்த
பெருமானே கண்ணுறங்கு. !

## 7. கண் நோக்கு

*அழகான குழந்தைகளையோ, அல்லது துறுதுறுப்பான குழந்தைகளையோ அயலார் பார்த்து மெச்சினால் அவர்கள் கண்பட்டு நோய் வந்துவிடும் என்ற நம்பிக்கை பல நாடுகளிலும் உண்டு. கண் படாமல் முன்கூட்டியே தடுத்துவிடக் குழந்தையின் கன்னத்தில் சிறிது மையைப் பூசுவார்கள். பாரசீக நாட்டில் குழந்தை பிறந்தவுடனேயே கண்படாமல் தடுக்க முகத்தில் சிறு காயமொன்று ஏற்படுத்திவிடுவார்கள். இவை தவிர வேறு பல வழக்கங்களும் பல நாடுகளில் காணப்படுகின்றன. குழந்தைக்கு நோய் வந்தால் மிளகாய் வத்தலையும், உப்பையும் குழந்தையின் தலையைச் சுற்றி வெகுதூரம் சென்று எறிவதும் உண்டு. மஞ்சள் நீரையும் சுண்ணாம்பையும் கரைத்து அதில் வேப்பிலைக் கொழுந்தையும், அந்நீரில் போட்டு ஆரத்தி சுற்றுவார்கள். இம்முறைகளால் பிறர் கண்பட்டுக் குழந்தைக்கு நோய் விழுவதைத் தடுத்துவிடலாம் என்று நம்புகிறார்கள். இம்முறைகளைத் 'திட்டிக் கழிப்பு' என்று சொல்வார்கள். திருஷ்டி சுத்தும்பொழுது குழந்தையின் தாயோ*

அல்லது பாட்டியோ இப்பாடலைப் போன்றதொரு பாட்டைப் பாடுவார்கள்.

**கண்ணூறா கண்ணூர்க்குக் கண் நோக்கும் வாராமல்**
**சுண்ணாம்பு மஞ்சளும் சுற்றி எறி கண்ணூர்க்கு.**
**வேப்பிலையும் மஞ்சளுமாய் வீசி எறி கண்ணூர்க்கு.**

**குறிப்பு:** உடலமைப்பையும், நோயின் தன்மையையும் அறியாத காலத்தில் மந்திரத்தால் நோயைத் தடுத்துவிடலாம் என்ற நம்பிக்கை உலக முழுவதிலும் இருந்தது. இயற்கையைத் தங்களுக்கு அடங்கி நடக்க மந்திரமும், மந்திரப் பாடல் சேர்ந்த வெறியாடல்களும் பயன்படும் என்று ஆதி மனிதர்கள் நினைத்தார்கள். இயற்கையை வெல்ல தமிழர்கள் கையாண்ட மந்திரமுறை 'சித்தம்' என்று வழங்கப்பட்டது. அதன் எச்சமே இப் பாடலில் காணப்படுவது. இதுபோன்ற மந்திர முறைகளினின்றே இயற்கையை புறவயமாக உணரக்கூடிய விஞ்ஞானம் தோன்றிற்று. 'மந்திர முறைகளே விஞ்ஞானத்தின் தாய்' என்று விஞ்ஞான அறிஞர் டாக்டர் பெர்னல் கூறுகிறார்.

## 8. மலடு

தாய்மை உலக மக்களால் போற்றப்படும் பண்பு. குழந்தை பெற்றவர்கள் எதிரே வந்தால் நல்ல சகுனம் என்று கிராம மக்கள் நம்புகிறார்கள். அவர்கள் தொட்டதெல்லாம் சீராகும் என்ற நம்பிக்கையின் காரணமாகப் பல சடங்குகளில் அவர்களுக்கு முதன்மை தரப்படுகிறது. குழந்தை இல்லாத பெண்களுக்கு இம்மையின் பயனும், மறுமையின் பயனும் இல்லை என்ற நம்பிக்கை வேரூன்றி இருக்கிறது. மலடியின் வீட்டில் ஆடு மாடும், செடி கொடிகளும் செழிப்பாக வளரமாட்டா. இல்லறத்தின் பயன், 'இறந்தோர்க்கு ஈதல்' என்னும் உரிமை அவர்களுக்கு இல்லை. பிள்ளைகள் கொள்ளி வைத்தால்தான் மறுமைக்கு வழிபிறக்கும். ஆகவே மறுமையிலும் அவர்களுக்கு இன்பமில்லை. இந்த நம்பிக்கைகளை எல்லாம் ஒரு மலடியின் வாய்ச்சொல்லாக இப்பாடல் அமைக்கிறது. சின்னத் தம்பி வில்லுப் பாட்டுக் கதையில் இப்பாடல் வருகிறது. சின்னத் தம்பியின் தாய் பூலாள் வெகுநாள் கருவுறாமல் இருந்தாள். அவள்

*தனது மலட்டுத் தன்மை கண்டு வருந்தி ராமப் பகடையை மறு மணம் செய்துகொள்ள வேண்டுகிறாள். அவன் மறுத்துவிடுகிறான்.*

நான் தான் மலடானேன் நாட்டிலுள்ளோர் தான் நகைக்க
கையாலே வளத்தெடுத்த கரும்பூச்சியுந் தான் மலடு
ஈனுக் கிடாரியான எருமையுந் தான் மலடு
காராம் பசுவும் கன்று கிடாரியுமே தான் மலடு
முற்றத்திலே நிற்குமந்த முள் முருங்கை தான் மலடு
நாயுமே தான் மலடு நான் மலடாய்ப் போனேனே. 1

பூக்கிற காலத்தில் பூமாறிப் போனேனே
காய்க்கிற காலத்தில் காய்மாறிப் போனேனே
என் நாத்துப் பெண்டுகள் ஏழு பிள்ளைத் தாயானார்
இருடியாய்ப் பெண் மலடாய் இருக்கேனே மன்னவரே
பிள்ளையில்லா வாசலென்றால் பிச்சைகூட வாங்கார்கள். 2

மழை பெய்த முற்றத்திலே மண்ணளைய மைந்தனில்லை
வீட்டிலே சோறுபோட்டால் வாரியுண்ண மைந்தனில்லை
வாழ்ந்திருந்தே இருபேரும் வைகுண்டம் சேருங்காலம்
சேர்ந்திருந்தே இருபேரும் சிவன் பாதம் சேருங்காலம்
உற்றுருமை செய்தனுப்ப உரிமையான பிள்ளையில்லை
கொள்ளிக்கு மைந்தனில்லை குடமுடைக்க மைந்தனில்லை
தீக்கடனும் நீர்க்கடனும் செய்துவரப் பாலனில்லை
எள்ளுநல்லோ தண்ணீரும் இறைத்துவிடப் பாலனில்லை. 3

[ சின்னத்தம்பி வில்லுப்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது ]

## 9. கொஞ்சல் மொழி

*குழந்தை பிறந்து ஐந்தாறு மாதத்தில் அது பெரியவர்களைப் பார்த்துப் பேசி விளையாடுகிறது. அச்சமயத்தில் அது தன் குரல் வளையில் இங்க்-இங்க் என்ற சப்தத்தை எழுப்பி அதனைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறது. அப்பொழுது அது பலவிதமான ஒலிகளைக் கேட்டால் தானும் அதை ஒலிக்க முயலும். அது கற்றுக் கொள்ள வேண்டிய ஒலிகளைப் பாட்டாக ஒலித்தால் அது ஆர்வத்தோடு கேட்டுத் திரும்பத் திரும்ப ஒலிக்கும் ஒலிகளைச் கற்றுக் கொள்ளும்.*

இதற்காகத் தாய்மார்கள் குழந்தைகளைக் கொஞ்சும் பொழுது குழந்தை எளிதில் கற்றுக் கொள்ளக்கூடிய ஒலிகளைப் பலமுறை சொல்லிப் பாடுவார்கள். இம்முறையில்தான் இங்கு, இங்கு, ரங்கா, ரங்கா இங்கு, சங்கு, அக்கா, பொட்டு, வட்டு, கொட்டு என்ற ஒலிகள் இப்பாட்டில் இடம் பெற்றுள்ளன

1. என்னைப் பெத்தாரு, ஏலம் போட்டாரு !
சுக்குப் போட்டாரு, சும்மா வந்தாரு !

2. என்னைப் பெத்தாரு கஞ்சி கொணுந்தா
ஏலம் மணத்திடுமாம்.
அதைப் பிடிச்சுக் கருது வெட்டுறு
கிறு கிறுத்துருமாம்.

3. சுக்குப் போட்டுத் தண்ணி குடிச்சா
சோக்கு விட்டுருமா !
நத்தம் பூசனிப் பழமாம்
நாதாக்களிடும் போட்டாம்.
சீனிச் சக்கரை வட்டாம்
தேவேந்திரன் கோட்டாம்.

4. இங்கு, இங்கு
ரங்கா, ரங்கா, ரங்கா,
கஸ்தூரி ரங்கா.
காவேரி ரங்கா.
இங்கு குடிக்கிற சங்கா?
வார்த்தை சொல்லுற வண்டோ ?
சுண்டோ சுரைக் கொளுந்தோ
சோத்துக்கு ஊத்துற நெய்த்துளியோ ?

5. அக்கா அக்கான்னு சொல்லி
அம்மான் தோப்பிலே சென்னு
சோலையில் மாம்பழம் தின்னு
சொல்லி வளர்த்த கிளியோ !

# 10. கழற்சிப் பாட்டு

சிறுமியர் விளையாட்டுகள் பல தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றுள் சில அம்மானை கழற்சி, பல்லாங்குழி ஆகியவையாகும். அம்மானை, கழற்சி, விளையாடும், சிறுமியர்களும் பெண்களும், அவற்றிற்குரிய பாட்டுகளைப் பாடிக்கொண்டே ஆடுவார்கள். அவர்கள் வாய்கள் பாட, கைகள் கழற்சிக் காய்களை எண்ணிக்கை பிசகாமல் கவனத்துடன் தரையிலிருந்து எண்ணிக்கைக்குத் தகுந் தாற்போல் எடுக்கக் கண்கள் தரையிலேயும், மேலேயும் செல்லும் தாய்க்கழற்சி எனச் சொல்லப்படும் ஒரே ஒரு கழற்சிக் கல்லின் மீதும் மாறிமாறிச் சுழல கவனமாக ஆடிக்கொண்டிருப்பார்கள். கழற்சிப் பாட்டு, ஒன்றிலிருந்து பத்து முடிய ஆடுவதற்கும், அதன் பின் பழம் எடுப்பதற்காகப் பாடப்படும் கடைசிப் பாட்டு முடிய இருக்கும், எண்ணிக்கைக்குத் தகுந்த வார்த்தைகள் அவற்றிற்கு இருக்கும். சிலவற்றிற்கு அர்த்தம் இல்லாமலும் இருக்கலாம். கழற்சிக்காய் ஏழு உண்டு. அவைகளில் ஆறைத்தான் தரையில் போட்டு எண்ணி எடுப்பார்கள். ஒரு காயை ஆடும் காயாக உயரத் தூக்கிப் போட்டு விளையாடுவார்கள் அந்தக்காய் உயர போய்த் திரும்பிவருவதற்குள், கீழே உள்ளவற்றை கைதவற விடாமல் எடுக்கவேண்டும். உதாரணமாக முதல் ஆட்டத்தில் கீழே ஆறு காய்கள் இருக்கும். அவற்றை ஆறுதரமாக ஒவ்வொன்றாக எடுக்கவேண்டும். தாய்க் கழற்சிக்காய் ஆறுதரம் மேலே போய் வரும். அடுத்த ஆட்டம் இரண்டு. இவ்வாறு பத்துமுடிய ஆடுவார்கள். இவற்றால் அவர்களுக்குக் குறிதவறாமல் காய்களைப் பிடிக்கும் பழக்கம் ஏற்படுகிறது. முதன்மையூக்கம் ஏற்படுகிறது. கைகளை உயரத்தூக்கி, கீழே இறக்கி ஆடுவதனால் தேகப்பயிற்சி ஆகிறது. பாட்டுகளைப் பாடும் பொழுது ஒவ்வொரு பழத் திற்கும் அவற்றைப் பாடுவதனால் திருத்தமாகப் பேசும் தன்மை உண்டாகிறது. உச்சரிப்புத் திருந்துகிறது. சொற்களஞ்சிய அபி விருத்தி ஏற்படுகிறது.

(குறிப்புரை—குமாரி டி. மங்கை)

**ஒன்றான் :**

1. ஓரி உலகெல்லாம்
உலகெல்லாம் தண்ணியிலே
தண்ணிக் கரையிலே
தவந்த மணலிலே
முல்லைக் கொடியிலே
பிள்ளைக் கழுகிறான்.

2. ஓரி உலகெல்லாம்
ஒத்தத் துலுக்கெல்லாம்
தூதுத் துலுக்கெல்லாம்
துலுக்கெல்லா பெண்டாட்டி
கடுக்கா மறச்சி
காது நத்தற கடுக்காரி.

3. ஓரி உலகெல்லாம்
உலகெல்லாம் சூரியன்
சூரியன் இருக்க
சுந்தர வல்லிக்கும்
மாயக் கள்ளிக்கும்
காலைக் கலியாணம்.

4. ஓரி ராமன்
ஒருகல்லுத் தேசன்
தேசமெங்கும் தேசன்
கல்லுள்ள தேசன்
காடுள்ள தேசன்
ரான் தந்தி ராசன்.

5. ஓரி உருக் தருவி
உய்யா மணிக் தருவி
தங்கம் தனிக் தருவி
தாயில்லா பூக் தருவி
பூக் தருவி வாசலிலே
பெண் பிறந்தா லாகாதோ?

இரண்டானுக்கு :

1. ஈரி இரிச்சாம் பண்டாரம்
வழ வரிச்சாம் பண்டாரம்
தண்ணி தெளிச்சான் பண்டாரம்
தலை யலைச்சான் பண்டாரம்.

2. ஈரி எரிச்சுக் கோ
என் பேரைச் சொல்லிக்கோ
தாழை அடி யெல்லாம்
தண்ணிப் பந்தல் போட்டுக்கோ.

3. ஈரி ரெண்டு இளவாழைத் தண்டு
மாதா ரெண்டு மல்லிகைப் பூச் செண்டு.

4. ஈரி ரெண்டெடுக்கவே
இலந்தை பழுக்கவே
குழந்தை சமையவே
கொட்டுச் சத்தம் கேட்கவே.

5. ஈரி ரெட்டைக் கோலு
இலை பறிக்கிற வாலு
உப்பளக்கிற நாழி, செப்பு விக்கிற காலி.

6. ஈரி ரெண்டு, எரிக்கலந் தண்டு
தண்டுக்குத் தண்டு, தாமரைப் பூச் செண்டு.

7. இறிக்கி அழுங்கலாம், இலையும் கோலையும் தட்டலாம்
தட்டமட்டும் தட்டலாம் தட்டப்பாரைக்குப் போகலாம்

8. ஈரிரிக்கோ நான் பிறந்தேன்
என்னத்துக்கோ நான் பிறந்தேன்
மலையாளத்து ராசாவுக்கு
மாலையிட நான் பிறந்தேன்.

9. ஈரி ரட்டைக் கோலு, இலை பறிக்கிற மாறு
கூத்துக் கம்பு வேலு; சூரவளிக் காத்து.

## மூணுக்கு :

1. முக்கூட்டு வாணியன் செக்காட
செக்கும் செக்கும் சேந்தாட
வாணிச்சி வந்து வழக்காட
வாணியன் வந்து கூத்தாட

2. முக்கூட்டுத் தக்கட்டு
முருங்கைப் பதினெட்டு
எண்ணிப்பார்த்தா இருபத்தெட்டு.

3. மூவ்வன்று ராவன்று
சாதிப் பிராமணு, சத்திரத்து வெள்ளாளா

4. மூவ்வன்று ராவன்று சந்தியிலே
முத்துராசா பந்தியிலே

5. முக்குட்டுப் பிள்ளை கைலாசம்
போருரையா பரதேசம்.

6. மூவ்வாடி ஆனந்தம்; பாம்பாடும் சக்கரம்.

7. மூவ்வாடி யாத்துல; ராமே சரத்திலே
சீதை வனத்திலே சின்னத் தங்கை வாழ்கிருள்.

8. மூவ்வா மூவ்வா நல்லெண்ணெய்,
மூணுசடக்கு வேப்பெண்ணெய.

*நாலானுக்கு :*

1. நாகம்மாம் தூங்கி வா
நாகர் படந்து வா
போகர் சுருண்டு வா.

2. நாலை வைச்சு ரெண்டெடு
நாராயணன் பேரெடு
பேரைச் சொல்லி பிச்சையெடு.

3. நாங்குத் தட்டான் பந்தடிக்க
நாங்கசொல்லாம் சிலர்படிக்க

4. நாங்குத்தி செங்குத்தி
நவ்வாப் பழங்கொத்தி

5. நான்கு சங்கிலி கூடாரம்
ரயிலடியிலே வியாபாரம்.

6. நான்கம்மா பூமாலை
நடந்து வா சப்பாணி.

7. நாங்குத்தி நல்லம்மா; சோளம்குத்தி சுப்பம்மா.

8. நாங்குத்துள்ளி மாணிக்கம் ; நான்வளர்த்த கிளிக்கூடு.

*ஐந்தானுக்கு :*

1. அஞ்சைக் கொத்தி அறுக்காதே
கொப்பை போட்டுக் குறுக்காதே.

2. ஐவாழைப்பூ தும்பைப்பூ
அவிச் செடுத்தா காளிப்பூ
பொரிச் செடுத்தா உழக்குப் பூ.

3. ஐவாளரக்கி மஞ்சள் ! தெய்வம் குளிக்கும் மஞ்சள்
தீர்த்தக் கரையெல்லாம் பச்சை மஞ்சள்.

4. ஐவாளரக்கி; அரைச்சாக் கதவி
குடிச்சா மருந்து; கொப்பளிச்சாப் பல்லிரு.

5. அஞ்சலங் கொஞ்சலப் பாப்பாத்தி
மஞ்சளரைக்கிற மகராசி.

6. அஞ்சலம் குஞ்சலம்
தம்பி சிதம்பரம்
தங்கச்சி மாப்பிள்ளை வெங்கலம்.

7. அஞ்சிக்குக் நந்தாசி; அரியரியாப் பொன்னாசி.

*ஆறுனுக்கு :*

1. ஆறுங் குறு குறு (சோறும் பதம் பதம் அல்லது) அள்ளிப் போட்ட வேக்குரு.

2. ஆத்தூரு மல்லி; தோப் பெல்லாம் கன்னி,

3. ஆரம்மா நீதி; ஆகாசப்பூமி
பார்க்க வந்தாப் பாவி.

4. ஆறுங் குரு நாதரே; சேதி சொல்ல வந்தவரே.

5. ஆறுங் குருந்தட்டி; வாழைப் பூ செந்தட்டி.

6. ஆக்கூரத்தா வாசலிலே.
பாக்குமரம் நட்டி வச்சி
பத்தா காத்துப் பட்டுப் போச்சி.

7. ஆரங்க நாயினு கூட்டுக் குள்ளே
அல்லிய நாயினு கூட்டுக் குள்ளே
துள்ளி விழுமாம் துளுக்கப் பிள்ளை

8. ஆக் கூரடித்தட்டு : சோளப் பொரித்தட்டு.

ஏழானுக்கு :

1. ஏழெங்கும் பெண்ணே சீரகம்
என்ன தாளி தாளிச்ச
தாளியெல்லாம் தக்காளி
தாளிச்சுக் கொட்டுற நெய் தாளி.

2. ஏழண்ணு எங்கண்ணு
எழுத்தாணி எங்கண்ணு
குருத்தோலை வாசிப்பான்

3. ஏழெழுத்தாம் கண்ணடி
என் னெழுத்தார் கண்ணடி
குத்திக் குத்திப் பார்த்தாலும்
குத்தாலத்திலே சிட்டெழுதி.

4. ஏழும் பாழும் நாந்துறு
என்னைக் கொஞ்சம் தூத்துறு
தூத்தமட்டும் தூத்துறு
தூத்துக் குடிக் கப்பாலே.

5. ஏழுங்கப் பெண்ணை
எடுப்பார் வீட்டுக் கணைணை
கண்ணுக்குக் கண்ணே
கருவேப்பிலைக் கண்ணே.

6. ஏழெங்கும் புகழு. இது என்ன புகழு.
கல்யாண வாசலிலே
கண்டெடுத்த புகழு.

7. ஏழுங்க நயினர் வாழையிலே
எங்க நயினர் வாழையிலே

வாழைப்பூச் சோலையிலே
வாழுகிறாள் என் தங்கை.

8. ஏரெங்கும் சீனிப்பூ. இரு கரையும் முல்லைப் பூ
கோதி முடிப்பார்க்கு; கொண்டை யெல்லாம் தாழம்பூ.

எட்டானுக்கு :

1. சென்னை பம்பாய் கல்கத்தா
செவிட்டில் ரெண்டு கொடுக்கட்டா
திருச்சி, பம்பாய் கல்கத்தா
திரும்பி ரெண்டு கொடுக்கட்டா.

2. எட்டாலே சிங்கர், பொன்னாலே சந்தி,
பூப்பறிக்கிற நெத்தி.

3. எட்டிடம்மா பிட்டுடு
பிட்டைக் கலைந்து
பிட்டுக்குத் தக்கன நெய்யூத்து.

4. எட்டுக்கு பொட்டு கோதுமை எட்டு
(ஜிலேபித் தட்டு)

5. எட்டுத் தட்டும் நடைபிடிக்க.
கம்பந்தட்டை கலகலங்க !

6. எட்டு இடைக்கட்டு,
ராசன் தலைக்கட்டு.
ராசாத்தி பூக்கட்டு.

7. எட்டுத் தட்டுற கூட்டம்.
கழங்கிவரும் ரோட்டர்.
கவர்ச்சித்திப் பாட்டம்

8. எட்டாசினம் பட்டேன்
வெள்ளிக் கொலுசிட்டேன்.
விதவிதமாச் சிரிட்டேன்.

9. சிட்டாச் சிமிட்டாசி,
ஏகப் பிரட்டாசி.

10. எட்டாசி நீப்பிடிக்க
பரத்தாசி மாத்தள்ள
கொள்ளிக் கட்டை நீத்தள்ள.

*ஒன்பதானுக்கு :*

1. ஒன்பதம்மா கைதட்டு
ஓலைப்பாயை ரோராட்டு

2. ஒம்பந்தியம்மா; சம்பந்தித் தாயே.

3. ஒன்பதும் ஒரு கல்
ஓரைப் படிக்கல்.
சம்பா சரிக்கல்.

4. ஒன்பது மாங்காய் தலைமாங்காய்
ஓசைப்படுமாம் தோசைக் கல்லு

5. ஒன்பதும் சம்பா சந்தனக் தும்பா
சமைச்சு வைச்சா திம்பா

6. ஒன்பதுங் கம்பளம்
கொட்டிப் பாத்தா வெங்கலம்
தட்டிப்பாத்தா பித்தளை.

7. ஒன்பது ஒரு அடி! ஊர்ப்பயணம் போரா;

*பத்தானுக்கு :*

பத்துக்குச் சித்திரை வேண்டப்பா.
பயறுவிக்கிற பண்டப்பா.
வேணுமின்னு வாங்கிக்கோ
வேண்டாமின்னு தாரப்போ

2. பதி பதி நிலைமை
பதிஞ்சுக்கோ நிலைமை
செம்புக வனமே.
சொமித் தாயே.

3. பத்துக்குச் சித்திரை வெள்ளப்பா.
பயறுவிக்கிற பண்டப்பா.
தோசை விக்கிற வெண்டப்பா.
தோந்தி வயித்திலே போடப்பா.

4. பத்துக்குச் சித்திரை.
பாண்டிக்குப் பாவாடை.
தேருக்குத் திப்பெட்டி.
தெய்வானை

5. பத்தயவதி அம்மாளுக்கும்.
பாக்குமரச் சல்லிக்கும்
வீரபத்திரக் காளிக்கும்.
வெள்ளியினாலே கோலாட்டு.

6. பத்துக்குச் சித்திரை
பணமுள்ள கொப்பரை
ஒயக்கணக்கரை
ஒண்ணு ரெண்டுஞ் சொல்லாதே.
உருந்தமாவு சக்கரை.

7. பதிபதி லோலா. பணம்பெத்த லோலா.
லெக்குப் பெத்த லோலா : பாலோசிச் சோலா.

8. பத்திட்டேன் மங்கா.
பறிச்சிட்டேன் தேங்கா.
எண்ணிவிட்டேன் மாங்கா.
இருபத்தொரு தேங்காய்.

9. பத்தரை மாம்பழம் தண்ணியிலே.
பதிஞ்ச மாம்பழம் வெண்ணியிலே.
சீதை வளத் தோப்பிலே.
சின்னத் தங்கை வாழுகிறாள்.

10. பந்தே பதிக்கிற ராசா.
பாலுண்டும் தாயாரே.
மோருக் கழுகிறாள்.
முட்டிமுட்டிச் சாகிறாள்.
தயிருக்கழுகிறாள்; தண்டமானம் போடுறா.
கோலமானத் தெருவிலே, கொண்டுவந்து விக்கிது.
வாங்கப் பணமிருந்த, வச்சுடுந்தப் பிள்ளை இல்லை.

11. பந்தே பதிபதி பயத்தை நெறி நெறி.
சொக்கலிங்க நாதருக்கு; சோளப் பொரி, பொரி.

12. பந்துள்ள என் தம்பி
பணமுள்ள என் தம்பி.
காசுள்ள என் தம்பி.
கடற்கரையெல்லாம் பொன்னெடுத்து.
திருப்பதிக்கு ஆளுவிட்டு.

## 12. பத்து முடிந்து பழம் வைக்கும் போது:—

1. அக்கா அக்கா பாவாடை.
எங்க வந்து விக்கிது.
கோலமலைத் தெருவிலே.
கொண்டு வந்து விக்கிது
வாங்கப் பணமிருந்து.
வச்சுடுத்தப் பிள்ளை இல்லை.

2. கட்டக் கட்ட டேசுவா.
காரக்கட்ட டேசுவா.
நித்தம் துளிச்சிவா.
நீலப் பொட்டுடுத்திவா.
யாரார் மேலே! என் தோழி மேலே.
ஊதாச்சி மேலே! உதித்ததொரு கட்டை.

3. கட்டும் முட்டும் காலேடு.
காவேரி தூரப்போ.
வில்லோரு கட்டை
வீரரோரு சுள்ளி.
வெற்றிலை நாக்கு.
சித்திரைப் போக்கு.
சிவனோட வாக்கு.

4. கட்டை ஒன்னு நான் வச்சேன்.
கார முள்ளுப் போலே.
யாராரு மேலே.
என்தோழி மேலே.
பூந்நாசி மேலே; புதைச்சேன் ஒரு கட்டை.

**கழங்கு ஆட்டம்:** பண்டைக் காலத்தில் குறி சொல்வதற்குப் பயன்பட்டது. வாழ்க்கையில் இடையூறு கண்டவர்கள் குறி சொல்லும் வேலனிடம் சென்று "எதனால் இடையூறு வந்தது?" என்று கேட்பார்கள். அவன் கழங்கு வைத்து "முருகன் குற்றம்" என்று கூறுவான். பிறகு வெறியாடுவான்.

"மதுரைக் காஞ்சி உரையில் இச்செய்தி கூறப்படுகிறது. வேலன் இவ்விடுக்கண் முருகனால் வந்ததெனத் தான் கூறிய சொல்லின் கண்ணே கேட்போரை வளைத்துக்கொண்டு" (அடி 611 உரை.)

"கழங்கு வைத்துப் பிள்ளையாரால் வந்ததென முற்கூறிப் பின் வெறியாடுபவன் என்று ஆடு முறைமை கூறிற்று." பிள்ளையார் என்பது முருகக் கடவுளை. (நச்சினார்க்கினியர்)

குறிஞ்சிப் பாட்டு உரையிலும், வேலன் குறி கூறுதலை, "அகன்ற இடத்தையுடைய ஊரிடத்துக் கட்டினாலும், கழங்கினாலும், எண்ணி, அறிவாரை வினவி, அவர் தெய்வத்தால் வந்த வருத்தம்," என்பது கூறப்படுகிறது. (நச்சினார்க்கினியர்)

கட்டு=நெல்லில் பார்க்கும் ஒருவகைக் குறி.

கழங்கு=ஒருவகைக் காய்.

வேலனது கழங்காட்டத்தைப் பின்பற்றிக் கழங்கை பண்டை மகளிர் விளையாட்டாக ஆடினார்கள். பெரும் பாணாற்றுப் படையில் செல்வச் சிறப்புடைய மகளிர் பொன்னால் செய்த கழங்கை கடற்கரை மணலில் இருந்து ஆடினார்கள் என்று கூறுகிறது.

"முத்த வார் மணல் பொற்கழங்காடும்
பட்டின மங்கை" (பெரும்பாணாற்றுப் படை 335, 336)

கழங்காடும் பொழுது பாடும் பாட்டு அம்மானை வரி எனப்படும். பண்டைக் காலத் தமிழ் மகளிர் எப்பாடல்கள் பாடிக் கழங்காடினார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் பிற்காலத்தில் கேள்வியும், பதிலுமாக வரும் பாட்டை அம்மன் பெயரைச் சொல்லி ஆடுவார்கள். பெண்களது இடுக்கண்களைப் போக்குபவள் அம்மன்தான். அப்பாட்டில் நாட்டு வாழ்த்தும் மன்னன் வாழ்த்தும் காணப்படும். உதாரணமாக, சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் அம்மானை வரியைக் கூறலாம்.

புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவில் உடம்பரிந்த, கொற்றவன் யாரம்மானை!
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன் வந்த
கறவை முறைசெய்த காவலன் காணம்மானை!
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை!

ஆடலோடும், பாடலோடும் இணைந்திருந்த அம்மானைவரி, மாணிக்கவாசகரால் கடவுள் வாழ்த்தாகப் பயன்படுத்தப்படுகிறது. அவர் பாடிய அம்மானைப் பத்து வினாவிடை வடிவத்தில் இல்லை. பெயருக்கு அம்மன் ஈற்றடியில் அம்மானாய் என்று வந்தாலும், அச்சொல் முன்னிலையாக மட்டும் இருக்கிறது. வாழ்த்து சிவபெருமானுக்கே கூறப்படுகிறது. மகளிர் விளையாட்டிலும் கடவுள் வாழ்த்தைப் புகுத்துகிறார் மாணிக்க வாசகர்.

கீழ்க்கண்ட திருவம்மானைப் பாட்டு உதாரணமாகத் தரப்படுகிறது.

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணும் பெருந்துறையிற்
கண்ணார் கழல் காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

இன்றைய நாட்டுப் பாடலில் ஆட்டத்திற்கு ஏற்ற பாடல் இருக்கிறது. அம்மன் வணக்கம் இருக்கிறது. பொருளற்ற பல சொற்களும் இருக்கின்றன.

## 11. சடுகுடு

இது தமிழ்நாட்டு குழு விளையாட்டுகளில் ஒன்று. குழந்தைகளும், பெரியவர்களும் கிராமங்களில் ஆடுவார்கள். இவ்விளையாட்டில் மூச்சுப்பிடித்துக் 'குடுகுடு' என்று சொல்லிக்கொண்டே ஒரு குழுவைச் சேர்ந்த ஒருவன் உப்பைத் தாண்டிப்போவான். எதிர்க்குழுவில் உள்ளவர்களைத் தொடுவான். அவர்கள் அவனைக் கட்டிப்பிடிப்பார்கள். அதை மீறிக்கொண்டு உப்பைத்தொட வேண்டும். இவ்வாறு மூச்சுப்பிடிப்பதற்குப் பாட்டுப்பாடிக் கொண்டே ஓடுவார்கள். அத்தகைய பாடல்களுள் ஒன்றே கீழ் வருவது. சில பாடல்கள் தன் வீரத்தைப் பேசுவதாக உள்ளன. சில வேடிக்கைப் பாடல்களாக உள்ளன. சில வெறும் சந்தம் இசைந்தனவாக உள்ளன. இதுபோலவே 'கிளியந்தட்டு' என்றது பாடப்படும் பாடல்களும் உண்டு.

### சடுகுடு

வேன். சாரக்கத்தி வீசுவேன்.
என் தரத்துப் பிள்ளைகளைத் தூக்கித் தூக்கி வீசுவேன்.

2. எரிக்கலம் பழுப்பே, உனக்கென்ன முப்பே (கொழுப்பு)
ஏறி மிதிச்சாத் தெரிச்சில்ல கோவே— (தெரிச்சில்ல)

3. ஈக்கி ஈக்கி சோளத்தட்டை இந்திரவாளச் சோளத்தட்டை
பனைத்துக்கு ரெண்டுகட்டு ; முகட்டை வரிஞ்சிகட்டு.
முத்தையா பிள்ளை. முத்தையா பிள்ளை

4. கருத்தக் குதிரை ரேடியோ
கால் ரெண்டும் பந்தயம்
செருப்பு தைக்கிற மாணிக்கம்
சேர்ந்து வாடா மல்லுக்கு

5. ஊசி உடைஞ்சிச்சி ; ஊரப்போட்ட நெல்லுச்சி
பாசி, பவளம், பன்னீர்ச் சொம்பு.

6. ஈந்து எலும்பிச்சு.
சந்தனக் குடாச்சி.

7. நடுநடுமலையிலே ரெண்டானை.
தவறி விழுந்தது கிழட்டானை.
தூக்கி விட்டது நான் தானே. (நான் தானே)

8. என் மாடு எருமைமாடு
இரும்புச் சங்கிலி போட்ட மாடு.
காத்தடிச்சாக் கலகலங்கும்.
கம்பளி போட்டா மினுமினுங்கும்.

9. சல்லிரெண்பது சாட்டையென்பது
வேல்பருத்தி வெங்காயம் ; வெட்டிப்பாத்தாச் சாராயம்

10. அருப்புக் கோட்டையிலே—உங்கப்பன்
செருப்புத் தைக்கயிலே
காணும் இல்லாட்டா-உங்கப்பன்
காறிப்போவானே.

11. கித்துக் கித்தடா ; கீரைத் தண்டடா
நட்டு வச்சண்டா ; பட்டுப் போச்சுடா (போச்சுடா

12. ஈக்கி ஈக்கி சோளத் தட்டை
இந்திரவாளச் சோளத் தட்டை
பணத்துக்கு ரெண்டு கட்டு
அப்பா சுடகொழுத்து
எப்பக் கலியாணம்
காடு விளையவிட்டு
கண்டாங்கி நெய்யவிட்டு
சிறுக்கி சமையவிட்டு
சித்திரை மாதம் கலியாணம்.

## 12. கண்ணாமூச்சி

சிறு குழந்தைகள் தேடிப்பிடித்து விளையாடுவதில் மிகுந்த உற்சாகம் காட்டுவார்கள். இவ்விளையாட்டில் புலனுணர்வு வளரவும், பிறரை ஆராயும் திறன் வளரவும் இடமுண்டு. கண்ணை மூடிக்கொண்டிருக்கும் போது ஒரு பாட்டும், ஒளிந்தவர்களைக் கண்டுபிடித்தால் ஒரு பாட்டும் பாடுவார்கள். அவை வருமாறு.

கண்ணாமூச்சி டே, டே
காட்டுமூச்சி டே, டே
உனக்கொரு பழம் எனக்கொரு பழம்
கொண்டு வா
தேனு, பேனு, தெந்திருப்பேனு
அப்புச்சி, குப்புச்சி
ஆரு புடிச்சா ?

(என் தாயார் பாடக்கேட்டு எழுதியது)

# இரண்டாம் பகுதி

## உழைப்பும் தொழிலும்


1. கீரை விதைக்கலாம் வா
2. தொழிலின் சிறப்பு
3. வீட்டுக்கொரு தீ வெளிச்சம்
4. கூட நாழி போடுங்கள்
5. அதிகாரி
6. முதலாளி மனம்
7. இறங்கலையோ உங்கமனம்
8. கொடுமைக்காரி
9. பொதி வண்டிக்காரன்.
10. கங்காணி.
11. புதுவேலை
12. அறுவடைப் பாட்டு—2
13. கையாலே பாடுபட்டேன்
14. மனைவியின் புத்திம
15. காளைக்கு கால் ©
16. மாட்டுக்காரன்
17. உழவன்
18. வண்டிக்காரன்
19. கணக்கெழுதும் மச்
20. மில் வேலை
21. நடவுப்பாட்டு

# 1. கீரை விதைக்கலாம் வா

மனைவி உழைப்பாளி. கணவன் சோம்பேறி. மனைவி உழைத்துப்போட விட்டிலுட்கார்ந்து தின்பதில் அவனுக்கு வெட்கமேதுவும் இல்லை. அவள் படிப்படியாக அவனை உழைப் பாளியாக்க முயலுகிறாள். அவன் சாக்குப் போக்குச் சொல்லி உழைக்க மறுக்கிறான். அவள் ஒரு நாள் வீட்டுக்கு முன்னால் கீரைத் தோட்டம்போட அவனை எழுப்புகிறாள். அவன் "கீரை விதையைக் கோழி கிண்டிவிடும், அதனால் பயன் இல்லை", என்று சொல்கிறான். அவள் கோழி வராமல் தடுக்க வழி சொல்லுகிறாள். அவள் பேசப் பேச, அவனும் பதிலுக்குப் பதில் சாக்குப் போக்கு களைக் கூறுகிறான். அவளும் விடுவதாயில்லை. கடைசியில் வேலை செய்தால் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுவதாக அவள் சொல்லுகிறாள். அவன் மனம் மாறுகிறான், இந்த ரசமான உரையாடலே இப்பாடல்.

## கீரை விதைச்

மனைவி : கீரை விதைக்க
வாங்க மச்சான்

கணவன் : கீரை விதைச்சா
நாள் வல்லேடி

மனைவி : கோழி கிண்டினு
வாங்க மச்சான்

*கணவன் :* வேலி பிடிச்சா ஆடு திங்கும்
நான் வல்லேடி நீ போ!

*மனைவி :* ஆடு தின்னா பிடிச்சடைப்போம்
வாங்க மச்சான் வாங்க!

*கணவன் :* பிடிச்சடைச்சா தெண்டங் குடுக்கணும்
நான் வல்லேடி நீ போ!

*மனைவி :* தெண்டம் போட்டா உழைச்சுக் குடுப்போம்
வாங்க மச்சான் வாங்க!

*கணவன் :* உடம்புழைச்சா மேல் வலிக்கும்
நான் வல்லேடி நீ போ!

*மனைவி :* மேல் வலிச்சா வெந்நீர் தாரேன்
வாங்க மச்சான் வாங்க!

*கணவன் :* வெந்நீர் விட்டா உடல் வியர்க்கும்
நான் வல்லேடி நீ போ!

*மனைவி :* உடல் வியர்த்தா விசிறி தாரேன்
வாங்க மச்சான் வாங்க!

*கணவன் :* விசிறி தந்தா உடல் குளிரும்
நான் வல்லேடி நீ போ!

*மனைவி :* உடல் குளிர்ந்தா பிடிச்சு விடுறேன்
வாங்க மச்சான் வாங்க!

*வன் :* புடிக்க வேண்டாம் சும்மாக் கிடக்கேன்
நான் வல்லேடி நீ போ!

*வி :* வேலை செய்தா தூக்கி சுமப்பேன்
வாங்க மச்சான் வாங்க!

கணவன் : நாங்கள் நடந்தா ஊர் சிரிக்கும்
வாடி புள்ளே வாடி;
நிரை விதைக்கலாம் நிரை விதைக்கலாம்
வாடி புள்ளே வாடி!

இருவரும்: நிரை விதைக்கலாம் நிரை விதைக்கலாம்
வாங்க மச்சான் வாங்க;
வாடி புள்ளே வாடி!

[குறிப்பு :—இப்பாடல் திருநெல்வேலியை அடுத்துள்ள சிற்றூர்களில் பள்ளர் குடிகளில் பாடப்பட்டு வந்தது. சேகரித்தவர்: டாக்டர் பி. ஆர். சந்திரன், கொக்கிரகுளம்.]

## 2. தொழிலின் சிறப்பு

பெரிய மருதுவைப் பற்றிப் பல நாடோடிப் பாடல்கள் சிவகங்கை வட்டாரத்தில் வழங்கி வருகின்றன. இப்பாடலைப் பற்றி ஒரு கதை வழங்கி வருகிறது. பெரிய மருது சிவகங்கைக் கோவிலுக்கு தேர் ஒன்று செய்து வைத்தார். தேர்த் திருவிழாவன்று அரசர்தான் முதலில் வடத்தைத் தொடவேண்டும். அரசர் தேர் வடத்தைத் தொட்ட பின்பு மக்கள் வடம் பிடித்து இழுத்தார்கள். தேர் நிலையிலிருந்து நகரவில்லை. அப்பொழுது தேரைச் செய்த தச்சர் குப்பமுத்துஆசாரி மருதுவைப் பார்த்து "இன்று நான் தேர்வடம் தொட்டால்தான் தேரோடும்" என்று சொன்னார். மருது அதற்கிணங்கி அவருக்கு ராஜ மரியாதைகள் செய்து தேர் வடம் தூக்கச் சொன்னாராம். அதன் பின் தேர் நிலையை விட்டு நகர்ந்ததாம். இப்பாடல் குப்பமுத்து 'ஆசாரியின் கூற்றாக அமைந்துள்ளது.

மருது வந்தாலும் ஓடாது
மச்சினன் வந்தாலும் ஓடாது
தேரைச் செய்தவன் குப்பமுத்தாசாரி
தேர்வடம் தொட்டால்தான் தேரோடும்.

[மருதிருவர் என்ற நூலில் என். சஞ்சீவி அவர்கள் வெளியிட்டிருப்பது ]

## 3. நெட்டுக்கொரு தீ வெளிச்சம்

*அணைக்கட்டு கட்டி முடிப்பதற்கு முன் ஒரு சிறு கிராமமாக இருந்தது இவ்வூர். அணைக்கட்டு ஏற்பட்டு மின்சார உற்பத்தி தொடங்கியது. சிறிது தூரத்திற்கொரு கம்பத்தில் விளக்கெரிய ஆரம்பித்தது. ஊரும் பெரிய ஊர் ஆயிற்று. இந்த மாறுதலைத் தன் ஆயுட் காலத்திலேயே கண்ட அக்கிராமவாசியின் எண்ணத்தை இப்பாடல் வர்ணிக்கிறது. மனிதன் உழைப்பினால் ஊர் மாறும் அதிசயத்தை கிராமவாசி கூறுகிறான்.*

**பத்துத் தெரு பாளையாரர்**
**பாழடைஞ்ச தாவாரம்**
**எட்டுத் தெரு லோயர் காம்பு!**
**நெட்டுக் கொரு தீ வெளிச்சம்!**

*[சேகரித்தவர்:—போத்தையா. அவருடைய நண்பரொருவர் பைகாரா லோயர் காம்பிலிருந்து பாடக்கேட்டு எழுதியனுப்பியது.]*

## 4. கூட நாழி போடுங்கள்

*செழிப்பான புன்செய் நிலத்திலே ஒரு உழவன் ஏர் பூட்டி உழுகிறான். நிலம் செழிப்பானது. ஆனாலும் மனிதன் உழைப்பு இல்லாமல் புன்செய் விளையுமா? உழுகிறவனுக்கோ நிலம் சொந்தமில்லை. உழுகிறவனுக்கு வயிறு நிறையக் கஞ்சியாவது கிடைக்க வேண்டாமா? வயலை உழுதுவிட்டு வந்து அவன் ஒரு நாழி கொத்து அதிகம் கேட்கிறான். பதிலென்ன கிடைக்கும்? நமக்குத் தெரியாதா?*

**வெயிலும் அடிக்குதில்லே**
**வேளையைப் போல் தோற்றுதில்லே**
**தண்ணி தவிக்குதில்லே**
**தருமராஜா புஞ்சையிலே!**

எட்டேடு கட்டி உழுது
இடைநாசு போட்டு உழுது
வட்டங்க சேர்ந்து உழுது
மகராஜன் பண்ணையிலே!

களை எடுக்கும் கர்மாப் புஞ்செய்
களைத்துப் பார்க்கும் வேப்பமரம்
கொத்தளக்கர் பொன்னுசாமி
கூட நாழி போடுங்களேன்!

சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

உழுது—உழுகிறது. வட்டங்க—இளவட்டம், வாலிபர்]

## 5. அதிகாரி

கிராமத்திலே பெரிய அதிகாரி கிராம முன்சீப்தான். அவருக்கு ஊரிலே செல்வாக்கும் மதிப்பும் இருக்கும். அவருடைய மனைவி அவரைப்பற்றிப் பெருமை பேசிக் கொள்ளுவாள். அவருடைய மனைவி கருத்தாக வரும் பாடல் இது.

அரைக்கை சட்டைகளாம்
அதிகாரி வேலைகளாம்
சிலங்கெடுத்த முறுக்குத் தடி
சிதறிபாய நான் கண்டேன்.

துரவலும் சங்கிலியும்
துறைமுகத்தார் கைகடக்தார்
இருசால் பணம் செலுத்தி
எந்த வழி வாரார்களோ!

வேட்டி வெள்ளை நயமாம்
வெளுத்த வண்ணான் கை நயமாம்
சல்லா வெள்ளை நயமாம்
சாமி கட்டும் துப்புரவாம்

பட்டாவும் கையெடுத்து
பரளச்சிப் பாதைக்கு
இருசால் பணம் செலுத்தி
இப்போ வருது சாமி வம்பு.

பஞ்சாயம் பேசுங் கிளி
பைசல்கள் தீர்க்குங் கிளி
என்னைத் தேட்டப் பாரைக் கிளி
எப்போ வரும் இந்த வழி?

குஞ்சம் வைச்சு சேர்ந்து கட்டி
கூட்டத்திலே போயிருப்பார்
கண்டா வரச் சொல்லுங்க
காப்பித் தண்ணி ஆறுதுங்க.

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

*[கிளி என்பது கிராம அதிகாரியைக் குறிக்கிறது; துரவல்—திறவுகோல் (நெல்லை வட்டார வழக்கு); இருசால்—கிஸ்திப் பணம்; துறைமுகம்—துரைத்தனம்; சர்க்கார் என்பதற்குப் பதில் வந்தது—தவறாகச் சொல்லப்பட்டது.]*

## 6. முதலாளி மனம்

*எவ்வளவு வேலை செய்தாலும் கிலச்சுவானுக்குத் திருப்தி ஏற்படுவதே இல்லை. அவரது மனப்போக்கை ஓர் உருவகத்தால் விளக்குகிறான். விவசாயத் தொழிலாளி ஏழு வண்டிப் பாரத்தை ஒரு வண்டியில் ஏற்றிவிட்டு மாடு இழுக்கவில்லையே என்று கவலைப்பட்டாலும் ஒரு வண்டிக்காரன். அவனைப் போலவே ஏழு பேர் செய்ய வேண்டிய வேலையை ஒருவனைக் கொண்டே செய்யச்சொல்லுகிறான் கிலச்சுவான்; தொழிலாளி அவ்வேலையைச் செய்ய முடியாத போது அவர் அவனைச் சோம்பேறி என்று திட்டுகிறார். ஒருவாறாகச் செய்து முடித்தாலும் அவனுக்குக் கூலி ஒழுங்காகக் கொடுப்பதில்லை. குறைந்த அளவுள்ள பொட்டை நாழியினால் கூலி அளந்து கொடுப்பார். இந்த அநியாயத்தை எதிர்த்து*

விவசாயத் தொழிலாளர்கள் எழுப்பும் குரலாக ஒலிக்கிறது இப் பாடல்.

எருக்கசாங் கட்டை வெட்டி
ஏழு வண்டிப் பார மேத்தி
மாடு இழுக்கலேன்னு
மாயுறாரே நம்ம சாமி!

முக்காப்படி கேப்பைக்காக
முந்த நந்து வாடுறனோ;
ஐயா முதலாளி—நீங்க
அளக்கறது மோசடி நாழி!

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 7. இரங்கலையோ உங்க மனம்

பெரிய முதலாளி வீட்டில் பண்ணை வேலை பார்க்கிறான் கறுப்பன். அறுவடை காலத்தில் வேலை அதிகம். நேரம் காலம் என்று கிடையாது. சேவல் கூவுமுன் எழுந்து காகம் அடையும் போது கூட வேலை முடிவதில்லை. கிடைக்கும் கூலியோ கஞ்சிக்கும் காணாது. கேட்பதென்றாலோ முதலாளிக்குக் கோபம் வந்துவிடக் கூடாது. வேலையில்லாமல் விவசாயக் கூலிகள் மலிந்திருக்குங் காலத்தில், அவர் வேலையை விட்டுப் போகச் சொல்லிவிட்டால் அவன் என்ன செய்வான்? முதலாளிக்குக் கோபமும் வரக்கூடாது. வயிற்றுப் பசியைத் தணிக்கக் கூலியும் கேட்க வேண்டும். தயங்கித் தயங்கிப் பேச்சை ஆரம்பிக்கிறான் கறுப்பன். அவர் மனம் குளிர அவர் பெருமைகளைப் போற்றுகிறான். பிறகு சொல்ல வந்ததையும் சொல்லி விடுகிறான். அவனது அச்சத்தையும் மீறிக் கொண்டு உரிமைக் குரல் பணிவாக எழுவதை இப்பாடலில் கேட்கிறோம்.

வீடு ரெண்டுங் காரவீடு
வேட்டி ரெண்டும் வெள்ளை வேட்டி
இரக்கமுள்ள புண்ணியர்க்கு
பிறக்கிறது ஆண் குழந்தை!

சம்பளமும் கட்டுநில்லே
சாதியுள்ள மாணிக்கமே
எங்க இரக்கம் பார்த்து
ஏத்த கூலி போடுமையா !

பொழுது அடைஞ்சிருச்சே
பூமரமும் சாஞ்சிருச்சே
இன்னும் இரங்கலையோ
எசமானே உங்க மனம்.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 8. கொடுமைக்காரி

இப்பருத்தி விளையின் சொந்தக்காரி வெள்ளைத்தாய். அவள் வயலில் வேலை செய்யும் கூலிக்காரப் பெண்கள் பருத்தியை மடியில் கட்டிக் கொண்டு வயல் நடுவிற்கு வருகிறார்கள். அங்கே தாங்கள் பறித்த பருத்தியைக் கொட்டிவிட்டுத் தங்கள் கூலிக்காகக் காத்திருக்கிறார்கள். வெள்ளைத்தாய் இன்னும் திரும்பவில்லை. அவள் பருத்தி எடையைக் குறைவாக மதிப்பிட்டுக் கூலியைக் குறைப்பது வழக்கம். அவள் அங்கு இல்லையல்லவா ? அவள் காதில் விழாமல் அவளைப் பற்றிப் பெண்கள் பேசிக்கொள்கிறார்கள்.

பருத்தி எடுத்தாச்சு ;
பக்கம் மடி போட்டாச்சு !
கொடுமைக்கார வெள்ளைத் தாயை
கூறுவைக்கக் கூப்பிடுங்க.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 9. பொதி வண்டிக்காரன்

கரிசல் காட்டு உழவர்களுக்குப் பருத்திதான் வாழ்வு. ஆனால் பருத்தி விலையைத் தூத்துக்குடி வெள்ளைக்காரர்கள்தான் நிர்ணயிக்கிறார்கள். குறைந்த விலையில் பருத்தியை அவர்கள் வாங்குகிறார்கள். ஆயினும் பருத்தி கையில் கிடைத்தவுடன் வெள்ளிக்

காசைப் பார்க்க அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. பருத்தியைப் பொதிகட்டித் தூத்துக்குடிக்கு வண்டியேற்றி கொண்டு செல்லும் பொழுது மகிழ்ச்சியோடு அவர்கள் பாடிக்கொண்டு செல்கிறார்கள். இதுவே வண்டிக்காரன் பாட்டு.

வண்டியிலே பஞ்சுப் பொதி
வலது கையில் சாட்டைக் கம்பு,
இந்நேரம் போற வண்டி
எங்க போயி தங்குதையா !

தங்குவது தருவைக் குளம்
தள்ளுவதும் தூத்துக்குடி
வாங்குறதும் வெள்ளைக்காரன்
சுண்டுறது வெள்ளிரூபா
முடியறதும் சிட்டைத்துண்டு

மாடு ரெண்டும் மதுரை வெள்ளை
மணிகள் ரெண்டும் திருநெல்வேலி
குப்பி ரெண்டும் கும்பகோணம்
குலுங்குதம்மா சாலைப்பாதை.

[பாடலைச் சேகரித்து அளித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

[கடைசி நான்கடிகள் திருநெல்வேலி ஜில்லாவில் பல சிற்றூர்களில் பாடப்படுகின்றன. முதல் எட்டடிகள் கோவில்பட்டி வட்டாரத்துக்குரியது. ஏனெனில் பருத்தி விளைவதும், தூத்துக்குடிக்குக்கொண்டு செல்லுவதும் கோவில்பட்டி வட்டாரத்தில்தான்.]

## 10. சொல்லுறனே கங்காணி

கோவில்பட்டித் தாலுகா வறண்ட பிரதேசம்; சில காலங்களில் ஐந்தாறு ஆண்டுகள் மழையின்றிப் போய்விடும். புன்செய்ப் பயிர் இல்லாத காலத்தில் உழவர்களுக்கு வேலையிராது. கூலியும் கிடைக்காது. இவ்வாறு பட்டினி கிடக்கும் உழவர் குடும்பப் பெண்கள் எங்கு வேலை கிடைத்தாலும் போகத் தயாராயிருப்பார்கள். அப்பொழுது தேயிலைத் தோட்டத்துக் கங்காணிகள் கோயில்

பட்டிப் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு வந்து அவர்களிடம் நல்ல கூலி கிடைக்குமென்று ஆசைகாட்டி அவர்களைத் தேயிலைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். மலைக்குப் போன பிறகுதான் அவர்களுக்கு வேலையின் கடுமை தெரியும். ஊரை நினைத்துப் பெருமூச்சு விடுவார்கள். ஊரில் வேலை இல்லாதபோது ஊருக்குத் திரும்புவது முடியாத காரியம். அவர்கள் வருந்திக் கண்ணீர் சொரிவார்கள். அவர்களது கண்ணீரில் தோய்ந்த பாடலே இது.

கொல்லையிலே பூவிருக்க
கொண்டுவந்த கங்காணி;
கொந்தரப்பு வேலையிலே
கொல்லுறானே கங்காணி!

ஏல மலைக்கு போனேன்;
ஏழெட்டு நாள் வேலை பார்த்தேன்;
ஊரை நினைக்கையிலே
உருகுதைய்யா எம் மனசு.

ஏலமலையும் கண்டேன்;
ஏலமலைத் தோட்டம் கண்டேன்;
பாவிப்பய பஞ்சம் வந்து
பண்ணைப்புறம் கோம்பை கண்டேன்.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

['கரும்புத் தோட்டத்திலே' என்ற பாரதியின் பாட்டை இப்பாடல் நினைவூட்டுகிறது. பாரதியும் கோவில்பட்டித் தாலுகாவில் எட்டையபுரத்தில் பிறந்தவர் என்பதை நினைவில் கொண்டால் அவர்காலத்திலும் புன்செய்நில உழவர்கள் பிழைப்பின்றி அக்கரைச் சீமைகளுக்குச் சென்றதைக் கண்டே அவர் உளம் வெதும்பி அப்பாடலைப் பாடியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இன்றும் இப்பாடல்கள் கோம்பை, குமிழி, பீர்மேடு முதலிய மலைத் தோட்டங்களிலும், கோவில்பட்டிச் சிற்றூர்களிலும் காற்றில் மிதந்துவரக் கேட்கலாம்.

## 11 புது வேலை

புன்செய் நிலக் கிராமமொன்றில் பிறந்தவள் ஒருத்தி, நன்செய் நில ஊரொன்றில் வாழ்க்கைப்பட்டாள். அவள் பருத்தி பிடுங்கவும், புன்செய்ப் பயிர்த் தொழில்களிலும் பழக்கப்பட்டவள். நெல்பயிர் தொழிலை அவள் அறியாள். புதிய வேலைகளைக் கற்றுக்கொள்ள அவள் முயலுகிறாள். அம்முயற்சியில் அவள் படும் பாட்டை இப்பாட்டு வெளியிடுகிறது.

நாத்து நட்டு நானறியேன்;
கடுவை போட்டு நானறியேன்;
சேத்துக் குள்ளே நின்னுக்கிட்டு
செல்லமகள் வாடுறேனே.

கருதறுத்துக் கிறுகிறுத்து
கண்ணுரெண்டுஞ் சோரப் போட்டு
சின்னக் கட்டு கட்டச் சொல்லி
சிறுட்டுறேனே மேல் முழியை.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

*[சின்னகட்டு—பெரிய கட்டாக இருந்ததால் தூக்கமுடியவில்லை. ஆகையால் வாயால் சொல்லாமல் சிறு கட்டாகக் கட்டும்படி கண் சைகைக் காட்டுகிறாள்.]*

## 12. அறுவடைப் பாட்டு

அறுவடை வேலை மிகவும் கடினமானது. குனிந்த முதுகு நிமிராமல், தாளை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் விறுவிறு என்று அறுப்பார்கள். நாம் அறுக்கப்போனால் நெல் தாளை அறுப்பதற்குப் பதில் கைவிரலை அறுத்துக் கொள்ளுவோம். பத்து நிமிஷத்திற்குள்ளாக முதுகில் வலி கண்டுவிடும் ஆனால் பழக்கமான பெண்கள் அதிகாலையிலிருந்து பொழுதடையும்வரை அறுவடை செய்வார்கள். களைப்புத் தோன்றாமலிருக்கப் பாட்டுப்பாடத் தொடங்குவார்கள். பாட்டுப் பாடுவதில் போட்டியும் ஏற்படும். நெல்களம் கலை அரங்கமாக மாறும். அலுப்புத்

தோன்றுமல் வேலைமுடியும். இப்பாடல்களின் பொருள் எதுவாகவும் இருக்கலாம். கிராமத் தெய்வ வணக்கம், ஊர்ச் சிறப்புக் காதல் முதலிய பொருள்கள் அடங்கிய பாடல்கள் தமிழ்நாட்டில் வழங்கிவந்தன. பண்டைக் காலத்தில் பாணர்களில் நெல்களம் பாடும் பாணர்கள் இருந்தார்கள் என்று அறிகிறோம். இன்று அறுவடைப் பாடல்கள் பாடப்படுவதே இல்லை. அவை முற்றிலும் அழிந்து விடும்போல் தோன்றுகிறது. இங்கு கிடைத்த இரண்டு பாடல்களை மட்டும் கொடுத்திருக்கிறோம்.

## அறுவடை

கிழக்கே மழை பெய்க்க
கேப்பைத் தாளை காயுக்க;
சொல்லி அறுத்திவாள்—அன்னமே;
சுமட்டுது கேப்பைத் தாளை—என் பொன்னமே.

வெள்ளியில் பிடி அரிவாள்
விடலைப் பிள்ளை கையரிவாள்;
சொல்லி யறுத்திவாள்—அன்னமே;
சுமட்டுது நெற் கதிரை—என் பொன்னமே.

கருதறுத்துக் கிறுகிறுத்து
கண்ணிரெண்டும் போய் போட்டு
கதிர்க் கட்டு வாங்க வென்று—அன்னமே;
ஏங்கித் தவிக்கிறேனே—என் பொன்னமே.

ஒத்த ஒத்த மடுக்காய்
ஒருச் சாஞ்ச கண்ணுக்காய்;
கண்ணுடு மயிலேயிலே—அன்னமே;
காட்ட வேண்ண எந்தன் அலேலே—என் பொன்னமே.

ஒரு முகத்தழகி
ஓட்ட வைச்ச காதழகி;
வேறு முகத்தழகி—அன்னமே;
பேசாதது எந்தன் கூட—பொன்னமே.

*[இப்பாடல் சிவகிரிப் பகுதியிலும், அம்பாசமுத்திரம் பகுதியிலும் பாடப்படுகிறது. பாடலை உதவியவர்கள்: சில அடிகள்—தோழர். ஆர். கே. நல்லகண்ணு; சில அடிகள்—தோழர். கார்க்கி.]*

## அறுவடைப் பாட்டு (2)

கண்ணாடி வளையல் தொட்டு
கருதறுக்கப் போற புள்ள,
கண்ணாடி மின்னலுல
கருதறுப்புப் பிந்துதடி

வெள்ளிப் பிடி அருவா
வெடலப்பய கையருவா
சொல்லி யடிச்சருவா
சொருட்டுதடி நெல் கருதை.

உள்ளருவா எள்ளருவா
ஊடே உருக்கருவா
சாதிலிங்கம் பிடியருவா
சன்னுதையா நெல் கருதை.

[பாடலை உதவியவர் :—எஸ். எஸ். போத்தையா]

*[இது தங்கம்மாள் புரத்தருகில் பாடக்கேட்டு எழுதியது. அப்பகுதியில் புன்செய்ப் பயிரே உண்டு. ஆனால் அறுவடைக்காக நன்செய்ப் பகுதிகளுக்கு வரும் உழவர்களும், உழத்தியரும் இப்பாடல்களைக் கற்றுக்கொண்டு தங்கள் ஊர்களுக்குச் சென்ற பின்னும் பாடுகிறார்கள்.]*

## 13. கையால் பாடுபட்டேன்

பாறையில் புதுச் சேலையை நனைத்துக் காயப் போட்டுக் கொண்டிருக்கிறாள் ஒரு பெண். அதனைப் பார்த்த அவளது தோழி ஒருத்தி "இது யார் வாங்கிக் கொடுத்தது? இதற்கு யார் சாயம் காய்ச்சியது?" என்று கேட்கிறாள். அவள் கையால்

பாடுபட்டுச் சம்பாதித்து வாங்கின சேலை இது என்று உழைப்பின் பெருமிதம்தோன்ற பதில் அளிக்கிறாள்.

ஆண் : வட்ட வட்டப் பாறையிலே
வரகரிசி தீட்டையிலே
யாரு கொடுத்த சாயச்சீலை
ஆலவட்டம் போடுது ?

பெண் : யாரும் கொடுக்கவில்லை
ஆலவட்டம் போடவில்லை
கையாலே பாடுபட்டு
காய்ச்சினது சாயச்சீலே.

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 14. மனைவியின் புத்திமதி

பைக்காரா மின்சார நிலையத்தில் தொழில் புரியும் தொழிலாளிகளின் வாழ்க்கையைப் பின்னணியாகக்கொண்டு இப்பாடல் அமைந்துள்ளது. புதிதாக வேலையில் சேர்ந்துள்ள ஒரு தொழிலாளிக்கு மணம் ஆகிறது, அவன் மனைவி வெகு நாள் மின்சார நிலையத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியின் மகள். மின்சார நிலையத்தைப் பற்றி அவளுக்கு நன்றாகத் தெரியும். அங்கே அவன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் பற்றி அவனுக்குப் புத்திமதி சொல்லுகிறாள்.

"பாதர் சைக்கிள் ஓட்டத்திலே" என்றால் வீரத்தோடு சைக்கிள் பந்தய ஓட்டம் விடுதல் என்று பொருள். மலைமீதிருக்கும் மேடுபள்ளமான பாதையில் சைக்கிள் ஓட்டவேண்டாம் என்று அவள் சொல்லுகிறாள். ஆலைத் தொழிலாளிகளும், மின்சாரத் தொழிலாளிகளும் தங்கள் மேற்பார்வையாளருக்குப் பட்டப் பெயர்கள் பல சூட்டுவதுண்டு. அவர்கள் நல்லவர்களாக இருந்தால் நல்ல பெயர்களும், கெட்டவர்களாயிருந்தால் கெட்ட பெயர்களும் அவர்களுக்குப் பட்டமாகக் கிடைக்கும். மேற்பார்வையாளர்களின் பட்டப் பெயர்களைச் சொல்லிக் கொடுத்து யார்

நல்லவர், யார் கெட்டவர் என்பதையும் அவள் கணவனுக்கு எடுத்துச் சொல்லுகிருள். இப்பாடலில் அவளது அன்பும், ஆதரவும் அவனைத் திருத்தவேண்டும் என்ற ஆர்வமும் காணப்படுகின்றன.

பவர் ஹவுசுப் பள்ளத்திலே
பாதர் சைக்கிள் ஓட்டத்திலே
ஓட்டு விரட்டாதீங்க
உங்களோலே தாரிபதிர்.

காலு வளைஞ்சவரே
நாலு ஜரா போட்டவரே
காலமெல்லாம் சொன்னாலும்
காலிப்புத்தி போகலையே.

தங்கக்குண சூப்பர்வைசர்
தர்மகுண மேஸ்திரியார்
கெட்டகுணம் டைம்கிப்பர்
கிட்டவந்தால் ஆகாதையா.

தேக்கப் பலகை வெட்டு
தெற்குவாக்க ஸ்டோரு கட்டு
ஸ்டோருக்குள்ளே பேரெழுதும்
தோகை மயில் டைம்கிப்பர்.

மல்லிகைப்பூ மேஸ்திரியார்
மரிக்கொழுந்து சூப்பர்வைசர்
ரோஜாப்பூ டயம் கிப்பர்
யோசனையாய்ப் பேரெடுங்க.

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

[குறிப்பு :—மேஸ்திரியின் பட்டப்பெயர் — மல்லிகைப்பூ
சூப்பர்வைசர் ,, — மரிக்கொழுந்து
டயம்கிப்பர் ,, — ரோஜாப்பூ]

## 15. காளைக்குக் கால்வலிக்காதா?

திறமையான விவசாயி ஒருவன் ஒரு நிலச்சுவானிடம் வேலைக்கு வருகிறான். அவர் அவனை வாட்டி வதைத்து வேலை வாங்குகிறார். காளை இல்லாத ஊரில் காளை வந்தால் அது கால் சளைக்கும் வரை ஏரில் பூட்டி உழுவது நியாயமா? என்று அவன் கேட்கிறான்.

ஏரில்லா ஊர்தனிலே
ஏறித்தேறிக் காளை வந்தால்
பொழுதா பொழுதன்னைக்கும்
பூட்டி உழ நியாயம் உண்டோ?

ஏர்ரா இரப்பேரு
சரமோ வாங்குபதம்
தன்னிரெண்டு சால்பூர்ச்சா
தங்கம் விளைந்திடுமே!

[சேகரித்தவர்:—எஸ். எஸ். போத்தையா]

## 16. மாட்டுக்காரன்

ஆடு மாடு மேய்க்கும் இளைஞனுக்கும் அவனை நான்கு நாள் காணாமல் தேடித் திரிந்து, கண்டு கொண்ட அவனுடைய காதலிக்கும் இடையே நிகழும் உரையாடல் இது.

பெண்: அந்துவாளக் காட்டுக்குள்ளே
ஆடு மேய்க்கும் காளிமுத்து—உன்
கொண்டையிலே ரெண்டு முத்து
குலுங்குதடா காளிமுத்து.

பெண்: ஆட்டுக்காரா! மாட்டுக்காரா!
அடை மழைக்கு எங்கிருந்தே?

ஆண்: மாரியம்மன் கோயிலுல
மண்டபத்து மேலிருந்தேன்.

பெண்: வெள்ளாட்டுக்காரா, நீ
விருந்துக் கோழி போட்டுக்காரா
வெள்ளாட்டுக் காலுக்குள்ளே—ஒரு
வேங்கைப் புலி மேயுதடா!

ஆண்: வேங்கை நரி மேய்ந்தாலென்ன?
வெள்ளாடு போனாலென்ன!
நீ தளிக்கும் மந்தையிலே
நின்று தவம் செய்தாலென்ன.

பெண்: ஏலரிச்ச கூட்டுக்குள்ளே
என்னுயிரு உன்னுக்குள்ளே
வாழாமப் போயிட்டாலும்—உன்
வாயருமை போதுமென்பேன்.

[சேகரித்தவர்:—எஸ். எஸ். போத்தையா]

## 17. உழவன்

ஒவ்வொரு மனைவியும் தனது கணவனின் பெருமையை மற்றவர்களிடம் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். உழவனது மனைவி அவனது பெருமையைச் சொல்லுகிறாள். அவனிடம் பணம் இல்லை. படிப்பும் இல்லை. ஆனால் முறுக்கேறிய உடல் உண்டு. உழைப்புக்கு அஞ்சாத ஊக்கம் உண்டு. அவனது உழைப்பின் பெருமையில் அவளும் பங்கு கொள்கிறாள்.

கருவேலம் கலப்பை கட்டி
கன்னி சேரி மாடு கட்டி
வடகாடு உழுது வரும்
வஞ்சிக் கொடி என் சாமி.

கோடாலிக் கொண்டை போட்டு
குருவ நாட்டு வேட்டையாடி
வாதாடி முயலெறியும்
வஞ்சிக் கொடி எம்பிறவி.

மஞ்சணத்தி மரத்துப் பிஞ்சை
மாரளவு கருத்தப் பிஞ்சை
மரமேறிக் குயில் கொத்தும்
மாம்பழந்தான் என் பிறவி.

முன் வந்தும் பின் வந்தும்
[illegible] நிலை [illegible]
சாயாமல் [illegible]
[illegible] கொண்டை தான் என் பிறவி.

மத்தியான வந்து நின்று
மாட்டுக் [illegible]
தாழங்காய் [illegible]
தங்கம் வரக் காணலியே.

[என் பிறவி என்பது பொதுவாக மகளைக் குறிக்கும். ஆனால் நாடோடிப் பாடலில் கணவனையும், காதலனையும் குறிப்பது மரபாகக் காணப்படுகிறது. 'வஞ்சிக் கொடி', 'தங்கம்' என்னும் சொற்கள் பொதுவாகப் பெண்களைக் குறிக்கும். நாட்டுப் பாடல்களில் அவை ஆணையும் குறிக்கின்றன.]

## 18. வண்டிக்காரன்

இரு காதலர்களின் ஊடலைப் பொருளாகக் கொண்டது இப்பாடல். வண்டியோட்டிக்கொண்டு சாவல்கட்டுப் பார்க்கப் போகும் காதலனிடம் பேச்சுக்கொடுக்கிறாள் காதலி. தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுகிறாள். ஊர் வாய்க்குப் பயந்து அவன் அவளை அழைத்துச் செல்ல மறுக்கிறான். விளையாட்டாக, தான் வரப் பல வருஷங்கள் ஆகும், அல்லது வராமலேயே இருந்து விடலாம் என்று சொல்கிறான். மல்லிகைப்பூ சூடாகும் காலத்தில், தான் வருவதாக வேடிக்கையாக சொல்கிறான். மல்லிகைப் பூ தன்னியற்கை மாறிச் சூடாகுமா? அவளும் வேடிக்கையாக அவனைச் சபிக்கிறாள். இப்பாடல் அவர்களது உரையாடல் ஆகும்.

பெண் : வண்டி அலங்காரம்
வண்டி மாடு சிங்காரம்!
வண்டி பத்தும் மன்னவர்க்கு
வட்டப் போட்டலங்காரம்.

கமலை அலங்காரம்
கமலை மாடு சிங்காரம்!
கமலை அடிக்கும் மன்னவர்க்கு
கறுத்தப் போட்டலங்காரம்.

சாரட்டு வண்டி கட்டி
சாலை வழி போற மன்னா!
ஏறிட்டுப் பார்த்தா லென்ன?
என்ன குத்தம் செய்தேனையா?

ஆண் : ஏறிட்டும் பார்த்திடுவேன்
எதிர்த்து முத்தம் தந்திடுவேன்
அரண்மனையில் சாவல்கட்டு
அவசரமாய்ப் போய் வாரேன்.

பெண் : வண்டி கட்டி மாடு பூட்டி—மதுரைக்
கோபுரம் போல் கூண்டு கட்டி
கூண்டுக்குள்ளே போறசாமி—என்னைக்
கூட்டிப் போனலாகாதோ!

ஆண் : மதுரை களமாகி
மல்லிகைப் பூச் சூடாகி
எருது பசுவாகி
சண்டனிக்கு நான் வருவேன்.

பெண் : வண்டி ஓடியாதோ!—உன்
மாடு ரெண்டுஞ் சாகாதோ
கூண்டு ஓடியாதோ—என்
கோத்திர மனம் ஆறுதோ!

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

[சண்டனிக்கு—கன்று போடும் தினத்தில்.]

## 19. கணக்கெழுதும் மச்சான்

கிராம அதிகாரியைப் போலவே கிராமக் கர்ணமும் கிராமத்தில் சக்தி படைத்தவன். இது பற்றியே "கணக்கனைப் பழித்தோன் காணி இழந்தான்" என்றொரு பழமொழி வழங்குகிறது. நாட்டாண்மைக்காரர் மகள் கணக்கன்மீது காதல் கொண்டிருக்கிறாள். வேலை முடிந்து அவன் நாட்டாண்மைக்காரரோடு சீட்டாட வருவான். அவள் அவன் வேலையைப்பற்றிப் பெருமையோடு குறிப்பிடுகிறாள். சீட்டாட வரும் நேரத்தில் அவன் முகத்தைக் காணலாமே என்று ஏங்கி நிற்கிறாள். "கிளி" என்று பெண்ணைக் குறிப்பிடுவதுதான் இலக்கிய வழக்கு. ஆனால் நாடோடிப் பாடல்களில் ஆண்களையும் கிளியென்று குறிப்பிடுவது வழக்கமாகக் காணப்படுகிறது.

வெள்ளிப் பென்சில்களாம்
விதவிதமாய் மைக் கூடாம்
வீற்றிருந்து கணக் கெழுதும்
வேப்ப மரக் கச்சேரியாம்.

தங்கப் பென்சில் களாம்
தரந்தரமாய்ப் புத்தகமாம்
சாய்ந்திருந்து கணக் கெழுதும்
சாலையோரம் கச்சேரியாம்.

த் தண்ணியிலே
வைச்சுடுத்தி
நாட்டாண்மைக் காரரோடு
சீட்டாட வாரதெப்போ ?

சிவத்தச் சிவத்தக் கிளி
சேவலைக்கப் போன கிளி
சேவலும் அளந்தாச்சு
சேதி வந்து சேரலையே !

கணுத்தக் கறுந்தக் கிளி
காடளக்கப் போன கிளி
காடும் அளந்தாச்சு
கணக்கும் வந்து சேரலையே !

கணக்கன் கணக்கனுன்னு
கணக்கனுக்கு வாக்கப்பட்டு,
கணக்கெடுத்த நேரமெல்லாம்
விளக்கெடுக்கச் சொல்லுறனே.

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

*[செவலளக்க, காடளக்க—கணக்கனது சர்வே வேலைகள்.]*

## 20 மில் வேலை

*கிராமத்திலிருந்து நூற்பு மில்லில் வேலைக்கு வந்து சேருகிறாள் ஒரு பெண். வீட்டில் மனையில் பஞ்சு அரைப்பதைப் பார்த்திருக்கிறாள். ஒவ்வொரு மனையிலும் ஒவ்வொருவர் வேலை செய்யவேண்டும். ஆனால் மில்லில் பஞ்சரைப்பதற்கு நூறு மனைகளுக்கு ஒரு ஆள் போதும். இரு நூறு கைகளின் வேலையை ஒரு இயந்திரம் செய்வதைப் பார்த்து அவள் வியப்படைகிறாள். இயந்திரம் மனித சக்தியை எவ்வளவு அதிகமாக்குகிறது என்று நினைத்து வியப்பில் ஆழ்ந்துகிறாள்.*

போகப் போறையிலேயோ
மெல்லிநாகா ஆறு மணி
ஆறு மணிப் பஞ்சடிக்க
ஆகமான ஆளுமில்லே.

கீழ கல்லா போறயிலேயோ
சேர்ந்தா : நூறு மணி
நூறு மணிப் பஞ்சடிக்க
நாத்திலெ ஒரு சேவகராம்.

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 21. நடவுப் பாட்டு

நாற்று நடும் வேலையை உழத்தியரே பெரும்பாலும் செய்கின்றனர். குனிந்த முதுகு நிமிராமல் நாற்று அலகுகளை அவர்கள் விரைவாக நடுவார்கள். வேலையில் கடுமை தோன்றாதிருக்க இடை இடையே பாட்டுப் பாடுவார்கள். இப்பாடல் தஞ்சாவூர் அருகிலுள்ள ஊர்களில் உழத்தியர் பாடும் பாடல். மருதநிலத்தின் தெய்வம் இந்திரனாதலால் இதில் அவர்கள் இந்திரனை வாழ்த்தி நடத் தொடங்குகிறார்கள். நட்ட நாற்று ஒன்று நூறாகப் பல்கி களம் ஏறவேண்டும் என வாழ்த்துகிறார்கள். தங்கள் உழைப்பால் எவ்வளவு பலனடைந்தாலும் தங்களுக்கு வயிற்றுச் சோறு போக எதுவும் மிஞ்சாது என்பதை அவர்கள் குறிப்பாக உணர்த்துகிறார்கள். இதுபோன்ற பாடல்கள் பல. நன்செய் நிலப் பகுதிகளில் வழங்கிவரலாம். ஆனால் எனது தொகுப்பில் கிடைத்த பாடல் இது ஒன்றே.

1. இந்திரனை நோக்கி
எடுத்தேன் திரு அலகு!
சந்திரனை நோக்கி
எடுத்தேன் திரு அலகு!

நிறுத்தின திரு அலகு
நின்று பயிர் ஏற வேணும்!
நெல்லா விளைய வேணும்;
நெடுங் களங்கள் ஏற வேணும்!

கதிரா விளைய வேணும்—எங்களையா
களஞ்சியங்கள் ஏற வேணும்!

2. காசாப் படியளந்தால்,—களத்து
நேரஞ் செல்லுமின்னு
நெல்லாப் படியளந்தால்
நீண்ட நேரஞ் செல்லுமின்னு

அரிசியாப் படியளந்தால்
ஆக்க நேரஞ் செல்லுமின்னு
சோறாப் படியளந்தா—எங்களையா
சுவாமியார் பண்ணையிது.

*[இப்பாடல் — ராஜவல்லிபுரம் ராஜகோபால கிருஷ்ணன் உதவியது. பழைய பத்திரிகை யொன்றில் 1934ல் வெளிவந்தது.]*

நடுகைக் காட்சிகளை விளக்கும் பாடல்கள் பள்ளுப் பாட்டுக்களில் காணப்படுகின்றன. முக்கூடற்பள்ளு நடுகை வேலையையும், பின்னணியில் நடக்கும் காதல் விளையாட்டுகளையும், உழைப்போடும், காதலோடும் கலந்து பிறக்கும் பாடல்களையும் வருணிக்கிறது. கிராம இளைஞர்களது உணர்ச்சிகளை மிகவும் அழகாக சித்தரிக்கின்றது. இக்கவிதைகள் தோன்றுவதற்கு சேரிகளில் வழங்கி வந்த நடுகைப் பாட்டுக்களே ஆதாரமாக இருந்திருக்கவேண்டும். 300 வருஷங்களுக்கு முன்பு பள்ளுப்பாட்டு தோன்றியது. அக்காலத்தில் நடுகைப்பாட்டு ஏராளமாக இருந்திருக்கவேண்டும். இக்காலப் பாட்டுக்களில் நடுகைக் காட்சிகளைப் பற்றிய பாட்டுக்கள் காணப்படவில்லை. வெள்ளையர் ஆட்சியில் நிலவுரிமை இழந்து உழவுத் தொழிலாளர்கள் ஆகிவிட்ட சேரிமக்கள் உள்ளத்தில் தொழிலில் உற்சாகம் குறைவது இயல்புதானே. தொழிலில் இன்பம் இல்லாதபோது இப்பாட்டுக்கள் மறைந்ததில் வியப்பில்லை. பழைய பாடல்களில் பல சிற்றூர்களில் இன்னும் வழங்கி வரலாம். அவை முற்றிலும் வழக்கொழிந்து போவதற்குமுன் சேகரிக்கவேண்டும்.

# மூன்றும் பகுதி

## காதல்

1. மறக்க முடியுமா ?
2. பொறுமை
3. கண்டீர்களா ?
4. விடமாட்டேன்
5. வருவதெப்போ ?
6. கால் தடம்
7. நெஞ்சுக்குள்ளே ஆசை கொண்டேன்
8. குயில் சத்தமோ
9. இரு பேரும் போயிடுவோம்.
10. நாயின் காவல்
11. சேவல் கூவியது ஏன் ?
12. என்ன குற்றமோ ?
13. மலைச்சரிவில் காதல்
14. புல்கட்டுக் காதலி
15. காத்திருந்து வீண் போனேன்
16. மரத்தை வெட்டாதே
17. விலைக்கு வாங்கலாமா ?
18. படிச்ச புருஷன்
19. நல்ல வேட்டி கட்டிக் கொள்
20. விலங்கு மாட்டுவேன்
21. பழி வரட்டுமே
22. சாக்குப் போக்குகள்

23. தனித்திருக்க வாரானோ?
24. என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?
25. தாயும் மகளும்
26. குடி கெடுக்கும் கொண்டை
27. கற் கோட்டை ஏறி வா
28. யார் நிற்கிறது?
29. நீலக் கருங்குயிலே
30. காதலன் பாட்டு
31. உந்தனைக் காணாமல்
32. வாதுகவி
33. புறப்படுவோம்
34. நம்மசாமி
35. வந்த கள்வன் யார்?
36. ஏத்தி விடு கப்பலிலே
37. வங்காளம் போகாதே
38. பயமில்லை
39. சொன்ன தெல்லாம் செய்வேன்
40. வெற்றிலை வேண்டுமா?
41. வேறு இடம் தேடிக் கொள்
42. காலம் கடத்துவேனோ
43. வேலை ஓடவில்லையா?

## 1. மறக்க முடியுமா?

அயல் நாடு சென்று உழைத்துப் பணம் சேர்த்து அவளைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறிச் சென்றவன் சில ஆண்டுகள் வரை திரும்பவில்லை. அவனை மறந்துவிட்டு வேறொருவனை மணம் செய்து கொள்ளும்படி பெற்றோரும், உற்றோரும் உபதேசிக்கின்றனர். அவள் தனது வாழ்க்கை மலரும் பருவத்தில் மணம் வீசிய பலநிகழ்ச்சிகளை எப்படி மறப்பாள்?

வெறுத்து வெறுத்து நின்றாலும்
வேண்டிய பேர் சொல்லுவாக;
வெத்தலை வாசத்தை
வெறுக்க மனம் கூடுதில்லை.

அயர்ந்து அயர்ந்து நின்றாலும்
அக்கம் பேர் சொல்லுவாக;
அரளிப் பூ வாசத்தை
அயர்க்க மனம் கூடுதில்லை.

மறந்து மறந்து நின்றாலும்
மறுசொல்லாத் சொல்லுவாக;
மல்லிகைப் பூ வாசத்தை
மறக்க மனம் கூடுதில்லை.

மறந்தாலும் மறந்திடுவேன்
மருந்து தின்றால் ஆற்றுவேன்;
மறந்தே இருப்பதற்கு—என்னால
மதி இருக்கக் கூடுதில்லை.

மறந்திரு மறந்திருன்னு
மனுசரெல்லாம் சொல்லுறாக
மறந்திட்டிருப்பதினும்
இறந்திட்டாலும் குத்தமில்லே.

(சேகரித்தவர்—எஸ். எம். போத்தையா)

[வெத்தலை வாசகம், அரளிப்பூ வாசகம், மல்லிகைப்பூ வாசகம்—இவை மூன்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன. ஒரு நாள் வெற்றிலை தந்தபோது சொல்லிய பேச்சு, மற்றொரு நாள் அரளிப் பூச்சூட்டியபோது சொல்லியது; வேறொரு நாள் மல்லிகைப் பூச்சூட்டியபோது பேசிய பேச்சு.]

## 2. பொறுமை

பல நாள் தன்னைக் காண வராத காதலனைத் தன்னால் என்றும் மறக்க முடியாது என்று உறுதியாகக் கூறுகிறாள் ஒரு பெண். அவளது பொறுமையை இப்பாட்டு விளக்குகிறது.

மரங்கள் தளிர்க்கின்றன. அவளுடைய வாழ்க்கையென்னும் மரத்தில் இனியும் காதல் தளிர் விடுமா? ஏதோ ஒரு காரணத்தால் அவள் காதலன் அவளை மறந்து சென்றுவிட்டான். தளிர்த்திருக்கும் மரத்தின்மேல் இன்பத்தோடு இரு கிளிகள் வாழும் காலம் வருமா? வராதென்றாலும் அவளால் பழைய நாட்களை மறக்கமுடியவில்லை. காதலனை மறுபடி அடைவோம் என்ற நம்பிக்கை அவளைவிட்டு அகலவில்லை. இவ் வெண்ணங்களின் வெளியீடே இப்பாடல்கள்.

இண்டு தனியாக்காதே!
இணைக்கெடுத்துப் பூக்காதே
இண்டுலே ரெண்டு கிளி
இருந்து கவி பாடாதோ.

ஆத்தூரு அரளிப்பூவே
அருப்புக்கோட்டை பொரிகடலே
சேத்தூரு செவந்திப்பூவே!
சிவந்திட்டாலும் மறப்பதில்லே.

பாக்கத் துவக்கதில்லே.
பழைய உறவு மங்கதில்லே
ஏலம் காக்குதில்லே
என்னைவிடப் போறதில்லே.

கட்டுக் கருப்பட்டியே
வடமதுரைச் சர்க்கரையே
இனிப்புக் கண்ட சர்க்கரையை
இன்னம் விடப் போறதாகு.

[இண்டு—கவடு. இணுக்கு—தளிர்.]

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 3. கண்டீர்களா ?

ஊருக்கு வெளியே தன் காதலன் வரக்கண்ட உழவன் மகள் ஒருத்தி அவனைக் கண்டும் காணாததுபோல் "அவனை" யாராவது கண்டீர்களா? என்று பலரையும் கேட்பதுபோல் பாடுகிருள். அவ்வாறு பாட்டைக் காதில் கேட்டதும் அவனும்-அவளைக் கண்டும் காணாததுபோல் "அவளைக் கண்டீர்களா?" என்று பலரையும் வினவுவதுபோல் பாடுகிருன்.

பெண் : அரைக்கரை ரூபாத்தி
ஆடும் துலா மரமே.
இறைக்கிற அண்ணன்மாரே
இந்திரனைக் கண்டியளா ?

அண்ணன்மார் : இந்திரனைக் காணலியே
இளையவனைப் பார்க்கலியே
சந்திரனைப் போல
சாலைவழி போகக் கண்டேன்.

பெண் : புதுப்பானைக் கருப்பழகா
புந்திரன் போல் நடையழகா
சிரிப்பாணி மன்னவரையும்
தெருவில் வரக் கண்டியளா ?

ஆண் : மதுரைக்கு வடகிழக்கு
வைகைக் கரைச் சோழவந்தான்
சோழ வந்தான் பூமியிலே
தோகை மயில் ஆடுதையா!

ஆடுங் களரியிலே
அம்பலத்தார் வீதியிலே
கூடுங் களரியிலே
குயிலும் வரக் கண்டியளா?

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 4. விடமாட்டேன்

*காதலர்களின் களவொழுக்கம் அவ்வூரில் வெளியாகிவிட்டது. அவனைக் கைவிட வேண்டுமென்று பெற்றோர்கள் உபதேசித்தார்கள். ஊரில் பெரியவர்கள் பஞ்சாயத்துப் பேசி அவனைத் தண்டிப்பதாகக் கூறுகிறார்கள். இச் செய்திகளை யெல்லாம் அவள் அவனிடம் கூறுகிறாள். அவனோ இதற்கெல்லாம் அஞ்சவில்லை. என்ன வந்தாலும் சேர்ந்து வாழ்வோம் என்று கூறி அவளைத் தேற்றுகிறான்.*

பெண் : பட்டைச் சிவப்புக் கல்லு
பளிங்கு நிறம் உங்க பல்லு
பல்லொளிக்கும் பாவனைக்கு
பாராம ஆசை கொண்டேன்.

பொட்டுடை உங்க நெத்தி
பொருந்திடும் சர்மலசு
விட்டுறச் சொல்லி
விண்ணப்படப் பேசுறாக.

ஆண் : பேசினாலும் பேசட்டுமே
பெரிய இடத்தில் சொல்லட்டுமே
இனிப்புக் கண்ட சர்க்கரையை
இன்னம் விடப் போறதாரு

பச்சைக் கல்லு மூக்குத்தி
பாவையோடுஞ் சூதுமூரி
பாக்க முழிச்சாலும்
பருகிலை எங்கபோவா.

பேரிச்சம்பழமோ—நீயே
பெரியோடத்துக் கீரிடமே
இனிப்புக் கண்ட சர்க்கரையை
இன்னும் விடப்போறதாரு.

ஏசுறவும் பாட்டும்
இன்னி ரெண்டு போட்டும்
எனக்கு வாச்ச பூஞ்சிவப்பை
இன்னும் விடப் போறதாரு ?

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 5. வருவதெப்போ ?

*காதலன் வரவை எதிர்நோக்கி இருக்கும் காதலி மனத்தில் தோன்றும் எண்ணங்களை இப்பாடல் வெளியிடுகிறது. தன்னையே அவள் தவசியம்மனாகக் குறிப்பிடுகிறாள். தவசென்பது காதல் தவசுதான்*

கொண்டை உதறிப் பூ முடிஞ்சி
குளுந்த நேரம் வேட்டையாடி,
இண்டஞ்செடி வாடைதச்சி
இந்த வழி வருவாகளோ !

வந்துருவார் இந்த வழி
வாச்சிருவார் தங்கக் கட்டி
தந்திருவார் வெற்றிலையும்
தயவு வார்த்தை சொல்லிடுவார்.

பொழுது உதிக்கிறதும்,
பொட்டு வண்டி மின்னுறதும்,
சாலி குளம் வேட்டையாடி
சாமி வர நேரமாச்சி.

எண்ணெய்ந் தலை முழுகி
எள்ளளவு பொட்டு வச்சி
தவசியம்மன் கோயிலுக்கு
தவசிருக்க வார தெப்போ?

[சேகரித்தவர்:—எஸ். எஸ். போத்தையா]

## 6. கால் தடம்

காட்டுக்கு விறகெடுக்கப் போனாள் ஒரு பெண். வேட்டையாடும் சாக்குச் சொல்லி அவளைப் பின்தொடர்ந்தான் அவள் காதலன். அவளைத் தேடிக் காடுமேடெல்லாம் அலைந்தான். அவன் அவளை வழக்கமாகச் சந்திக்கும் இடங்களிலெல்லாம் அவளைக் காணவில்லை. ஈரப்பாங்கான மணலில் அவளது கால்தடத்தைக் கண்டான். அவள் அருகிலேதான் ஒளிந்திருக்கவேண்டும் என்று தெரிந்துகொண்டான். அவள் காதில் விழும்படியாக அவள் கால் தடத்தைப் போற்றுகிறான். அப்புறம் அவள் எவ்வளவு நேரம் அவனைக் காக்க வைத்து மறைந்திருக்க முடியும்?

பாறையிலே பாக்குமரம்
பார்ப்பதற்கு தோதகத்தி
தோதகத்திப் பூவெடுக்க
தோயந்தேனடி சில காலம்.

சதுரகிரி மலையோரம்
சாஞ்சிருக்கும் திருகு கள்ளி
திருகு கள்ளிப் பூ வெடுக்க
திரிஞ்சேன் சில காலம்.

மலையடி யோரத்திலே
மான் வேட்டை ஆடையிலே
கண்டனடி உன் நடத்தை
கன்னியப் பூச் சாரலிலே.

அள்ளட்டா, முள்ளட்டா,
அடிமடியில் கட்டட்டா?
நச்சிகட்டிக் காக்கட்டா?
தனிமையிலே உன் நடத்தை!

குறிப்பு—குச்சி-குச்சில். சேகரித்தவர்கள்—கார்க்கி, போத்தையா]

## 7. நெஞ்சுக்குள்ளே ஆசை கொண்டேன்

*காதலன் நினைவால் மறுகும் பெண்ணொருத்தியின் பாடல் இது.*

உங்க மேனிக் குள்ள
ஊதாக் கலர் சட்டைக் குள்ள
தோளிலிடும் நெஞ்சுக் கொள்ள
தோகை மயில் ஆசை கொண்டேன்.

அரிசி அரிக்கையிலே
அரளிப் பூ தந்தவரே
சோறு வடிக்கையிலே
சொக்குதையா உங்க பூவு.

காயுதய்யா கம்பித்துண்டு
கண்ணைப் பறிக்குதையா
நெனவை மெரட்டுதல்லோ
நீல வர்ணக் கம்பித் துண்டு.

[சேகரித்தவர்:—எஸ். எஸ். போத்தையா]

## 8. குயில் சத்தமோ?

உச்சி நத்தம் என்னும் ஊரிலே, மனிதர் நடமாடாத பாதையிலே ஒரு பெண் மொச்சை நெத்து உருவிக்கொண்டிருக்கிறாள். அவள் காதலன் அவளைச் சந்திப்பதற்காகக் கொடுக்கும் சீழ்க்கை போன்ற சங்கேத ஒலியை அவள் குயிலின் கூவுதலாக நினைத்துப் பேசாமலிருந்து விடுகிறாள். அவன் அருகில் வந்து "நான் அழைத்தும் அலட்சியமாக இருந்தது ஏன்?" என்று கேட்கிறான். அவள் "நான் உங்கள் சத்தத்தைக் குயிலின் கூவுதல் என்று நினைத்தல்லவோ பேசாமலிருந்து விட்டேன்? உங்களது அழைப்பு என்று தெரிந்திருந்தால் உங்கள் முன்னிலையில் ஓடிவந்து நிற்பேனே" என்கிறாள். காதலர்களின் சங்கேத அழைப்புகளினால் ஏற்படும் சந்திப்பை விளக்குகிறது இப்பாடல்.

[குறிப்புரை: குமாரி பு. மங்கை எழுதியது]

உச்சி நத்தம் பாதையிலே
மோச்சி நெத்து உருவையிலே
கூப்பிட்ட சத்தமெல்லாம்
குயில் சத்த—மின்னு நினைத்தேன்
சாமி சத்த மின்னிருந்தால்
சன்னதிக்கே வந்திருவேன்

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 9. இருபேரும் போயிடுவோம்

கிராமத்தில் இளைஞனொருவனும், இளமங்கையொருத்தியும், ஒருவரையொருவர் காதலித்தனர். அவர்களது பெற்றோர்கள் அவர்கள் திருமணம் செய்துகொள்வதை எதிர்த்தனர். துணிவு கொண்ட காதலர்கள் ஊரைவிட்டு ஓடிப்போய் மணம் செய்து கொள்ள நிச்சயித்தனர். சந்தைக்குப் போகிற சாக்கில் இருவரும் தப்பிவிடலாமென்று எண்ணினார்கள். ஆனால் சந்தைக்குப் பெண்ணின் இரண்டு தமையன்மார்களும் வருவார்கள் அவர்கள் கண்களிலும் படாமல் தப்பிவிட வேண்டும் என்று யோசனை சொல்லுகிறாள் அப்பெண்.

சங்க நூல்களில் "உடன் போக்கு" என்றொரு துறை உள்ளது. விட்டார் சம்மதிக்காவிட்டால் காதலர்கள் தப்பி ஓடி மணம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்ததை இத்துறையில் அமைந்த பாடல்கள் நமக்கு விளக்குகின்றன. அப்பண்டைய வழக்கத்தையே இக்காதலர்கள் பின்பற்றத் துணிந்துவிட்டார்கள்

சந்தைக்குப் போவாடி
சட்டி பானை வாங்குவோமடி,
சந்தை கலையு முன்னே
தப்பிருவோம் ரெண்டுபேரும்.

முக்கு ரோட்டுப் பாதையிலே
மூத்தவரை முந்தவிட்டு
இளையவர் வாரயின்ன
இரு பேரும் போயிருவோம்.

நீ கறுப்பு, நான் சிவப்பு
ஊருலேயோ ஓமலிப்பு
ஓமலிப்பு தீருமுன்னே
ஓடிப் போவோம் ரெண்டுபேரும்

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 10. நாயின் காவல்

காதலியைக் கள்ளத்தனமாகச் சந்திக்க வருகிறான் காளையொருவன். ஆனால் அவன் சந்திப்பதற்கு இடையூறாகக் காதலியின் வீட்டிலுள்ள நாய் அவனைக் கண்டு குலைத்து அவனது வருகையை மற்றவருக்கு அறிவித்து விடுகிறது. ஊராருக்குப் பயந்த அவன் தன் காதலியிடம் கூறுகிறான், "நான் உனது வீட்டுக் கதவைத் தட்டினேன். அதனால் விழிப்புற்றுக் குலைத்த நாயின் மேல் கல்லை விட்டெறிந்தும் உனது வீட்டு நாய்க் குட்டி ஓயாமல் குலைத்து என்னை உன்னிடம் பேச முடியாமல் செய்து விட்டது "எனக் கூறுகிறான். இதைக் கேட்ட அவனுடைய காதலி தன் வீட்டு நாய்க் குட்டியைப் பார்த்து" என்னை என் காத

லர் சந்திக்க வருவதற்கு நீ, இடையூருக இருப்பதனுல் உனக்குக் கஞ்சியும் சாதமும் போடாமல் கட்டிப் போட்டே உன்னைக் கொன்று விடுவேன்'' என்கிருள். ஆனுல் அவள் வீட்டு நாயோ "நீ என்னை என்ன செய்தாலும் பரவாயில்லை உன்னுடைய காதலன் உன்னுடையவன் ஆகாமல் அசல் வீட்டுக்காரனுக இருக்கும் வரையில் நான் எனது கடமையைச் செய்தே திருவேன். " என்பது போல் அமைகிறது கடைசி நான்கடிகள்.

ஆண் :

கருவலைத் தட்டிப் பார்த்தேன்
கல்லைவிட் டெறிந்து பார்த்தேன்
உன் வீட்டு நாய்க் குட்டி
ஓயாமல் குலைக்குதடி.

பெண் :

கஞ்சியும் ஊத்த மாட்டேன்
கரிப்பத்தும் போட மாட்டேன்
கெட்டுன கெட்டோட
செத்துப்போ நாய்க்குட்டி.

நாய் :

கஞ்சியும் ஊத்த வேண்டாம்
கரிப்பத்தும் போட வேண்டாம்
அச வீட்டுக்காரனை நான்
அண்ட விட மாட்டனடி.

[குறிப்புரை—குமாரி டி. மங்கை எழுதியது]

குறிப்பு :—அகத்திணை இயலில் 'வரைவு கடாதல்' ஒரு துறை. தோழி, தலைவனை விரைவில் தலைவியை மணம்புரிந்து கொள்ள வேண்டுமென்று கூறுவது இத்துறையாகும். மறைவாகச் சந்திப்பதிலுள்ள துன்பங்களை எடுத்துக் கூறி விரைவில் மணமுடித்துக் கொண்டால் இத்துன்பங்களின்றி எப்பொழுதும் இன்பம் துய்க்கலாம் என்றுக் கூறுவாள். அத்துறைப் பாடல்களோடு இந்நாட்டுப்பாடலை ஒப்பு நோக்கலாம்.

[கெட்டுன கெட்டு—கட்டின கட்டு]

## 11. சேவல் கூவியது ஏன்?

கிராமத்திலுள்ள மற்றவர்களெல்லோரும் எழுந்திருக்கு முன்னேதான் எழுந்து தனது காதலனைச் சந்திக்க வழக்கமாகப் போகும் பெண்ணொருத்தி ஒருநாள் சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள். ஆனால் பொழுது விடிந்துவிட்டதை அறிவிக்கச் சேவல் கூவத் தொடங்கிய உடனே விழித்துக்கொண்ட அவள் சேவலைப் பார்த்து நான் என் காதலரைச் (சாமியை) சந்திப்பது உனக்குப் பொறுக்காததினால்தான் உரக்கக் கூவி எல்லோரையும் விழிப்புறச் செய்கின்றனையோ?" என்று கேட்கிறாள். அவளது கேள்வியும் சேவலின் விடையும் இப்பாடலில் அடங்கியுள்ளன.

பெண்:

சாமம் போல எந்திரிச்சு
சாமியிடம் போகையிலே
விட்டு போயிருந்த சாவல்
விரியாய்க் கூவுறையா!

சேவல்:

கண்ணுறங்கா சந்தியாய்
உனக்காகக் கூவவில்லை
ஊரோட ஒப்பனைக்கு
கூவுறனே செஞ்சாவல்

[குறிப்பு— நமாசி பு. மங்கை எழுதியது.

## 12. என்ன குற்றமோ?

காதல் நோய் சங்க நூல்களில் அகத்துறைப் பாடல்களிலும் காவியங்களிலும், தற்காலச் சிறு பிரபந்தங்களிலும் பல வகையாக வர்ணிக்கப்படுகிறது. வளை கழலுதல், கண் பசப்புறுதல், மேனி நலம் குறைதல் முதலிய அறிகுறிகள் காதல்நோயைப் புலப்படுத்துகின்றன என்று பண்டைப் புலவர்கள் கருதினார்கள். ஆண்டாள் திருமொழியும், குற்றாலக் குறவஞ்சியும், காதல் நோயால் பெண்களின் உடல் நலம் வாடுதலைக் கவிதைச் சுவையோடு வர்ணிக்கின்றன. இந்நாட்டுப் பாடல், எளிய முறையில் காதல் நோயின் விளைவுகளை விளக்குகிறது.

1. கருத்தக் குடை புடிச்சி
கரை நெடுகப் போறவரே,
எலும்பிருக்கச் சதை நறைய,
என்ன குத்தஞ் செய்தேனையா ?

2. கரை வழியில் போறவரே
கன்னி மையல் கொண்டவரே
எலும்பிருக்கச் சதை நறைய
என்ன மையல் கொண்டேனோ ?

சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 13. மலைச்சரிவில் காதல்

*சிவகிரி மலைச்சாரலில் சுள்ளி பொறுக்கச் செல்லும் பெண்ணொருத்தியின் காதலன் கோடை மழை வரவேண்டுமென்று வேண்டுகிறான். பயிர்ப் பருவ காலத்தில் அவளுக்கு வேலை இருக்கும். ஆனால் கோடை காலத்தில் அவள் சுள்ளி பொறுக்க மலை ஏறி வருவாள். விறகைக் கட்டாகக் கட்டத் தன்னை அழைப்பாள் என்று அவன் எண்ணுகிறான். அவனது எண்ணத்தின் வெளியீடே இப்பாடல்.*

*காதலன் பாடுவது :*

1. பொட்டு மேலே பொட்டு வச்சி
பொட்டலிலே போற புள்ளே
பொட்டலிலே பேஞ்ச மழை—ஓம்
பொட்டழியப் பேயலையோ.

2. உள்ளான் உழவடிக்க
ஊர்க்குருவி நாத்தரிக்க
நார மரமடிக்க—நீ
கட்டு வாங்க் கட்ட புள்ளே.

3. வெள்ளிப் பிடி அரிவாள்
வொடலப்புள்ள கையரிவாள்.
சொல்லியடிச்சரி வாள்
சுத்துல்லோ நெல் கதிரு.

4. கோடை மழை பெய்யாதோ
நுழைந்து தான் வருவானோ
கட்டுத் தூக்கச் சொல்வானோ
கட்டி முத்தம் தருவானே. [சேகரித்தவர்—கார்க்கி]

*2, 3 வரி செய்யுட்களில் நடுகையும், அறுவடையும், குறிப்பிடப்படுகிறது. நிலமில்லாத விவசாயத் தொழிலாளிப் பெண்களுக்கு, நடுகை முதல் அறுவடைவரை வேலை கிடைக்கும் அக்காலம் முடிந்ததும் மலையை அடுத்த ஊர்களில் வாழும் ஏழைப் பெண்கள் விறகு வெட்ட மலைக்குச் செல்கிறார்கள். காட்டிலாகா அனுமதி பெற்று மலையில் விறகு வெட்டி தலைச் சுமையாகக் கொண்டு வருவார்கள். பருவகாலம் இல்லாத மாதங்களில் இதுவே அவர்களுக்குப் பிழைப்பாக இருக்கும். தன்காதலி மலைக்கு வரும் காலத்தை எதிர்பார்த்துத் தவிக்கிறான் ஒருஇளைஞன்.*

## 14. புல்கட்டுக் காதலி

*புல் அறுத்து விற்கும் பெண்ணின் காதலன் அவளுடைய கஷ்டமான வேலையைக் குறித்தும், தனது அன்பை வெளியிட்டும் பாடும் பாடல்கள் இவை.*

வாடக் கோரைபிடுங்கி
வடகாட்டுப் புல்லறுத்து
மீதியுள்ள கொண்டையிலே
ஏறுதடி புல்லுக்கட்டு.

சின்னச் சின்ன வெத்திலையாம்
சிங்கப் பூரு லேகியமாம்
மாருக் கட்டு மரிக் கொளுந்து
மணக்குதடி கொண்டையிலே.

உருண்ட முழி திரண்ட முழி
உள்ளூருச் சிவந்த புள்ள
இலந்த முள்ளூர் தலைமுடியும்
இழுபடுதே சந்தியிலே.

காப்பிக் கடை ஓரத்திலே
கரும்புக் கடை நம்ம கடை
கரும்பு வாங்க வந்த புள்ள
கட்டப் புள்ள நம்ம குட்டி.

ஆல விழுதெடுத்து
ஆள் காட்டு வித்தெடுத்து
கோரக் கிழங்கெடுத்து
கூட்டுறாளே மையருந்து.

[சேகரித்தவர்: சிவகிரி—கார்க்கி]

[கடைசி அடிகளில் புல்கட்டுக்காரியின் அங்க அசைவுகளில் ஈடுபட்ட காதலன் அவையனைத்தும் மயக்க மருந்தென்று கூறுகிறான்.]

## 15. காத்திருந்து வீண் போனேன்

பிறரறியாமல் கிராமப்புறத்துக் காதலர்கள் சந்திப்பதற்குப் பல இடையூறுகள் நிகழும். அவள் வர வாய்ப்பிருந்தால் அவன் வர வாய்ப்பிருக்காது. அப்பொழுது அவனை அவள் நொந்து கொள்வாள். அவளும் வர முடியாமல் போகலாம். அவன் [illegible] நொந்து கொள்வான். ஆவல் மிகுதியால் இவ்வாறு [illegible] நொந்து கொண்டாலும் இடையூறுகளின் [illegible] து அவர்கள் சமாதானம் அடைவார்கள். இப்பாடல்கள் இருவர் மன நிலையையும் உணர்த்துகின்றன.

பெண்: ஆலமரம் உறங்க
அடி மரத்துக் கோப்பரைய
ஊரு உறங்காதோ
உங்க மடி நானுறங்க.

முக்குட்டுப் பாதையிலே
மூணுதரங் கண்டாலும்
அந்தி சந்தி காணுட்டா
அதிக மயக்க மாமே.

ஆண் : வெள்ளிக் கட்டிச் சீங்குழலே
வேலியிலே சாத்தி வைச்சேன்.
கள்ளித்தலே வாசலுல
காத்திருந்து வீண் போனேன்.

வெள்ளி நிலவே—நீ
விடி வெள்ளி ராசாவே.
கள்ளித் தலே வாசலுல
காத்திருந்து வீண் போனேன்.

பெண் : பேரிச்சம் பழமே
பெரிய இடத்துக் கிரீடமே
ஆவோட நீக்கையிலே
யாரை விட்டுக் கூப்பிடட்டும்.

ஆண் : ஆளும் வேண்டாம், தேளும் வேண்டாம்
அவளுமிங்க வரவும் வேண்டாம்
ஏலந் தின்ன வாயாலே
தாளம் போட்டுக் கூப்பிடட்டும்.

[சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா]

## 16. மரத்தை வெட்டாதீர்

ஊரில் கம்மாய்க்கரை அருகில் ஐயனூர் கோயில். கம்மாய்க் கரையில் பெரிய நாய்ச்சியார் கோயில். அங்கே ஒரு நீரருவி உண்டு. அந்த நீரருவியில் காலையில் முனிசாமி பல் துலக்குவான். அதன் அருகில் ஒரு மரம். அம்மரத்தடியில் அவன் தன் காதலி யைச் சந்திப்பான். அதை வெட்டுவதற்கு உத்தரவு கொடுத்து விட்டார்கள். கிராமப் பஞ்சாயத்தார்கள். அவள் தனக்குள்ளே பாடிக் கொள்கிருள். தனது காதலனைப் பிரிந்து ஆறு மாதங்

களாயின. மணம் உறுதி செய்ய ஆறு மாதங்களாகும். அதற்கிடையில் அவன் வந்தால் அவர்கள் கூடிப் பேச மரத்தடி வேண்டும். 'மரத்திற்கு வரி கொடுத்தால் மரத்தை வெட்டாமல் விட்டுவிட்டாலும் விட்டுவிடுவார்கள்' என்று அவள் எண்ணுகிருள். இது நடக்காதது என்று தெரிந்துகொள்ள அவளுக்கென்ன சட்டமா தெரியும்.

1. கரையோரம் ஐயனாரே
கரைக்குக் கீழ் பேத்தனாச்சி
முத்துப்பல் மூளியாமே
முகங் கழுவும் நீராவி

2. கம்மாய்க்குள் கருக மரம்
கண்டு பேசி ஆறு மாசம்
போனது மாசியும்
புரட்டாசி மாசமய்யா!

3. அவரை பாக்க மரம்
அவுக நாளும் பேசுமரம்
அந்த மரம் வெட்டாதய்யா
அதுக்குப் பகுதி நான் தாரேன்.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

[குறிப்பு: பகுதி வரி.]

## 17. விலைக்கு வாங்கலாமா?

முறை மாப்பிள்ளை யொருவன் தன்னை மணம் செய்துகொண்டால் என்னவெல்லாமோ வாங்கித் தருவதாகப் பெண்ணொருத்திக்கு ஆசை காட்டுகிருன். அன்பை விலைக்கு வாங்க முடியுமா? என்று அவனை அவள் கேட்கிருள்.

ஆண்: அஞ்சு கிணறு தாரேன்
அரைக் கோட்டை நெல்லு தாரேன்
வண்டி மாடு ரெண்டு தாரேன்
வாரியாடி என்னோடு?

பெண் : அஞ்சு கிணறு வேண்டாம்
அரைக் கோட்டை நெல்லும் வேண்டாம்
வண்டி மாடு ரெண்டும் வேண்டாம்; என்னை
எண்ணி நேரம் போக வேண்டாம்.

ஆண் : மாலைப் பதினி தாரேன்
மாசுக் கேத்த ரவிக்கை தாரேன்
பூலாங்கிழங்கு தாரேன்—என்னை
புருஷன்னு கூப்பிடு.

பெண் : மாலைப் பதினி வேண்டாம்
மாசுக் கேத்த ரவிக்கை வேண்டாம்
பூலாங்கிழங்கு வேண்டாம்—உன்னை
புருஷன்னு கூப்பிட வேண்டாம்.

ஆண் : மாரளவுத் தண்ணிக் குள்ளே
மன்னி மன்னிப் போற புள்ளே
மாராப்புச் சேலைக்குள்ளே
ரெண்டு மாங்கனியும் இருக்கக் கண்டேன்.

பெண் : மாங்கனியும் இல்ல மச்சான்
தேங்கனியும் இல்ல மச்சான்
பருசம் போட்ட மாப்பிள்ளைக்கு—ரெண்டு
பால் குடமும் கொண்டு போறேன்.

[சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா, கார்க்கி]

[கடைசி இரண்டு செய்யுட்களைப் போன்ற பாட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகின்றன.]

## 8. படிச்ச புருஷன்

அச்சடித்த புஸ்தகங்கள் புதிதாகப் பரவி வந்த காலம் கொஞ்சம் படித்த வாலிபன் அதை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். அப் புத்தகந்தான் கிராமத்தார் கண்ட முதல் புத்தகம். வாலிபன் மனைவிக்குப் பெருமை தாங்கவில்லை. அவளுக்குப்

படிக்கத் தெரியாது; அவளுக்குத் தெரிந்த கதைகளின் பெயரை சொல்லி இவைதானே அப்புத்தகத்திலிருப்பவை என்று கேட்கிறாள்.

அர்ச்சுனப் புத்திரனாம்
அரிச்சந்திர நாடகமாம்!
என்னத் தோட்ட மன்னவரு
என்ன சொல்லி வாசிக்காரோ?

அர்ச்சுனப் புத்திரனே
ஆரவல்லி நாடகமே!
என்னத் தோட்ட சாமியல்லோ
என்ன கவி பாடுதாரோ?

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 19. நல்ல வேட்டி கட்டிக்கொள்

மணமான சில நாட்களுக்குப் பின் மனைவி கணவனைப் பார்த்துச் சொல்லும் பாட்டு இது. மனைவி கணவனை பிறர் மதிக்க வாழச் சொல்லுகிறாள். சாய வேட்டி கட்டும் வழக்கம் அற்றுப் போனபின்பு அவள் அவனைச் சாய வேட்டி கட்ட வேண்டாமென்று சொல்கிறாள். "கிழிந்த வேட்டி கட்டிக்கொண்டு தெருவில் போகவேண்டாம்." நல்ல வேட்டி வாங்கித் தருகிறேன் என்று அவள் கூறுகிறாள்.

சாய வேட்டி கட்டாதீய
சபை யோட போகாதீய!
நல்லு வேட்டி வாங்கித்தாரேன்;
மேன்மையாக் கட்டிக்குங்க.

கந்த வேட்டி கட்டாதீய
கடைக் கெதுக்க நிக்காதீய!
நல்லு வேட்டி வாங்கித் தாரேன்:
மேன்மையாக் கட்டிக் குங்க.

பருத்திப் புஞ்சை பொழி நெடுக
பாதையிலே போற சாமி!
செருப்பு வாங்கி நான் தாரேன்;
சித்திரக்கால் நோகுது சாமே.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா
எஸ். எம். கார்க்கி]

## 20. விலங்கு மாட்டுவேன்

சக்கிலிய ஜாதியைச் சேர்ந்த இளைஞனொருவன் தன் மாமன் மகளைக் காதலித்தான். கல்யாணத்திற்கு, வேண்டியப் பணத்தை சம்பாதித்துத் தருவதாகச் சொல்லிப் பட்டணத்திற்குச் செல்லு கிறான். போனவன் சில மாதங்களாகத் திரும்பவில்லை. அவள் செருப்பு விற்கும் சாக்கில் நகரத்துச் சந்தைக்குச் செல்லுகிறாள். அங்கே அவனைக் காணலாம் என்று நம்புகிறாள். அவள் எதிர் பார்த்தபடியே சந்தையில் ஒரு மூலையில் அவன் செருப்புகளைப் பரப்பி வைத்துக்கொண்டு கடை போட்டிருப்பதைக் காண்கிறாள். மகிழ்ச்சியோடு அவன் அருகில் சென்று பேசுகிறாள். அவனுக்கும் மகிழ்ச்சிதான். அவனை விலங்கு மாட்டி ஊருக்கு அழைத்துச் செல்ல தான் வந்திருப்பதாகக் கூறுகிறாள். வேறொருவனாக இருந் தால் விலங்கு மாட்டியிருப்பாள். ஆனால், அத்தை மகனாயிற்றே என்று தான் யோசிக்கிறாளாம். அவள் மாட்டும் விலங்கு அவன் கைக்கு வலிக்கவா செய்யும்?

1. அத்தை மகனே நீ
அருப்புக் கோட்டைச் சக்கிலியா
செத்தாலைச் சந்தையிலே—உன்னை
செருப்பு விக்கக் கண்டனடா.

2. அத்தை மகனுன்னில்ல
செத்து பொறுத்திருந்தேன்
வேற ஒருவனுன்னா
விலங்கல்லோ மாட்டிடுவேன்.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 21. பழி வரட்டுமே!

சூரியனைக் கண்டு தாமரை மலரக்கூடாது என்று தடை விதித்தால் தாமரை கேட்குமா? அதுபோல யார் என்ன சொன்னாலும் காதலன் காதலியின் முகத்தைப் பாராமல் இருப்பானா? அவளை எங்கு கண்டாலும் அவனது முகம் மலருகிறது. அவள் ஊர் வாய்க்கு அஞ்சுகிறாள்.

"பாராதடா என் முகத்தை பழிவந்து சேர்ந்திடுமே" என்று சொல்கிறாள். அவன் உறுதி வாய்ந்தவன். ஊரார் என்ன சொன்னால் என்ன? அவர்கள் உன்னைப் பார்த்ததற்காகத் தண்டனை விதித்து, கழுவேற்றிவைத்தாலும் கழுவில் சித்திரவதைபட்டுக் கொண்டே நான் உன்னைப் பார்ப்பேன்" என்று கூறுகிறான் காதலன்,

அவள் : ஊடு தெருவிலே
ஒல்லிசமாப் போற சாமி
பாராதட என் முகத்தை
பழி வந்து சேர்ந்திடுமே.

அவன் : பழி வந்து சேர்ந்தா என்ன ?
பத்து நூறு சொன்னா என்ன ?
கழுவேறி இருந்தாலும்
காண்பனடி உன் முகத்தை,

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

## 22. சாக்குப்போக்குகள்

காதலர்கள் மறைவாகச் சந்திப்பதற்குப் பல இடையூறுகள் ஏற்படுவதுண்டு. அவ்விடையூறுகளைத் தீர்ப்பதற்குப் புதுப் புது வழிகள் அவர்களுக்குத் தோன்றும். சந்திப்பதற்குப் பல சாக்குப் போக்குகளை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கிறாள் காதலி.

பெண் : நிறச் சிகப்புச் சாயவேட்டி
என்னைக் கண்டாக் குறுஞ்சிரிப்பு;
குறுஞ்சிரிப்புத் தோழரோடே
கூடப் போகத் தோணுதையா!

வேலி அழியுதின்னு
விறகுக்கு நான் போறேன்;
காளங்கன்னு தப்பிச்சதுன்னு
கரை வழியே நீங்க வாங்க.

வெற்றிலை கைபிடிச்சி
வெறும் பாக்கு நாவி விட்டு
சுண்ணாம்பு இல்லையின்னு
சுற்றி வந்தால் ஆகாதோ!

மாமன் மகனே,
வாசமுள்ள மிச்சிப் பூவே!
ஆளோட நிக்கையிலே
யாரை விட்டுக் கூப்பிட்டீர்?

ஆண் : அத்தை மகளே,
ஆசை மதினியாரே!
ஏலந்தின்ன வாயாலே
தாளம் போட்டுக் கூப்பிட்டமா!

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 23. தனித்திருக்க வாரானோ!

பருத்தி பிடுங்கப் போகும்போதும் சோளக் கொல்லையில் வேலைக்குப் போகும்போதும் பத்துப் பெண்கள் நடுவில் தன்னைப் பார்க்கவரும் காதலன் கம்பங்கொல்லையில் தான் தனித்திருக்கும் போது வரமாட்டானோ? என்று நினைக்கிறாள் காதலி. அவள் நினைப்பே இப்பாடலாக உருவெடுக்கிறது.

ஒத்த மரத்தந்தோரி
உயர்ந்த மரங்காடல்குடி
தும்பல் தோப்பு நங்கம்மாள் புறா
குயிலிருந்து கூவுதையா !

சங்கிலிப் புருவே—நீ
சாமியோட சேகரமே
உங்களை நினைக்கையிலே
உண்ணுறதுஞ் சாதம் இல்லை.

கரையிலே கமுகமரம்
கரையின் கீழ் புங்கமரம்
கூரையிலே குருவித் தட்டு
கூடுறதும் எந்த விதம் ?

பருத்திப் புஞ்சை பொழி நெடுக
பல நாளும் வந்தவரே
ஒருத்தி எடுக்கயிலே
ஓடி வந்தால் ஆகாதோ ?

பருத்தி எடுக்கையிலே
பலநாளுங் கேட்ட மச்சான்
ஒத்தையிலே இருக்கையிலே
ஓடிவந்தால் ஆகாதோ !

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 24. என்ன சொல்லி கூப்பிடட்டும்?

மாமன் மகனையும், அத்தை மகனையும் கொழுந்தன் என்று பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள். கொழுந்தன் மணமகளுக்கும் முறையுடையவன். கொழுந்தன் கிராமத்திலேயே முதன் முதலாகஅயலூர் சென்று இங்லீஷ் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டுத் திரும்பியிருக்கிறான். இங்லீஷ் படித்த கொழுந்தனை எப்படிக் கூப்பிடுவது என்று கொழுந்திக்குத் தெரியவில்லை. இன்னும்

ஆங்கிலம் தெரியாத கிராமவாசிகள் என் பெயருக்கு என்ன இங்லீஷ் என்று கேட்கிறார்கள் அல்லவா? அதுபோலவே கொழுந்தியும் கொழுந்தனிடம் கேட்கிறாள். கொழுந்தன் சிரித்துக் கொண்டே பதில் சொல்கிறான்; கேள்வியும் பதிலுமே இப் பாடல்கள்.

அவள் : சாலையிலே போறவரே!
சந்திரனே, ஏ கொழுந்தா!
இங்லீசு படிக்கையிலே
உங்களை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?

அவன் : மாமன் மகளே!
மத்தாப்புச் சேலைக்காரி!
கோதும்பை லவுக்கைக்காரி!
கொழுந்தனுன்னு கூப்பிடம்மா.

அவள் : தூத்துக்குடியிலேயும்
துறைமுகத்தார் பள்ளிக்கூடம்;
பள்ளிக்கூடம் போய்ப் படிக்கும்
பாலகனே, ஏ கொழுந்தா!

பத்தும் படிச்சவரே,
பட்டணம் போய்ப் பார்த்தவரே!
விட்டுப் பிரிந்தானால்
விட்டிடுவேன் சீவனையே!

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 25. தாயும் மகளும்

தண்ணீருக்குச் சென்று வரும் மகள் நேரங் கழித்து வரும் காரணத்தைத் தாய் அறிந்துகொள்கிறாள். காதலனைச் சந்தித்துத் திரும்பத்தான் அவளுக்கு நேரம் ஆகிறதென்று தாய்க்குத் தெரிகிறது. தாய்க்கும் மகளின் காதலனைப் பிடித்துத்தான் இருக்கிறது. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவள் பேசுகிறாள். மகளும் தாயின் மன நிலையைப் புரிந்துகொண்டு தண்ணீ

ருக்குப் போய்வர நேரந்தான் ஆகும் என்று சொல்லுகிறாள். அவர்கள் உரையாடலே இப்பாடல்.

தாய்: தண்ணிக்குப் போ மகளே,
தலை கவுந்து வா மகளே!
கண்ணுக்கு உகந்தவனை
கடைக் கண்ணிட்டும் பார்க்கவேண்டாய்!

மகள்: பாசி படரும் தண்ணி;
பலபேரும் எடுக்கும் தண்ணி;
தெளிஞ்ச தண்ணி கோரெடுக்க
தேரமாகும் தாயாரே.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

[தேரம்=நேரமாகும்: வட்டார வழக்கு]

## 26. குடிகெடுக்கும் கொண்டை

இப்பாடலுக்கு விளக்கம் தேவை இல்லை. எது யாரைக் கெடுக்கும் என்பது பாடலைப் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

கூடார வண்டி கட்டி,
குட்டைக் காளை ரெண்டு பூட்டி,
கோடாலிக் கொண்டை போட்டு
கோவிலுக்குப் போற பொண்ணே!
ஆத்தாடி! இந்தக் கொண்டை
யாரைக் குடி கெடுக்க?

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 27. கற்கோட்டை ஏறிவா

காதலர்களின் உரையாடல் இது. காதலனது உறுதியைச் சோதிக்கும் வகையில் மறைவாகச் சந்திப்பதிலுள்ள கஷ்டங்களைக் காதலி எடுத்துக் காட்டி இவ்வளவு கஷ்டங்களையும் போக்கச் சீக்கிரம் திருமணம் செய்து கொள்ளுமாறு இலைமறை காயாகச் சொல்லுகிறாள்.

ஆண் : மானைக் கண்டேன் மந்தையிலே
மயிலைக் கண்டேன் கூட்டத்திலே
தேனைக் கண்டேன் தெருவினிலே
தீங்காமல் போரானே.

பெண் : ஆளைப் போல் ஆளில்லை
அவரைப் போல் சோதரில்லை.
பூரான் சுழி விழுந்தவரு
போகாத இடம் இல்லை.

கட்டிலுண்டு மெத்தையுண்டு
கதவோரம் படுக்கையுண்டு;
வீட்டிலொரு வேங்கையுண்டு;
வேளை பார்த்து வாங்காரடி.

ஆண் : நாலு கதவடி
நாராங்கிப் பின்னலடி
ஏழண்ணமார் காவலடி
எந்த விதம் நான் வருவேன்?

பெண் : கடுநாயைக் கண்ணைக்கட்டி
ஏவல் நாயை வாயைக்கட்டி
ஏழண்ணமார் கண்ணைக்கட்டி
ஏறிவாடா கற்கோட்டை!

நாலு கதவாயிலையா
நாராங்கிப் பின்னலையா
ஏழு பேரு காவலையா
எவ்விதமாய் நீ வருவே ?

ஆண் : காடுமலை தாண்டி
நரி புலி வாயைக் கட்டி,
ஏழு பேர் கண்ணைக்கட்டி
ஏறி வேண்டி கற்கோட்டை.

[சேகரித்தவர்: **எஸ். எஸ். போத்தையா**

## 28. யார் நிற்கிறது?

சேர்ந்திருக்கும் இரு காதலர்களிடையே ஊடல் தோன்றிற்று காதலி விலகிச் சென்று தூரத்தில் நிற்கிறாள். அவளது பொய்க் கோபத்தைத் தணிப்பதற்காகக் காதலன் பாடுவது.

புளிய மரத்தோரம்
புன்னையார் கோயிலோரம்
கெங்கைக் கரை யோரம்
தங்கந்தானோ நிற்கிறது ?

கம்மாக் கரையோரம்
கன்னி சேரி மூலையிலே
நாழம்பூ மடலோரம்
நங்கந்தானோ நிற்கிறது ?

(சேகரித்தவர் எஸ். எஸ். போத்தையா)

## 29. நீலக் கருங்குயிலே

காதலி கேட்கக் காதலன் தனது உள்ளத்தாபத்தை அவளிடம் வெளியிடுகிறான். தினைப்புனம் காத்த வள்ளியின் காதலை இப்பாடல் நினைவூட்டுகிறது.

வண்டாடும் சோலையிலே—நீ
வந்து புனம் காக்கையிலே
மாடப் புருவென்று—என் கண்ணம்மா !
மதி மயங்கிப் போனேண்டி.

மலர் பூக்கும் சோலையிலே—நீ
வந்து புனம் காக்கையிலே
மயிலோ குயிலோன்னு—என் கண்ணம்மா
நிலை மயங்கிப் போனேண்டி.

வாழைப் பழமே—என்
வைகாசி மாங்கனியே
நீலக் கருங்குயிலே...என் கண்ணம்மா
நிலை மயங்கிப் போனேண்டி.

[சேகரித்தவர். ஆர். கே. நல்லகண்ணு]

# 30. காதலன் பாட்டு

*காதலின் விளைவால் மறுகும் காதலனின் பாடல் இது.*

அஞ்சிலே கூடினமே
ஆரம் வாங்கிச் சூடினமே
பிஞ்சிலே கூடினமே
பூவும் வாங்கிச் சூடினமே!

வாழையடி உன் கூந்தல்
வயிரமடி பல்காவி
ஏழையடி நான் உனக்கு
இரங்கலையே உன் மனசு.

ஆசை வச்சேன் உன் மேலே
அரளி வச்சேன் கொல்லையிலே
பூவு வச்சேன் கொண்டையிலே
பொருந்தலையே உன் மனசு.

கன்னி இடைஞ்சலிலே
கட்டப் பாக்குத் தந்த புள்ளே!
நீ கொடுத்த செல்லப் பாக்கு
நெஞ்ச நெக்கச் சொக்குதடி.

# 31. உந்தனைக் காணாமல்

*ஒரு காதலன் காதலியைக் காணாத போது படும் வேதனையை அவளிடம் கூறுகிறான்.*

சாயப் புடவை கட்டி,
சாதாரணா ரவிக்கை போட்டு;
மாயமாய்ப் போற புள்ளே!
மயக்குதம்மா உன்னை.

ஈனுத வாழையடி
இளவாழைத் தண்டலவோ
காணுமல் உந்தனையே
கண்ணிரண்டுஞ் சோருதடி.

தென்றல் அடிக்குதடி
திரேகமெல்லாம் தவிருதடி;
உன் முகத்தைக் காணுமல்
ஊனுருகிப் போகுதடி.

அந்தி வேளை ஆகுதடி
ஆசை மிகத் தோணுதடி;
உந்தனைக் காணுமல்
ஊனுருகிப் போகுதடி.

## 32. வாது கவி

இப்பாடல் இளம் காதலர்களிடையே நடைபெறும் உரையாடல். காதலன் ‘ஆற்றுக்குள் வலை போட்டேன்’ என்று ஆரம்பிக்கிருன். காதலி ‘கெண்டை போல் ஒதுங்குவேன்’ என்று பதிலளிக்கிருள். அவனுடைய பிடிக்குள் அகப்படாமல் விலகிச் சென்று விடுவதாக அவள் கூறுகிருள். அவளைப் பிடிக்கப் பல உருவங்கள் எடுப்பதாக அவன் சொல்லுகிருன். அவன் எடுக்கும் உருவங்களுக்கு முரணுன உருவங்கள் எடுத்து விலகிச் செல்வதாகக் கூறுகிருள். கடைசியில் அவள் பூவாகப் பூப்பதாகவும், அவன் அதை எடுத்து மாலையாக தொடுப்பதாகவும், அம் மாலையை எடுத்துக் கொண்டு அவள் கோயிலுக்குள் நுழைவதாகவும், இவ்வாறு அவர்கள் ஒன்று சேர்வதாகவும் கூறி பாடல் முடிவடைகிறது. முதலில் முரண்பட்ட சித்திரங்களை வரைந்து கடைசியில் ஒன்றுபட்ட சித்திரத்தோடு முடியும் கவிக்கு வாது கவி என்று பெயர். இது போன்ற பாடல்கள் யாழ்பாணத் தமிழர்களிடையே பெரிதும் வழங்கி வருகின்றன. திருநெல்வேலி சீமையில் விளாத்திகுளம் வட்டாரத்தில் இப்பாடல் பாடப்படுகிறது. இதே பாடல் சில மாறுதல்களோடு திருநெல்வேலியை யடுத்த சிற்றூர்களிலும் பாடப்படுகின்றன.

*காதலன் :*
வட்டம் போட்டுக் கொக்கரிக்கும்
வலையைக் கண்டால் கத்தரிக்கும்
வெட்டும் பள்ள ஆத்துக்குள்ள
வீசும் வலைக் கண்ணி போட்டேன்.

*காதலி :*
வட்டச் சுழிக் கெண்டபோல
வலையை விட்டு ஒதுங்கு வேண்டா
அத்தை மகன் முத்துசாமி
அறிவுகெட்ட முட்டாளே.

*காதலன் :*
வட்டச் சுழிக் கெண்டை போல
வலையை விட்டு ஒதுங்கினாலும்
தொட்டி மூன்று தூண்டில் போட்டு
சுண்டிச் சுண்டி இழுப்பேனடி.

*காதலி :*
தொட்டி மூன்று தூண்டில் போட்டு—நீ
சுண்டிச் சுண்டி இழுத்தாலும்
ஊர்க்குருவி உருவங்கொண்டு
உயரப் பறந்திடுவேன்.

*காதலன் :*
ஊர்க்குருவி வேடங் கொண்டு
உயரப் பறந்தாலும்—நான்
ஏரோப்ளேன் உருவங்கொண்டு
எதிரே மறிப்பேனடி.

*காதலி :*
ஏரோப்ளேன் உருவங்கொண்டு
எதிரே மறித்தாலும்
பூமியில் விழுந்து நான்
புழுவாய் ஊர்ந்திடுவேன்.

*காதலன் :*
பூமியில் விழுந்து—நீ
புழுவாக ஊர்ந்தாலும்—நான்
கோழிக் குஞ்சு ரூபங்கொண்டு,
கொத்தி விழுங்குவேண்டி.

காதலி: கோழிக் குஞ்சு ரூபங் கொண்டு
கொத்தி விழுங்க வந்தால்
வல்லூறு ரூபங் கொண்டு
வானத்தில் பறப்பேனடா.

காதலன்: வல்லூறு ரூபங் கொண்டு
வானத்தில் பறக்கு முன்னே
பாம்பாக ரூபங் கொண்டு
பாதை மறிப்பேனடி.

காதலி: பாம்பாக ரூபங் கொண்டு
பாதை மறித்தாலும்
அயிரை உருவங்கொண்டு—நான்
ஆழியில் புகுந்திடுவேன்.

காதலன்: அயிரை உருவங் கொண்டு—நீ
ஆழியில் புகுந்தாலும்
கச்சை வலை கொண்டு—நான்
கலக்கிப் பிடிப்பேனடி.

காதலி: கச்சை வலை கொண்டு—நீ
கலக்கிப் பிடிச்சாலும்
கழிங்கால் கெண்டைபோல
கரையில் ஒதுங்குவேனடா.

காதலன்: கழிங்கால் கெண்டை போல—நீ
கரையில் ஒதுங்கினாலும்
ஊத்தாம் வலை கொண்டு—உன்னை
ஒதுக்கிப் பிடிப்பேனடி.

காதலி: ஊத்தாம் வலை கொண்டு
ஒதுக்கிப் பிடிச்சாலும்
புத்தூருக் கோயிலிலே
பூவாகப் பூத்திடுவேன்.

காதலன் : புத்தூருக் கோயிலிலே
பூவாகப் பூத்தாலும்
புத்தூரு ஆண்டி போலே
பூத்தொடுப்பேன் அப்பூவை.

காதலி : புத்தூரு கோயிலிலே
பூத்தொடுத்த பூ எடுத்து
சோலை சாமி கோயிலிலே
சொருகாம நுழைவேண்டா.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 33. புறப்படுவோம்

முறை மணமக்களிருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். குடும்பத் தகராறு காரணமாக அவர்களது பெற்றோர் திருமணத்திற்கு இசைவு தரவில்லை. அவர்களிருவரும் மதுரை சென்று பெற்றோர் அறியாமலே மணம் செய்து கொள்ள முடிவு செய்கிறார்கள். முன்னேற்பாட்டின்படி ஊருக்கு வெளியி லுள்ள நந்தவனத்திற்கு மணமக்கள் வருகிறார்கள். யாரையும் காணா மல் அவர்கள் பாடிக்கொண்டே கோவில்பட்டி ரயில் நிலையத்திற் குச் செல்கிறார்கள். அவர்களது வழிநடைப் பாட்டே இப்பாடல்.

காதலன் : பலாப்பழமே எந்தன்
பழம் பறிக்கும் செண்பகமே!
வாலைப் பசுங்கிளியே
வந்திருவாய் இந்த நேரம்.

குண்டுமல்லி குடநமல்லி
கோதையரே ஊசிமல்லி
கண்டவுடன் ஆசைப்படும்
கன்னியரே சாதிமல்லி.

நந்தியா வட்டப் புஷ்பம்
நறுமணம் கொண்ட புஷ்பம்
இன்பமுள்ள இருவாட்சி
ஏந்திழையார் வாங்கும் புஷ்பம்.

மன்மத பாண புஷ்பம்
மருக்கரணி ரோசா புஷ்பம்
பெண் கோதை மார்களெல்லாம்
பூரித்து வாங்கும் புஷ்பம்.

ஆத்துக்கு அருகாமையிலே
அடுத்திருக்கும் பூஞ்சோலை
பூஞ்சோலை தன்னை விட்டு
புறப்படுதேன் நேரம்

*காதலி :* புறப்படும் நேரமது
புண்ணியரே என்சாமி
விருப்பமுடன் நான் வருவேன்
வேளையது தான் பார்த்து.

போகுறது ரோட்டுவழி
போயிச் சேரும் கோவில்பட்டி
ஏறுறது துரு மெயிலு
இறங்கறது மதுரையிலே.

மதுரை நகர் வீதியிலே
மல்லிகைப் பூ வாங்கித் தந்தால்
சோதரான என் துரையே
சூட்டிருவேன் கொண்டையிலே.

*காதலன் :* அல்வாவும், மைசூர்பாவும்
அருமையான காராச் சேவும்
தல்லா குளம் போளியுடன்
தாராளமாய் வாங்கித்தாரேன்.

லட்டுமிட்டாய் பூந்திவடை
வெங்கச் சருள் போளியடி
கட்டுக் கட்டாய் வாங்கித்தாரேன்
கட்டழகி உந்தனுக்கு.

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

## 34. நம்ம சாமி

கணவன் பெருமையை மனைவி கருத்தாகக் கூறும் பாடல்கள் இத்தொகுப்பில் பல உள்ளன. எவ்வளவு பெரிய வியாபாரியாக இருந்தாலும் அவனுடைய சரக்குக்கு விலை தீர்ப்பவர் என்னுடைய கணவர்தான் என்று ஓர் உழவர் மகள் கூறுகிறாள்.

மானா மதுரையிலே
மாடுவிக்கும் சந்தையிலே
மாட்டு விலை கூறிவரும்
மகராசா நம்ம சாமி

சேலை விக்கும் செட்டியார்கள்
செப்பு விக்கும் வியாபாரி
செப்பு விலை மதிக்கும்
செல்லத்துரை நம்ம சாமி.

பட்டு விக்கும் செட்டியாரு
பகளம் விற்கும் வியாபாரி
பகளம் விலை தீர்த்து வரும்
பாண்டித்துரை நம்மசாமி.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

(பகளம்—பவளம்)

## 35. வந்த கள்வன் யார்?

இரவில் தன் காதலியைச் சந்தித்துவிட்டுத் திரும்புகிறான் ஒரு இளைஞன். மழை பொழியத் தொடங்குகிறது. அவன் வீட்டை நோக்கி ஓடுகிறான். இருட்டில் ஓடுபவனைக் கண்டு நாய் குரைக்கிறது. திண்ணையிலிருக்கும் அவனுடைய தந்தை யார் வருகிறார்களென்று பார்க்கிறார். அவர் காணாமல் அவன் சுவரேறிக் குதிக்கிறான். அவர், யார்? என்று குரல் கொடுக்கிறார். அவன் வெளியே போய் வந்ததற்குச் சாக்குப் போக்குகள் சொல்கிறான். தந்தை மகன் உரையாடலே இப்பாடல்.

தந்தை : திடு திடுன்னு மழை பெய்ய
திண்ணையிலே நானிருக்க
மண்ணேறி நாய் குலைக்க
வந்த கள்ளன் யாரடியோ.

மகன் : கள்ளனும் இல்லை ஐயா
கரு மறவர் தானுமில்லை
காராம் பசுவும் கன்றும்
கதறிக் கொண்டு ஓடக் கண்டேன்.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 36. ஏத்திவிடு கப்பலிலே

ரங்கூனிலிருந்து நாடு திரும்பிய இளைஞன் தான் காதலித்த பெண்ணொருத்தியை மணந்து கொண்டான். ரங்கூனில் அவன் சாதாரணத் தொழிலாளிதான். தாய் நாட்டில் எத்தொழிலும் அவனுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே ரங்கூனுக்குப் போக முடிவு செய்தான். மனைவியும் அவனோடு போவேனென்றாள். அவளுடைய தாய், தூரச் சீமைக்குப் போக வேண்டாம். அவன் மட்டும்போய் பணம் காசு சேர்த்துக்கொண்டு வரட்டும் என்கிறாள். மகள் தாய் மீது சீறி விழுகிறாள். தன்னைக் கணவனோடு கப்பலில் ஏற்றிவிடச் சொல்லுகிறாள். மகளின் பிடிவாதத்தைக் கண்டு தாய் சம்மதிக்கிறாள். இருவரும் கப்பலேறுகிறார்கள். "இன்று கையில் காசில்லாமல் ரங்கூனுக்குச் செல்லும் நாம் பொன்னோடு எப்பொழுது
று கேட்கிறாள். உலகம் தெரிந்த அவ
ான்?

வது :

கப் பலுமிருக்க
ரப்பா சோறிருக்க;
மத் தயிரிருக்க;
ற ரங்கத்துக்கு.

மகள் தாயிடம் கூறுவது:

பாலும் பழமும் வேண்டாம்;
பழனிச் சம்பா சோறும் வேண்டாம்!
ஏழெருமைத் தயிரும் வேண்டாம்;
ஏத்தி விடு கப்பலிலே.

மகள் தன் கணவனிடம் கூறுவது:

பட்டுக் கரை வேட்டியிலே
பாலூத்திச் சோறுகட்டி
இன்பமுள்ள கட்டுச் சோத்த
தின்பம் வாங்க மன்னவரே.

சன்னக்கம்பி வேட்டியிலே
பொன்னுங் கம்பி ஊடுருவி
தன்னிறமாய் போறசாமி
பொன்னிறமா வாரதெப்போ.

## 37. வங்காளம் போகாதே

கிராமத்து இளைஞனொருவனுக்கு வெகு நாளாக வேலை கிடைக்கவில்லை. தந்தை குத்தகைக்குப் பயிரிடும் நிலத்தில் கிடைக்கும் சொற்ப நெல் குடும்பச் செலவுக்குப் போதாது. ஊரில் பயிரிட வேறு நிலம் கிடைக்கவில்லை. நடுவைக் காலத்திலும், அறுவடைக் காலத்திலும்தான் கூலி வேலை கிடைக்கும். ஆகவே, வேறெங்காவது போய்ப் பிழைப்புத் தேடுவது என்று அவன் முடிவு செய்துவிட்டான். வறுமையில் உழலும் அவன் குடும்பத்தாரும் அவன் முடிவை ஆதரித்தனர். அச்சேரியில் அவனைக் காதலிக்கும் இளநங்கை யொருத்தி இருந்தாள். அவன் தூரதேசம் செல்வதை அவள் விரும்பவில்லை. ஆனால் அவனுடைய குடும்பப் பிரச்னையை அவளால் தீர்க்க முடியுமா? பிரிவை எண்ணித் துன்பமுறும் அப்பெண் இளைஞனிடம் தன் மனவேதனையை வெளியிடுகிறாள். அவன் அவளைத் தேற்றுவதற்காகச் சிங்காரக் கொண்டைக்குச் சிப்பு வாங்கிக்கொண்டு சீக்கிரமே திரும்பி வருவதாக வாக்களிக்கிறான். அவர்கள் உரையாடலே இப்பாடல்.

பெண் : **ஆசை மலர் கசகுதையா**
**அம்புருவிப் பாயுதையா**
**நேச மனம் நெஞ்சிலே**
**நெருப்பு தணல் ஆகுதையா.**

**பகளம் போல் கண்ணீரை**
**பக்கமெல்லாம் சோரவிட்டேன்**
**முத்துப் போல் கண்ணீரை**
**முகமெல்லாம் சோரவிட்டேன்.**

ஆண் : **வங்காளம் போறதுன்னு**
**மனசுலேயும் எண்ண வேண்டாம்**
**சிங்காரக் கொண்டைக் கெல்லாம்**
**சீப்பு வாங்கி நான் வாரேன்.**

[சேகரித்தவர்— எஸ். எஸ். போத்தையா]

## 38. பயமில்லை

*ஓடைக்கரையிலே தன் காதலனைக் கண்ட பெண்ணொருத்தி ஓடைக்குள் இறங்கி விடுகிறாள். கரை மறைவில் ஓடும் தண்ணீரினுள் நின்று ஏதோ வேலையில் ஈடுபட்டவள்போல் கற்களைப் பொறுக்குகிறாள். காதலன் நெருங்கி வந்து அவளிடம் பேச்சுக் கொடுக்கிறான். தான் அவளருகில் வருவதால்தான் அவள் பயப்படுகிறாளோ? என்றெண்ணி, அவன் அவளிடமே கேட்டு விடுகிறான். அவள் அவன் வருவதற்காகப் பயப்படவில்லை என்றும், கரைமறைவில் பேசுவதற்கு ஓர் வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ளவே ஓடைக்குள் இறங்கியதாகவும் கூறுகிறாள். அவர்கள் உரையாடலே இப்பாடல்.*

ஆண் : **ஓடையிலே கல் பொறுக்கி,**
**ஒதுங்கி நின்னு போறவளே!**
**பதறிடாமே உன் மனசு**
**பக்கத்திலே நான் வாரேன்.**

பெண் : ஓடைக்குள்ளே போனாலும்
உள்ளம் பதற மாட்டேன்!
வந்தால் மனம் மகிழ்வேன்
வந்திருந்தால் போதுமையா.

நில்லுங்கையா நான் வாரேன்
நிறுத்துங்கையா போடி நடையை
சொல்லுங்கையா உங்க செய்தி
சோதிக் கிளி வாய் திறந்து.

(சேகரித்தவர் எஸ். எஸ். போத்தையா)

## 39. சொல்வதெல்லாம் செய்வேன்

கமுகு போல வரையுடைய அழகிய கம்பந்தட்டையொன்றை வில்லாக வளைத்து, விளையாட்டாக அதனைச் சுழற்றிக்கொண்டு செல்லுகிறான் ஓரிளைஞன். அதனைப் பார்த்த அவனது காதலி, அவ்வில்லைக் கொண்டு மாடப்புறாத் தெறிக்கும்படி கெஞ்சுகிறாள். அவள் வாய் திறந்து கேட்டுவிட்டால், வளைத்தால் ஒடிந்துவிடக் கூடிய கம்பங்குச்சியும் காண்டீபமாகிவிடுமாம்; புறா மட்டுமா, மயிலையும் குயிலையும்கூட, அந்த வில்லால் தெறித்துவிடுவானாம். 'காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே காற்றையும், விண்ணையும் சாடுவோம்' என்ற பாரதியின் கருத்து இப்பாடலின் கருத்தை யொத்திருப்பதைக் காணலாம்.

1. கமுகங்கம்பு வில்லெடுத்து
கரை நெடுகப் போறவரே
மாடப்புறு தெறிப்பாயானால்
மனமும் உண்டு உங்க பேலே.

2. மயில் தெறிப்பேன், குயில் தெறிப்பேன்
மாடப்புறு நான் தெறிப்பேன்
சொன்ன புறு நான் தெறிப்பேன்
சோதி கிளி வாய் திறந்தால்.

(சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா)

## 40. வெற்றிலை வேண்டுமா?

ரோட்டில் கல்விரிப்பு வேலை நடக்கிறது. இடைவேளை நேரம். கூடையிலே கல் கொண்டுவந்து கொட்டும் பெண், தனது காதலன் ரோடு எஞ்சின் அருகில் இருப்பதைப் பார்க்கிறாள். அவனைச் சாப்பிட அழைப்பதற்கு அவள் ஒரு உபாயத்தைக் கையாளுகிறாள். வெற்றிலை வேண்டுமானால் வெளியே வா என்று அழைக்கிறாள். எஞ்சின் சக்கரத்தைத் துடைத்துக்கொண்டிருக்கும் அவன் காதில் இது விழுகிறதோ என்னவோ?

வெங்கல ரோதையிலே
வேலை செய்யும் பிள்ளையண்டா
வெத்திலை வேணுமின்னா
வெளியே வந்து வாங்கிப் போடு.

(சேகரித்தவர்: எஸ். எம். போத்தையா)

## 41. வேறு இடம் தேடிக்கொள்

மாமன் மகன் திருமணத்திற்குக் காலம் கடத்தி வருகிறான். காதலிக்குப் புடவையும், மோதிரமும் வாங்கிக் கொடுக்கிறான்; அவர்கள் உறவு வெளியாகிவிடுகிறது. உறவு வெளியான கோபத்தில் அவனை அவள் திட்டுகிறாள். வேறு இடம் பார்த்துக்கொள்ளக் கூடச் சொல்லுகிறாள். ஆனால் மனமார அதைச் சொல்லுகிறாளா?

பாசிப் பயத்தஞ் சீலை
பத்துருவா பெத்த சேலை
மாமன் மகன் எடுத்த சேலை
மன்றுக் கிழுத்திருச்சே.

பட்டு அருணாக் கொடி
பாவி மகன் தங்கக் கொடி
தங்கக் கொடிச் சாமியாலே
தலை பொறுகாச் சொல் கேட்டேன்.

அருப்பு மோதிரம் தந்தவனே
ஆசை வார்த்தை சொன்னவனே
விருப்பமில்லை உன் மேலே
வேறு இடம் தேடிக் கோடா.

(சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா)

(அருப்பு மோதிரம்—கொம்பு அறுத்துச் செய்த மோதிரம்)

## 42. காலம் கடத்துவேனே!

*தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் காதலர்களின் மறைவான சந்திப்பு வெளியாகி விடுகிறது. அவள் அவனைச் சந்திக்க அஞ்சுகிறாள். அவனைக் கண்டும் காணாததுபோல் விலகிச் செல்கிறாள். அவன் அவளை வழிமறித்து "ஏன் பராமுக மாகப் போகிறாய்?" என்று கேட்கிறான். தன் மன நிலைமையை அவள் அவனிடம் சொல்கிறாள். அவன் மனம் வருந்தி இனி நான் காலம் கடத்த மாட்டேன் என்று வாக்குறுதி அளித்துச் செல்கிறான்.*

ஆண் : கூடை மேல் கூடை வைத்து
கொழுந்தெடுக்கப் போற புள்ளே—உன்னைக்
கொள்வோன் மனம் குளிர
கொஞ்சம் நின்று பேசேண்டி.

பெண் : அக்கம் பக்கம் பாராமல்
அதிகாரமாய்ப் பேசும் மச்சான்
ஆனாலும் ஆகட்டும்
அடுத்த நாள் பேசிடுவேன்.

ஆண் : முத்துப் போல் பல்லழகி
முகங் கோணச் சொல்லழகி—என்னைக்
கண்டாக் கசக்குதோடி
கருத்து ஒன்னு ஆன பின்னே.

பெண் : கண்டால் கரக்காது
கருத்துள்ள அத்தானே—நான்
ஊரார் நகைக்க நஞ்சி
ஓடுகிறேன் வெகுதூரம்.

ஆண் : கொள்ளை ஆசை உனக்குண்டு
கொண்டு வாரேன் பரிசப் பணம்
உன் தந்தை தட்டினாலும்
ஒரு சொல்லில் முடித்துவிடு.

பெண் : பரிசப் பணம் கொண்டு வந்தால்
பார்த்துக் கொள்வேன் அத்தானே
பாவி நான் வாடும்படி
காலத்தைக் கடத்தாதே !

ஆண் : காதலாலே வேகுறேனே
கண்ணான பெண் மயிலே
காலங் கடத்து வேனோ
காத்திருந்தும் பார்ப்பேனு !

[சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா]

## 43. வேலை ஓடவில்லையா

பருத்தி விளையில் களை பிடுங்கும் தன் காதலியோடு இளைஞன் பேச்சுக் கொடுக்கிறான். அவள் அவனைப் பார்த்து வேலையைப் பார்த்துக்கொண்டு போகும்படி செல்லமாகச் சொல்லுகிறாள்.

ஆண் : பண்டாரங் காட்டுக் குள்ளே
பருத்திக் களை வெட்டையிலே
சிங்காரக் கொண்டையிலே
செல்ல மழை பெய்ஞ்சிராதோ!

பெண் : வேலங் கலப்பை வெட்டி
வெள்ளெருது ரெண்டு பூட்டி
தாமரைப் பூ லேஞ்சிக்கு
சாலடிக்கக் கூடுதில்லை.

[தாமரைப்பூ லேஞ்சி—காதலனது ஆடை அவனை ஆகுபெயராகக் குறிக்கும்.]

# நான்காம் பகுதி

## சமூகம்

1. பிழைப்பு இல்லையே.
2. லேஞ்சியில் இரத்தம்.
3. கலப்பு மணம்.
4. துயரம் வந்து சேர்ந்திடுமோ?
5. நொண்டி மாப்பிள்ளை.
6. மறுமணம்.
7. சேர்ந்தவர் பிரிந்தனர்,
8. குடியாதே.
9. கொடுமைக்காரன்.
10. எனக் கொருத்தன் கிடையாதோ?
11. நிற்கவா போகவா?
12. கைம்பெண்.
13. நம் பக்கம்.
14. சாதிக் கலகம்.
15. அடி வேண்டுமா?
16. கோர்ட்டுக்குப் போய் வீடு போச்சு.
17. பாலனுக்கோ கை கொடுத்தேன்.
18. ஏமாற்றம்.

# 1. பிழைப்பு இல்லையே !

புன்செய்க் காட்டு உழவர்களுக்கு ஆண்டில் ஒன்பது மாதங்கள் வேலை இராது. வானம் பார்த்த பூமியானதால் மழை இல்லாவிட்டால் ஆண்டு முழுவதுமே வேலை இராது. வயிற்றைக் கழுவ ஏதாவது வேலை செய்யவேண்டும். அதற்காகக் கிடைத்த வேலையை யெல்லாம் செய்து பார்ப்பார்கள். இப்பாடல் ஓர் உழவனின் கூற்று. அவன் என்னென்னவோ வேலைகள் செய்து பார்த்தான். எல்லாவற்றிலும் மிகக் கஷ்டமான வேலை ஒன்றையும் அவன் செய்து பார்த்தான். பெண்களை சாலை போடுவதற்கு அழைத்துச் சென்று அவர்களது வாயை அடக்கி வேலை வாங்கினான். எந்த வேலையும் சில நாட்களுக்கு மேல் ஓடவில்லை. எந்த வேலை செய்தாலும் பிழைப்பு நடக்கவில்லையே என்று அவன் வருந்துகிறான். கிராமப்புறத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை இப்பாடல் விளக்குகிறது.

வேலை செய்யத் தயாராயுள்ள இளைஞர்களின் ஆற்றல் சரியானபடி பயன்படுத்தப் படாமல் வீணாகப் போகிறது. இவ்வாற்றல் பயன்படுத்தப்பட்டால் நம் நாட்டில் உணவுப் பஞ்சம் இருக்குமா ?

வண்டி அடிச்சுப் பார்த்தேன்
வயக் காட்டை உழுது பார்த்தேன்
பெண்டுகளை மேய்ச்சுப் பார்த்தேன்
பிழைப்பு ஒண்ணும் நடக்கலியே !

(சேகரித்தவர் : தோழர். ஆர். கே. நல்லகண்ணு)

## 2. லேஞ்சியில் இரத்தம்!

தன் காதலனுக்கு தானே உழைத்துச் சேமித்து வைத்த பணத்தில் அவள் ஒரு லேஞ்சு வாங்கிக் கொடுத்திருந்தாள். அவனைப் பார்த்து ஊர் இளைஞரெல்லாம் பொறாமைப்பட்டார்கள். இரண்டு கட்சிபட்ட ஊரில் அவனும் ஒரு கட்சியில் இருந்தான். கட்சிப் பூசல் முற்றிப் குத்துவெட்டாக மாறியது. அக்கலகத்தில் அவன் குத்துப்பட்டு இறந்தான். லேஞ்சி ரத்தத்தில் நனைந்தது. இந்த ரத்தக்கறை அவளது வாழ்க்கையையே அழித்து விட்டது. கிராமத்தில் ஒற்றுமை குலைந்தது. கலகங்கள் நிகழும்பொழுது ஒன்றுமறியாத இளைஞரது வாழ்க்கை பாழாய்ப் போவதை இப்பாட்டுச் சுட்டிக் காட்டுகிறது.

ராமனு புரந்து லேஞ்சி
ராமம் போட்ட பட்டு லேஞ்சி
தோளுல போட்டவுடன்
சுத்துராளாம் லட்சம் பேரு!

கன்னி இடைஞ்சலிலே
கட்சிப் போர் நடக்கையிலே
நான் கொடுத்த நல்ல லேஞ்சு
நனையுதையா ரத்தத்துலே.

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

## 3. கலப்பு மணம்

இவ்வுரையாடல் முத்துப்பட்டனுக்கும், வாலப்பகடைக்கும் இடையே நிகழ்வது. முத்துப்பட்டன் வில்லுப்பாட்டுக் கதையில் மிக முக்கியமான கட்டம் இது. பிராமணனாகிய முத்துப்பட்டன் வாலப்பகடையின் இரு பெண்கள் மீது காதல் கொண்டான். அவர்களிடம் அவன் பேச்சுக் கொடுக்க அவர்கள் காட்டுக்குள் ஓடிப்போய் விடுகிறார்கள். காட்டுப் பாதை பழக்கமில்லாததால் அவன் பின்தங்கி விடுகிறான். தன் பெண்களிடமிருந்து செய்தியை யறிந்த வாலப்பகடை கத்தியை எடுத்துக் கொண்டு தன் மக்களி

டம் குறும்பு செய்தவனைக் கொன்றுவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு தேடி வருகிறான். முத்துப்பட்டன் மயங்கிக் கிடக்கும் நிலையில் வாலப்பகடை அவனைக் காண்கிறான். கல்லெறிந்து அவனை எழுப்புகிறான்; எழுந்தவுடன் வந்தவன் யாரென்று அறிந்து அவனை "மாமா" என்று அழைத்துத் தனக்கு இரு பெண்களையும் மணம் செய்து வைக்கும்படி வேண்டுகிறான். வாலப்பகடை அதிர்ச்சி அடைகிறான். அதிர்ச்சி தெளிந்ததும் திருமணத்திற்குச் சில நிபந்தனைகள் விதிக்கிறான். எல்லா நிபந்தனைகளையும் முத்துப்பட்டன் தயக்கமின்றி ஏற்றுக் கொள்கிறான். அதன் பின்னர் திருமணம் செய்து வைக்க வாலப்பகடை ஒப்புக்கொள்கிறான். முத்துப்பட்டன் சொன்ன சொல் தவறவில்லை. தன் சாதி உயர்வையும், சொத்து சுகங்களையும் தியாகம் செய்தான், சக்கிலியர் குடியோடு சேர்ந்து கொண்டான். அவர்களுக்குத் தலைவனானான். பொதிகை மலைச்சாரலில் அப்பகுதி உழவர் மாடுகளை மேய்த்துப் பாதுகாத்துக் கொடுத்தான். அக்காலத்தில் மாடுகளையும் வியாபாரப் பண்டங்களையும் கொள்ளையடிக்கும் கூட்டங்கள் பல உண்டு. பலமுறை கொள்ளைக் கூட்டங்களை எதிர்த்துப் போராடி உழவர் மக்களின் செல்வமான பசு மந்தைகளைப் பாதுகாத்தான். முடிவில் இத்தகைய போராட்டமொன்றில் உயிர் நீத்தான். மனைவியர் இருவரும் அவனோடு உடன் கட்டை ஏறினர். முத்துப்பட்டனுக்கு பாபநாசம் அணைக்கட்டிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள சொரி முத்தையன் கோயிலின் வடக்கு வாசலில் கோயிலொன்றிருக்கிறது. அவனுடைய வீரத்தைப்போற்றி இன்றும் மக்கள் செருப்புகளைக் காணிக்கைக் கொண்டு செலுத்தி வருகின்றனர். இக்காணிக்கைகள் செருப்பு மலையாகக் குவிந்திருப்பதை இன்றும் காணலாம்.

பகடை 1: நாயல்லவோ எங்கள் குலம் ஓ நயினாரே
நாற்ற முள்ள விடக் கோடிப்போம் ஓ நயினாரே
செத்த மாடறுக்க வேணும் ஓ நயினாரே
சேரிக் கெல்லாம் பங்கிட வேணும் ஓ நயினாரே
ஆட்டுத்தோலும் மாட்டுத் தோலும் அழுக வைப்போமே

அதை யெடுத்து உனக்கு நன்றாய் அடியறுப்போமே
அடியறுப்போம், சுவடு தைப்போம், வாரறுப்போமே
அதை எடுத்துக் கடைக்குக் கடை கொண்டு விற்போமே
சாராயம் கள் குடிப்போம் வெறிபிடித்த பேர்
சாதியிலே சக்கிலியன் தான் நயினாரே.

*பட்டன் 2:* கோபம் வேண்டாம் மாமனாரே சொல்லக் கேளும் நீர்
கோடி கோடி தர்மமுண்டு உனது மக்களை
சாதி முறையாகத் தாலி கட்டி வைத்தக்கால்
சகல தொழிலும் உங்கள் கூடச் செய்வேன் நான்
தாய் தகப்பன் நீயல்லவோ இன்று முதலுக்கு
சாதி சனம் போல் நின்று வாரேன் குடிலுக்கு.

*சகடை 3:* வருகிறேன் என்றீர் ஸ்வாமி என்ன பிரமையோ!
வருமிடத்துச் சொல்லுவது வகைக்கு வருமோ!
அப்படிச் சிவன் கற்பனை உண்டுமானால்
நாற்பது நாளைக்குள் முப்புரி நூலும் குடுமியும்
மெய்யுடன் அறுத் தெறிந்து எங்களைப் போல்
ஒப்புடன் நீர் செருப்புக் கட்டி வந்தாக்கால்
எப்படியாகிலும் மக்களைக் கைப்பிடித்துத்தாரேன்.

*பட்டன் 4:* தாரேனென்று சொன்ன மொழி சத்தியமென்று
சாட்சி வை; சூரியன் மேல் சஞ்சலமில்லாமல்
எந்தனை ஊருக்குத் தான் அனுப்பு மாமா!

*[முத்துப்பட்டன் வில்லுப் பாட்டிலிருந்து]*

## 4. துயரம் வந்து சேர்ந்திடுமோ?

*அவன் அவளைக் காதலித்துக் கலந்துவிட்டான். இருவரும் ஒரு சாதியல்ல. அவளை மணம் செய்துகொண்டால் வரக்கூடிய சாதிக் கொடுமைகளை நினைத்துப் பார்த்து அவன் உள்ளம் நடுங்குகிறது. தன்னையுமறியாமல் வாய்விட்டுத் தன் எண்ணத்தை வெளி*

யிடுகிறான். அதைக் கேட்டுக்கொண்டு வந்துவிட்ட அவள் அவன் பயத்தைப் போக்க வேறொரு பயத்தை உண்டாக்குகிறாள்; முள்ளை முள்ளால் எடுப்பதுபோல. நாடு நடுங்கும் காதலனையும் தைரியமூட்டும் காதலியையும் இப்பாடலில் நாம் சந்திக்கிறோம்.

ஆண் : மட்டிச்ச கொண்டைக்காரி
மாநிறத்துப் பிள்ளையவ
தொட்டுட்ட நாள் முதலா
துயரம் வந்து சேர்ந்திருபோ.

பெண் : துயரம் வந்து சேர்ந்திருமே,
துன்பம் வந்து சேர்ந்திருமே,
பழி இழுத்துப் போட்டிருவேன்,
பழிகாரா உந்தன் மேலே !

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

## 5. நொண்டி மாப்பிள்ளை

உழவர்கள் ஏழைகள், ஊனை உருக்கி உழைத்தாலும் கலியாணம் காட்சிக்குக் காசு மிஞ்சுவதில்லை. நாலைந்து பெண்களைப் பெற்று விட்டாலோ உழவன்பாடு திண்டாட்டந்தான். பருவம் வந்த பல பெண்களைப் பெற்ற தாய் தந்தையர்கள் தங்கள் பெண்களின் உணர்ச்சிகளைவிட அவர்கள் உயிரைப் பாதுகாக்கக் கூடிய கஞ்சியைத்தான் பெரிதாகக் கருதுகிறார்கள். நொண்டியாய் இருந்தாலும் கஞ்சிக்கு வழி இருந்தால், அவனுக்குப் பெண்ணைக் கைப் பிடித்துக் கொடுத்து விடுகிறார்கள். தாய் தந்தையர் துன்பம் காணச் சகிக்காத பெண்ணும் அத்திருமணத்திற்கு இசைந்து விடுகிறாள். பெற்றோர் மனம் திருப்தி அடைகிறது. ஆனால் வாழ்க்கைப்பட்ட பெண்ணுக்கு மன அமைதி உண்டா? அவள் உள்ளக் குமுறலை இப்பாட்டில் கேளுங்கள்.

கஞ்சிக் கலயமென்ன
நானிருந்த செல்வமென்ன !
நொண்டிக்கே வாழ்க்கைப்பட்டு
நொந்த குடி ஆனேனே !

கிளியைக் கிளி பார்க்க
கிளி முகத்த நான் பார்க்க
வேந்து முகர் பார்க்க
விதித்தாரே உடையாளி.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

[குறிப்பு: உடையாளி - கடவுள்.]

## 6. மறுமணம்

இல்வாழ்க்கையில் ஆணுக்கு உயர்வும், பெண்ணுக்குத் தாழ்வும் நமது சமுதாயத்தில் காணப்படுகிறது. பல காரணங்களுக்காக ஆண் மகன் மனைவி வாழும்போதே மறுமணம் செய்து கொள்ளலாம். குழந்தைகளில்லாத காரணம், சொத்துள்ள முறைப் பெண் இருக்கும் காரணம் குடும்பப் பூசல் இத்தகைய காரணங்களால் அவன் மறுமுறை மணம் செய்து கொள்ளலாம். இம்முறை இப்பொழுது சட்டத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் ஆண்களும் பெண்களும் பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் சமமானவர்களாக ஆகும் வரையில் சட்டம் ஒருபுறம் இருப்பினும், இம்முறை நீடித்துக் கொண்டுதான் இருக்கும். இப்பாடலில் மறுமணம் செய்து கொள்ளும், தனது கணவனை நினைத்து மனைவியின் மனத்தில் தோன்றும் எண்ணங்களும் உணர்ச்சிகளும் வெளியாகின்றன. தான் முதலில் சூடிய வாடற்பூவைத்தான் மற்றொருத்தி சூடப்போகிறாள் என்று அவள் சிறிது ஆறுதல் கொள்கிறாள். ஆனால் இவ்வாறுதல் வாழ்க்கை முழுதும் நிலைக்குமா? என்று அப்பொழுது அவளுக்குத் தெரியாது.

மஞ்சள் மலையேறி
மாலையிடப் போற சாமி,
கொஞ்ச வயதிலேயே
கூடினவ வாடுறேனே.

அஞ்சிலென்ன மிஞ்சினது?
அழகிலென்ன மீறினது?
கொஞ்ச வயதிலேயே
கூடினது போயாச்சே.

நான் முடிஞ்சு நான் கழிச்ச
நல்லதொரு சண்பகப் பூ
யார் முடிஞ்சு என்ன செய்ய—பழைய
அன்பிருந்தால் போதுமையா!

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

## 7. சேர்ந்தவர் பிரிந்தனர்

ஆணுக்கும் பெண்ணுக்கும் நமது சமூகத்தில் சமநீதியில்லை. பெண்களுக்குக் கடுமையான கற்பு விதிகளும், ஆண்களுக்குக் நெகிழ்வான ஒழுக்க முறைமைகளும் உள்ள சமுதாயம் நமது சமுதாயம். இந்த முறையைக் கண்டித்துப் பாரதியும்.

"கற்பு நிலையென்று சொல வந்தார்
இரு கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்."

என்று பாடினார். இந்நாட்டுப் பாடலில் மணமாகி இன்பமாக வாழ்ந்த மனைவி கணவனின் ஒழுக்கக் கேட்டால் உள்ளம் உருகி வாடுவதை சித்தரிக்கிறது. அவள் தனது தனிமையைப் பல உருவங்களால் விளக்குகிறாள். கலங்கிய கண்மாய்த் தண்ணீர், ஒத்தை வண்டி மாடு மூக்காணிக் குச்சி முதலிய உவமைகள் மூலம் தனது தனிமையைப் புலப்படுத்துகிறாள். அவளது ஏக்கமும் தனிமை உணர்வும் இப்பாடலில் வெளியாகின்றன. ஒழுக்க முறையில் சமநீதியின்மையை இப்பாடல் சுட்டிக் காட்டுகிறது.

சேர்ந்து இருந்தமையா
சேலந்துக் கெண்டை போல
நாரை வந்து மீனைத் தொட
நைந்ததையா நம்முறவு.

ஊருணித் தண்ணி போல
ஒத்திருந்தோம் ஒரு வருஷம்
கம்மாத் தண்ணி மண்டி போல
கலங்கிட்டோமே நாலுவிதம்.

ஓமமும், சீரகமும் போல்
ஒத்திருந்தோம் சில காலம்
வெந்தயம் வந்தல்லோ
வேறு தூறு ஆக்கிரிச்சு.

வண்டியிலே வீராட்டம்
வாச்ச தின்னு நானிருந்தேன்
மூக்காணிக் குச்சி போல
முறிந்ததையா நம்முறவு.

கூடினமோ கூடினமோ
கூட்டு வண்டிக் காளை போல
விட்டுப் பிரிஞ்சாயே
ஒத்தை வண்டிக் காளை போல.

சேர்ந்தோமே சேர்ந்தோமே
செப்பிலிட்ட மை போலே
செப்பு உடைஞ்சதுமே
சேருறது எந்தக் காலம்?

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

*[குறிப்பு: வெந்தயம்-சக்களத்தி; மூக்காணிக்குச்சி-நுகக்கால்குச்சி.]*

## 8. குடியாதே

*குடிகாரக் கணவனுக்குப், அவனைத் திருத்த முயலும் மனைவிக்கும் நடக்கும் உரையாடலே இப்பாடல் கடைசி இரண்டு அடிகளில் அவள்*

"வெள்ளையத் தேவன் கிட்ட
வெட்டுப்பட்டுச் சாகாதீங்க"

என்று அவனைப் பயமுறுத்துகிறாள்.

இதற்குக் காரணமென்ன? உழைத்துக் கிடைக்கும் சிறிய ஊதியத்தைக் கள் குடித்து விரயஞ் செய்துவிட்டால் பிறகு செலவுக்குக் கடன்தான் வாங்க நேரிடும். வெள்ளையத் தேவன் கொடுக்கல் வாங்கல்காரன். ஒரு ரூபாய்க்கு ஒரு வாரத்திற்கு ஒரு அணாதான் வட்டி. அவனிடம் கடன் வாங்கினால் வட்டியையும் முதலையும், ஒரு நாளும் திருப்பிக் கொடுக்க முடியாது. கொடுக்க முடியாவிட்டால் அவன் கோர்ட்டுக்குப் போகமாட்டான். அவனே அரிவாளைத் தூக்கிக்கொண்டு வருவான். "இந்த நிலைமை உனக்கு ஏற்பட வேண்டுமா?" என்று மனைவி கேட்கிறாள்.

கணவன் : கள்ளுக் குடிச்சாலு—என்
கண்ணு ரெண்டுஞ் சொக்குதடி
நான் வீட்டுக்குள் நுழையத்
தடமே மிரளுதடி.

மனைவி : சிகரெட்டுக் குடியாதீங்க,
சின்னப் புள்ள ஆகாதீங்க
மெத்தக் குடியாதீங்க
பித்தம் சிரசிலேறும்.

போயிலையும் போடாதீங்க
புகை சுருட்டுப் பிடியாதீங்க
வெள்ளையத் தேவன் கிட்ட
வெட்டுப் பட்டுச் சாகாதீங்க.

[குறிப்பு : போயிலை - புகையிலை.]

## 9. கொடுமைக்காரன்

அயலூரில் கொடுமைக்காரன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டாள் ஒருத்தி. அவன் பெண்ணருமை தெரியாமல் அவளைக் கொ(

மைப் படுத்துகிறான். பல நாள் பொறுத்துப் பார்த்தாள். அடி தாங்க முடியவில்லை. அவனை விட்டுப் போய்விடுவதென்று முடிவு செய்தாள். முதல் பாட்டு அவள் அவனிடம் சொல்வது. அவன் அவளைப் போக விடவில்லை. அவன் அயர்ந்து உறங்கும்போது சொல்லாமல் ஓடிப்போய் விடுகிறாள். ஊருணிக் கரையோரமாக ஊர் திரும்பும் அப்பெண் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளு மாறு இரண்டாவது பாடல். ஊர்வெளியில் உழுதுகொண்டிருப் போரிடம் தான் சண்டை போட்டுப் போவதாகக் கணவனிடம் சொல்லுமாறு கேட்டுக்கொள்ளுகிறாள்—அது மூன்றும் பாடல்.

அறியாத ஊரிலேயும்—நான்
தெரியாமல் வாக்கப்பட்டேன்
அடியாத்தே அடியாத்தே—நான்
விடியக் காலெ ஓடிப் போறேன்.

ஊருக்குப் போறேன்னு
ஒருத்தருட்டச் சொல்லாம
ஊருணிக் கரையோரம்
உழப்பி விட்டேன் கண்ணை.

ஒத்தப் பனை யோரம்
உழுகிற நாயன் மாரே
கத்திக் கிட்டுப் போறேன்னு—என்
கணவங்கிட்டச் சொல்லிடுங்க.

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

## 10. எனக்கொருத்தன் கிடையாதோ !

ஒரு பெண் ஒருவனைக் காதலித்தாள்; அவனுக்காக ஊர்வம்பை எல்லாம் சகித்துக்கொண்டாள். அவன் தன்னை மணந்து கொள்ளு வான் என்று நம்பினாள். அவன் நம்பிக்கை மோசம் செய்தான். அவன்மீது கோபம் கொண்டாள். அவளுடைய சீற்றத்தின் வெளியீடே இப்பாடல்.

பாதையிலே பச்சை வச்சேன்
பசுங்கிளியைக் காவல் வச்சேன்
கோவலவன் பச்சையாலே
கோடி மறு நாளிருந்தேன்.

பாதையிலே பச்சை வச்சேன்
பச்சைக் கேச்சாய் நீ தெளித்தேன்
பச்சையோட வாசனையை
பாவி முட்டாளறியலையே.

சத்தியம் பலியாதோ?
சாமி உன்னைக் கேட்காதோ?
கிழக்கிருக்கும் சூரியன் போல்
எனக்கொருத்தன் கிடையாதோ?

## 11. நிற்கவா, போகவா?

மலையிலே சுள்ளி பொறுக்கிச் சேர்த்து ஒரு கொடியால் கட்டிக்கொண்டிருக்கிறாள் மணமான ஒரு பெண். மணமாகு முன்பு அவள் ஓர் வாலிபனைக் காதலித்தாள். ஆனால் வேறொருவனுக்கும் அவளுக்கும் திருமணமாயிற்று. பழைய நண்பனை அவள் சந்திக்கிறாள். அவனிடம் இரண்டு வார்த்தை பேசலாம் என்று எண்ணுகிறாள். சுள்ளியைக் கட்ட அவனை உதவிக்கழைப்பது போல் பேச்சுக் கொடுக்கிறாள். அவனும் அடக்கமாகப் பதில் சொல்லுகிறான். அவர்கள் உரையாடலே இப்பாடல். சிவகிரி மலையிலும் அதற்கடுத்தாற்போன்ற பிரதேசங்களிலும் சுள்ளி பொறுக்க மலைக்குச் செல்லும் பெண்கள் இன்றும் இவைபோன்ற பாடல்களைப் பாடுகிறார்கள்.

பெண்: சாலையிலே விறகு வெட்டி
சன்னல் பின்னல் கொடி கட்டி
தூர வழி போற மன்னா
தூக்கி விட்டுப் போவுமய்யா.

ஆண் :

தூக்கியும் விட்டிருவேன்
துணைக்குச் சேந்து வந்திருவேன்
உம் புருஷன் கண்டான்னு
ஒடுதலை விசுவானே.

ஆண் :

கத்தாழை ஓரத்திலே
கழுத்தளவு தண்ணியிலே
நீலக் கருங்குயிலே
நிற்கட்டுமா போகட்டுமா ?

பெண் :

நிக்கச் சொன்னா நிட்டூரம்
போகச் சொன்னா பொல்லாப்பு
நானொருத்தன் பெண்டாட்டி
நாயென்ன சொல்லட்டும்.

(சேகரித்தவர் : எஸ். எம். கார்க்கி)

## 12. கைம்பெண்

இளமையில் கணவனை இழந்த கைம்பெண்களின் நிலைமை நமது நாட்டில் பரிதாபத்துக்குரியது. அவர்கள் எந்த விழாவிலும் கலந்துகொள்ளக் கூடாது. அவர்கள் வரவு சகுனத் தடையாகக் கருதப்படும். இவ்வாறு வாழ்விழந்துவிட்ட ஒரு விதவையின் புலம்பலை இப்பாடலில் கேட்கிறோம்.

அஞ்சி சரம் பூவானேன்
ஆறு பந்து மாலையானேன்
ஆடு செய்த தீவினையோ
அரும்புதிர்ந்து வாடுகிறேன்.

(சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா)

## 13. நம் பக்கம்

ஊருக்கு ஒரு வாயாடி நிச்சயமாக இருப்பான். கட்சி இல்லாத ஊரும் இராது. வாயாடிகள் ஏதாவதொரு கட்சியில்

சேர்ந்து கொண்டு சண்டைகளை மூட்டி விடுவார்கள்; கிராமத்தார்களும் இவர்களை நம்பி இரண்டு பட்டிருப்பார்கள். இத்தகைய வாயாடி ஒருவனை இப்பாட்டு நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. இக்கிராமம் ஒரு ஜமீன் கிராமம். ஜமீன்தாரைத் தெரியும் என்று சொல்லி குழந்தைசாமி என்ற வாயாடி அடிக்கடி ஜமீன்தார் இருக்கும் எட்டையபுரம் போய் வருவான். அவரைக் கண்டதாகவும், அவர் தன் சொல்படி கேட்பார் என்றும் ஊரில் வந்து புளுகுவான். அவன் ஊரிலுள்ள இரண்டு கட்சிகளில் ஒன்றில் சேர்ந்து கொண்டான். அவன் சேர்ந்து கொண்ட கட்சியிலுள்ளவர்கள், 'அவன் பேசினால் கோர்ட்டிலுள்ள வக்கீல்களெல்லாம் வாயடைத்துப் போய் விடுவார்கள்' என்று பேசிக் கொள்ளுகிறார்கள். வாயாடி வக்கீல்களைவிட குழந்தைசாமி பெரிய வாயாடி என்பது அவர்களுடைய கருத்து. இந்த வாயாடி தங்களுடைய கட்சியிலிருப்பதால் தங்களுக்கு வெற்றி கிடைக்குமென்று அவர்கள் நம்புகிறார்கள். 'ஒன்று பட்டாலுண்டு வாழ்வு' என்ற பாரதியின் வாக்கை அறியாதவர்கள் அக்கிராம மக்கள் இவனைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டதால் அவர்கள் என்ன பாடுபடப் போகிறார்களோ? பட்டபிறகல்லவா அது தெரியும்?

அரக்கு லேஞ்சி வரிஞ்சி கட்டி
அரமனையில் உட்காருந்து
கோடடைச்சு வார்த்தை சொல்லும்
குழந்தை சாமி நம்ம பக்கம்.

(சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா)

## 14. சாதிக் கலகம்

சாதிப் பூசல்களினால் பல கலகங்கள் விளைகின்றன. நாடார் மறவர் கலகங்கள் பல தோன்றி உழைக்கும் மக்களின் ஒற்றுமையைச் சிதைப்பதுண்டு. இவை அவ்வச்சாதிகளிலுள்ள பெரிய பணக்காரர்களால் தூண்டிவிடப்படும். இக்கலகங்கள் நியாயமற்றவை. ஒரு பாவமுமறியாத குழந்தைகள்கூட அவற்றால் சாகின்றன என்ற கருத்தைக் கொண்டுள்ளது இப்பாடல்.

உருண்ட மலை திரண்ட மலை
ஒய்யாரக் கழுகு மலை
பாசி படர்ந்த மலை
பங்குனித் தேர் ஓடும் மலை.

பங்குனி மாதத்தையிலே
பதினெட்டாம் தேதியிலே
கரும்பு திங்கிற காலையிலே
கலகம் வந்த நியாயமென்ன ?

மூல முடங்கலிலே
முந்நூறு கார வீடு
கார வீட்டு முத்து காடான்
கண்ணு வச்சிக் குத்தினானே.

குத்தினது முத்து காடான்
குலைவயிட்டான் கப்பு காடான்
மானேஜராகப் போயி
மாண்டாரே சாறுரெல்லாம்.

அமர்க்களமாய் ரணக்களமாய்
அடுகளத்துப் படுகளமாய்
படு களத்தில் மாளலாமா ?
பாலன் சிறு குழந்தை

[சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா]

## 15. அடி வேண்டுமா?

கல்லூரிக்குச் செல்லும்பொழுது தன்னைச் சில மாணவர்கள் பின்தொடர்ந்து வருவதாகவும் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் ஒரு மாணவி காந்தி அடிகளுக்கு எழுதிக்

கேட்டாள். அவர்கள் தகாத முறையில் நடந்து கொண்டால் செருப்பைக் கழற்றி அடிக்கச் சொல்லி அவர் பதில் எழுதினார். மகளிர் கல்லூரிக்கு முன்பும், இளம் பெண்கள் கூடுமிடங்களிலும் சுற்றித் திரியும் வாலிபர்களை இன்றும் பார்க்கலாம். கிராமங்களிலும் இத்தகைய போக்கிரிக் கூட்டம் இருக்கும். அவர்களைப் பார்த்துத் துணிச்சலுள்ள பெண்கள் பேசும் பேச்சை இப்பாடல்களில் காணலாம்.

குர்ரக் கடுக்கன் போட்டு
குதிரை மேல் போறவனே
குறு குறுன்னு பார்த்தயானு
குடுத்திடுவேன் செவிட்டினிலே.

பொம்பிளைக புளிய மரம்
ஆம்பிளைக கூடிர் மரம்
ஆம்பிளைப் பயல்களுக்கு
அங்கென்ன கண்ணோட்டம்?

நடலைப்பயறு போல
வெடலைப்பய ரெண்டு பேரு
பொழுதடைஞ்ச நேரமெல்லாம்
போன் பொரணி பேசுறாங்க.

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

[குறிப்பு: பொரணி - புறம் பேசுதல்.]

## 16. கோர்ட்டுக்குப் போய் வீடு போச்சு

சிவில் வழக்குகள் இல்லாத கிராமங்களே இரா. ஒரு கிராமத்தில் பெரிய குடும்பம் ஒன்றிருந்தது. அக்குடும்பத்தின் தலைவர் இறந்துபோனார். சகோதரர்களுக்குள் சண்டைமூண்டதும் கோர்ட்டுக்குப் போனார்கள். வாயிதா வாயிதாவாக அலைந்தார்கள். செலவு ஏராளமாக ஆயிற்று; கடன் ஏறிற்று. சொத்து

முழுவதும் கடன்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். எதுவும் மிஞ்சவில்லை. கடைசியில் வாயிதாவுக்குப் போகப் பணமில்லை. வாயிதாவும் தீர்ந்தது; சொத்தும் காலி. இதை நினைத்து அவர்களுடைய கிழட்டுத் தாயார் வருந்துகிறாள்.

பட்டுநூலும் காயிதமாய்;
பரமக்குடி வாயிதாவாம்!
தீராத வாயிதாவை
தீர்த்துவருவர் என்றிருந்தேன்.

பெரிய தலைவாசல்
பேர் போன நாயக்கர் வீடு;
மட்டங்கள் தலை எடுத்து
வெட்ட வெளி ஆக்கினீர்.

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

[குறிப்பு: மட்டம் - சிறுவர்.]

## 17. பாலனுக்கோ கைகொடுத்தேன்

குழந்தை மணமென்றால் மணமக்கள் இருவரும் குழந்தைகள் என்றுதான் நாம் புரிந்துகொள்கிறோம். ஆனால் கோவில்பட்டி தாலுகாவில் ஒரு சாதியினரிடையே பருவப் பெண்ணைக் குழந்தைக்கு மணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்தது. முறை மாப்பிள்ளையாக இருக்கும். நாலைந்து வயதுப் பையனுக்கு 17, 18 வயதுப் பெண்ணைச் சொத்துரிமைக்காக மணம் செய்து வைக்கும் வழக்கம் சமீபகாலம் வரை இருந்துவந்தது. வயதுவந்த பெண் பருவமெய்திய பின் ஏழு வருஷங்கள் மணமாகாமல் இருந்தாள். உள்ளூர் இளைஞன் ஒருவன் மீது அவளுக்குக் காதல், அவனை நினைத்து அவள் ஏங்குகிறாள். அக்காலத்தில் முறைமாப்பிள்ளை யான பாலன் ஒருவனுக்குத் திருமணம் நடத்தி வைக்கிறார்கள். திருமணத்தில் அவளுக்கு மகிழ்ச்சி இல்லை. அவளது கவலை எல்லாம் இத்துயரம் தோய்ந்த பாட்டாக வெளியாகிறது. இம்மண

முறையை எதிர்க்கும் இளம் பெண்ணின் உணர்ச்சியை இப்பாடல் சித்திரிக்கிறது.

இடை சிறுத்து மார்படர்ந்து
ஏழு வருசங் காத்திருந்தேன்
சீமையாடுஞ் செல்லச் சாமி
சிறை எடுக்க வாருமையா!

உன்னை நம்பியல்லோ
ஏழ் வருசங் காத்திருந்தேன்
இன்னுங் காத்திருக்க
என்னால் ஆகாதப்பா!

பாதையிலே பச்சை வச்சேன்
பாலகனைக் காவல் வச்சேன்
பச்சைக்கு ஆசைப்பட்டு
பாலகற்கோ கை கொடுத்தேன்.

சந்த முத்திலை சிறுத்து
ஏழு வருசங் காத்திருந்தேன்
பாக்கு முத்தி பருவம் தப்பி சிறு
பாலனுக்கோ கைகொடுத்தேன்!

[சேகரித்தவர்:—எஸ். எஸ். போத்தையா

## 18. ஏமாற்றம்

தமிழ் நாட்டில் அத்தை மகனும், மாமன் மகளும் முறை மணமக்களாவார்கள். முறைப் பெண்களிடம் அவர்கள் தாராளமாகப் பழகும் வழக்கம் கிராமங்களில் சமீப காலம் வரை இருந்து வந்துள்ளது. முறைமாப்பிள்ளைகள் சிலர் நல்லவர்களாக இருப்பார்கள். சிலர் வஞ்சக நெஞ்சம் உள்ளவர்களாக இருப்பார்கள். நன்ருகப் பழகும் பெண்ணொருத்தி தன் அத்தானிடம் வெற்றிலை கேட்டுவிட்டாள். அவ்வாறு கேட்டதை அவன் காதல் குறிப்

யென்று தவருகப் புரிந்துகொண்டான். அவன் பேச்சும் போக்கும் அடக்கத்தையும், அளவையும் மீறிற்று. நெறி தவருத அப்பெண் அவனைச் சீறுகிருள்.

எலுமிச்சம் பழ மின்னு
எடுத்தேனே கை நிறைய
பச்சைத் துரோகி யல்லோ
பார்த்தவங்க சொல்லலியே!

அத்தை மகனின்னு
வெத்திலையும் கேட்டு விட்டேன்
கத்தாழை நாறிப்பய
கபடம் தந்து எண்ணிட்டானே.

# ஐந்தாம் பகுதி

## குடும்பப் பிரச்னைகள்

1. வாயாடி
2. பொல்லாத நீலன்
3. நம்பிக்கை
4. பெண்டாட்டிப் பித்தம்
5. கிளி பறந்தது
6. வண்டி வருமா ?
7. கப்பல் கவிழ்ந்தது
8. எச்சரிக்கை

## 1. வாயாடி

ஒரு வாயாடி தனது ஊருக்கு வெகுதூரத்துக் கப்பாலுள்ள ஊரில் வாழ்க்கைப்பட்டாள்; அங்கு போயும் அவள் வாய் குறையவில்லை. கணவன் அடித்துத் துரத்தி விட்டான். போக்கற்ற நிலை ஏற்பட்ட பின் தன் நிலைமையை எண்ணி வருந்துகிறாள்.

வடக்கே வெகு தூரம்
வாக்கப் பட்டேன், செல்லமாக
வாயாலே சீரழிந்து
வந்து நிக்கேன் கோயிலே.

## 2. பொல்லாத நீலன்

சோம்பேறியான கணவன் சாப்பிட உட்காரும்போது சோறும், மீன் கறியும் இலையில் வந்து விழ வேண்டும். இல்லாவிட்டால் மனைவியை அடிப்பான். அவள்தான் உழைத்து அவனுக்குச் சோறுபோட்டு வந்தாள். பயிரில்லாக் காலம். வேலை இல்லை; கூலி கிடைக்காது. அடுத்த பருவக்காலத்தை எதிர் நோக்கிக் கடன்வாங்க வேண்டும். அவன் எங்காவது சென்று வேலை பார்க்கக்கூடாதா? பார்க்கவில்லை. அவள் அவன் காதில் படும்படியாக இப்பாட்டைச் சொல்லுகிறாள்.

அரிசி கடன் வாங்கி
அந்திக் கடை மீன் வாங்கி
போயிச் சமைக்கணுமே
பொல்லாத நீலனுக்கு!

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 3. நம்பிக்கை

உழுது கொண்டிருக்கும் உழவர்களில் முதல் ஏர்க்காரன் மனைவி வயலுக்கு வருகிறாள். அவள் அருகில் பொதி மாட்டுக் காரனும் வருகிறான். அவள் மிக நல்லவள் என்று பெயர் வாங்கியவள். கணவனும் அவள் மீது மிகவும் நம்பிக்கையுடையவன். ஆயினும் உழவர்கள் அவள் கணவனைக்கேலி செய்வதற்காக முதல் பாட்டைப் பாடுகிறார்கள். அவன் கோபம் கொள்ளாமல் கேலியாக அவர்கள் சொல்வதைப்பற்றிக் கவலைப்படாமல் இரண்டாவது பாட்டைப்பாடுகிறான். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அவள் நடத்தையை அவன் சந்தேகிப்பதாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. உண்மை. அதுவானால் அவன் கோபித்தல்லவா பேசவேண்டும்? ஆனால் இப்பாட்டில் கோபத்தின் அறிகுறியையே காணோம்.

ஓர் உழவன் :

முன்னுந்தி ஏருக்காரா!
முன்பல்லுங் காளிங்காரா!
போராடா ஒம் பொண்டாட்டி;
பொதி மாட்டுக் காரங்கூட!

இரண்டாம் உழவன் :

போனாலும் போகட்டுமே!
புள்ள குட்டி ஆகட்டுமே!
காசு கொஞ்சம் பறக்கட்டுமே!
கடனுங் கொஞ்சந் தீரட்டுமே.

[சேகரித்தவர் :—எஸ். எம். போத்தையா]

## 4. பெண்டாட்டிப் பித்தம்

மணமானவுடன் ஒரு கிராமத்து இளைஞன் மனைவி சொல் தட்டாதவனாகி விடுகிறான். வீட்டில் நடந்த சிறு சண்டையைப் பெரிதாக்கி மனைவி சொல் கேட்டுக் கொண்டு தாயாரிடம் அவன் சண்டைக்குப் போகிறான். அவன் தாயிடம் சொல்லும் பேச்சும், அவள் விடையுமே இப்பாடல். அவனைக் கேலி செய்து திருத்தும் முறையில் இப்பாடல் அமைந்துள்ளது.

இளைஞன் : கருப்பு நிறத் தழகி(யை)
காயாம்பூ மேனியாளை
இடை சிறுத்த செண்பகப்பூ(வை)
என்ன சொன்ன தாயாரே.

தாய் : அரிசி அரிச்சிப் போட்டு
அடுத்த வீடு போயிருந்தா
சோறு குழைந்த தின்னு
சொன்ன எப்பா ஒரு வார்த்தை.

இளைஞன் : இன்றைக்குச் சொன்னது போல்
இனிமேலும் சொன்னயானால்
கன்னனி நரை மயித்தை
நெடு நாளும் பின்னிடுவேன்.

குறிப்பு : சொன்ன—சொன்னாய்; குச்சி-குச்சில்.
சேகரித்தவர்கள்—கார்க்கி, எஸ். எஸ். போத்தையா]

## 5. கிளி பறந்தது!

அவள் வளர்த்த பச்சைக்கிளி, அவள் கணவன்தான். கூட்டை விட்டுத் திறந்து வெளியே விட்டதும் பச்சை மரத்திற்குப் பறந்து செல்லும் கிளியைப்போல் அவன் வேறொருத்தியிடம் சென்று விட்டான். அவளுடைய பேச்சும் அவனுடைய பதிலும் இப்பாடலில் காணப்படுகின்றன.

கணவன் : கிளியோ கிளி பார்ப்பேன்
கிளி முகத்தை நான் பார்ப்பேன்
வேத்துக் கிளி பார்த்ததுன்னு
விலங்கடிச்சிப் போட்டுடுவேன்.

மனைவி : வேத்துக் கிளி பார்த்தா என்ன
விலங்கடிச்சிப் போட்டாென்ன
கோழிக் குஞ்சு ரூபங்கொண்டு
குதிச் சோடி நான் போவேன்.

கணவன் :

ஆசைக்கிளி வளர்த்தேன்
அக்கரையில் மேயவிட்டேன்
பாவி என்ன சொன்னளோ
பறந்திருச்சே பச்சைக்கிளி!

(சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா)

## 6. வண்டி வருமா!

கடலை பயிராகி நல்ல பலன் தந்தது. கணவன் கடலை மூட்டைகளை வண்டியிலேற்றிக்கொண்டு சந்தைக்குப் போகிறன். போகும்போது கடலை நல்ல விலைக்குப் போனல் கடகம் செய்து போடுவதாக மனைவியிடம் சொன்னன். போனவன் ஒரு நாள் முழுதும் திரும்பவில்லை. அவரோடு கூடப்போனவர்கள் சந்தையிலிருந்து திரும்பி விட்டார்கள். திரும்பியவர்களிடம் "என் கணவர் வரக் கண்டீர்களா?" என்று கேட்கிறள். அவர்கள் அவளது பயத்தை அதிகமாக்குகிறதற்காக வண்டிக்கு ஆபத்து ஏற்பட்டது என்று சொல்லுகிறர்கள்: அவள் பதை பதைத்துப் போகிறள். அவர்கள் சிரிக்கிறர்கள். அவள் வெட்கமடைந்து வீடு திரும்புகிறள்.

கணவன் மனைவியிடம் கூறுவது :

கடலை பிடிச்ச வண்டி
கட கடன்னு போற வண்டி
கடலை விலையானல்—உனக்கு
கடயம் தட்டிப் போடறேனே.

மனைவி வண்டிக்காரர்களிடம் கூறுவது :

தெற்கத்தி வண்டிக்காரா!
திருநெல்வேலி வியாபாரி
என் சாமி வண்டி
எதிரே வரக் கண்டீயளோ?

வண்டிக்காரன் பதில் :

அச்சு ஒடிஞ்ச வண்டி
ஆரக்கால் போன வண்டி
பட்டை கழன்ற வண்டி
பட்டுக் கிட்டான் உன்புருஷன்.

[சேகரித்தவர்:— எஸ். எஸ். போத்தையா]

## 7. கப்பல் கவிழ்ந்தது

கடற்கரையில் செம்படவர் குடிசைகள். குடிசையிலிருந்து வெளியே வந்து கடற்கரையில் காத்திருக்கிறாள் பரதவர் மகள் அவள் கணவன் கப்பல் சென்று பல நாட்களாயின. திரும்பி வரும் நாள் ஆகிவிட்டது. நாள்தோறும் அவள் கடற்கரையில் காத்திருக்கிறாள். அவன் படகு திரும்பவில்லை. அவனைப்பற்றி அவள் மனத்தில் ஒரு சித்திரம் எழுந்தது. அவன் அவள் காணாத தொலைவில் இறங்கினாலும் அங்கிருந்தே விசிலடிப்பான். அது தூத்துக்குடி முழுதும் கேட்குமாம். அவன் வருகையைத் தெரிவிக்கும் அவ்வொலி அவள் பல நாட்கள் எதிர்பார்த்து ஏங்கியும் கேட்கவில்லை. கப்பல் கவிழ்ந்து விட்டதோ என அவள் பயப்படுகிறாள். கப்பல் கவிழ்ந்து விட்டால் கடற்கரையில் அவளுக்கு ஆசை ஏன்? அவளுக்கு நேரமாகி விட்டது. இரவில் அவன் வந்தால் என்ன செய்வது? அவள் தன் வீட்டின் அடையாளத்தைக் காற்றினிடம் சொல்லி வைக்கிறாள். அவனுக்கு வீட்டின் அடையாளம் தெரியும். ஆயினும் தன் பயத்தில் காற்றிடம் சேதி சொல்கிறாள்.

எல்லோரும் உசுடிலச்சா,
காதுருட்டும், கண்ணுருட்டும்!
என் சாமி உசுலடிச்சா,
தூத்துக்குடி தான் பறக்கும்!

கப்பல் வருதின்னு
கடற்கரையே போயிருந்தேன்;
கப்பல் கவுந்தவுடன்
கடற்கரையில் ஆசையில்லே !

தென்னை கொண்டு கால் நிறுத்தி;
தென்னோலை கொண்டு வளை போட்டு;
அயிரை கொண்டு மேய்ந்திருக்கும்;
அதுதானய்யா நம்ம வீடு.

[ சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா ]

## 8. எச்சரிக்கை

கிராமப் பெண்ணொருத்தியின் கணவன் அடுத்த தெருவி லுள்ள ஒரு பெண்ணோடு, கூடா நட்பு கொண்டு வாழ்கிறான். அவன் மனைவி ஊரார் பழிச்சொல்லை அவனுக்கு எடுத்துக் கூறி அப்பெண்ணின் உறவினர் ஜாடை மாடையாக அவன் மீது பழி தீர்த்துக் கொள்ள விரும்புவதையும் சொல்லி வைக்கிறாள். அவ மானத்திற்கு அஞ்சாதவன், கொலைபட்டுச் சாவதற்காவது அஞ்சட் டும் என்று அவள் பயம்போட்டு வைக்கிறாள். அவள் கணவனி டம் பேசும் பேச்சே இப்பாடல்.

தேக்கம் பலகை வெட்டி
தெக்குப் பாத்த மச்சோதுக்கி
மச்சுக்குள்ளே நித்திரை போர்
மந்திரியே எந்திரிங்க !

சாப்பிட்டுக் கைகழுவி
சகுனம் பார்த்து வழிநடந்து
போறீரே என் பிறவி
பொழுது தடஞ்ச நேரத்திலே !

தென்னங் கீற்றிலேயோ
தேன்வடியும் பொத்தையிலே
மன்னன் கோடங்கையிலே
மத்தொருத்தி சாயலாமோ?

தெற்குத் தெருவிலேயோ
தேத வேதப் பொட்டுக்காரா;
வடக்குத் தெருப்பிள்ளையாலே
வகை மோசம் வந்துரும்!

கீழத் தெருவிலேயோ
கிளிமூக்குச் செஞ் சேவல்
குத்தனுமின்னு சொல்லி
கூடி மாடிப் பேசுறுங்க!

மாவு உருண்டை போல
மணியுருண்டை இங்கிருக்க;
சாணியுருண்டைக்காக
சாம வழி போகலாமோ?

[**தேதவேதப் பொட்டு**—என்னவென்று விளங்கவில்லை. பிள்ளை-பெண் இது நெல்லை மாவட்ட வழக்கு.]

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

# ஆறும் பகுதி

## ஊரும் நாடும்

1. நம் ஊர்—உச்சிநத்தம்
2. நம் ஊர்—சின்னரங்கம்
3. மழை வாராதோ ?
4. மேகம் போல் வண்டி
5. தண்ணீர்
6. வெள்ளைக்காரன்
7. மாண்டாரே மகாராஜா

# 1. நம் ஊர்

## உச்சிநத்தம்

தன்சொந்த ஊரைப் பற்றி பெருமைப்படாதவர்கள் யாருமே இல்லை. உச்சிநத்தம் முதுகுளத்தூர் அருகிலுள்ள ஓர் சிற்றூர். அதன் பெருமையைப் பற்றி ஊர்க்காரர்கள் பாடுகிறார்கள். முதலில் ஊரிலுள்ள தெய்வங்களின் பெருமையைப் போற்றுகிறார்கள். பின்பு ஊரின் நீர் வளத்தைப் புகழ்கிறார்கள். வறட்சியான ஊரில் பெண் கொடுப்பதற்கு பெண்ணின் பெற்றோர்கள் பயப்படுவார்கள், ஏனென்றால், தாங்கள் அருமையாக வளர்த்த பெண்தானே குடம் தூக்கி அவஸ்தைப்பட வேண்டும் என்று அவர்கள் நினைப்பார்கள். ஆனால் இவ்வூரில் ஊருக்கு அருகிலேயே நீர் நிறைந்த குளம் இருப்பதால் பயமில்லாமல் பெண் கொடுக்கலாமாம்.

அஞ்சு புளியாரம்,
அதுல ஒரு ஆலமரம்,
அதிலே குடி இருப்பா
அதிகாரி உமையம்மாள்.

வட்ட வட்டச் சங்கிதியாம்
வடக்கப் பார்த்த ஐயனாராம்;
கிழக்க பார்த்த கருப்பசாமி
கேட்ட வரந்தான் கொடுப்பார்

கரையிலே கமுக மரம்
கரையின் கீழ் பசலேமடம்
பெரியவுக நாளையிலே
பேர் போன உச்சிநத்தம்.

ஊரைச் சுத்தி உப்புத் தண்ணீர்
ஒரு கிணறு நல்ல தண்ணீர்
தேங்காய்த் தண்ணீர் உச்சிநத்தம்
தேடி வாங்க வாக்கப்பட!

ஊருன்னா நம்ம ஊரு
உலகமின்னா ராமேஸ்வரம்
பேர் போன உச்சிநத்தம்
பெரண்டடிக்கும் கலங்குத் தண்ணீர்.

அந்திமரம் இத்தியிலே
யாருடைய சாவல் கட்டோ?
சேதுபதித் துரைகளுடன்
சேர்ந்தவர்கள் சாவல்கட்டு.

*[குறிப்பு: வாக்கப்பட—வாழ்க்கைப்பட; பெரண்டடிக்கும்—புரண்டு அடிக்கும்.]*

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 2. நம் ஊர்

### சின்ன ரங்கம்

*சின்ன ரங்கம் என்ற ஊரின் பெருமையைப் பற்றி ஊர்க்காரர்கள் பாடுவது.*

அஞ்சு கிணற்றுத் தண்ணி,
அரைக் கிணறு உப்புத் தண்ணி,
தேங்காய்த் தண்ணி வாதல் நகர்,
தெருவழகு போதாதா?

கெட்டு கேட்டா வேப்பமரம்
நெருங்கியிருக்கும் ஒட்டுவட்டம்,
தாசில்தார் வந்திறங்கும்
சரியான சின்னரங்கம்!

ஒத்த மரந் தெரியும்
உன்னிதமாய் ஊர் தெரியும்
சுண்ணாம்புக் குறி தெரியும்
சோதுசான சின்னரங்கம்!

## 3. மழை வாராதோ

பருவ மழைதான் உழவுத் தொழிலின் உயிர். பருவமழை தப்பிவிட்டால் உழவர்களின் வாழ்க்கை சீரழிந்துவிடும். இப்பாடல் நன்செய் நில உழவர்களும், புன்செய் நில உழவர்களும் மழை பொய்த்த காலத்தில் படும் கவலைகளை வெளியிடுகிறது. மழை வாராதோ என்ற ஏக்கத்தை இப்பாடல் வெளியிடுகிறது.

பெண்கள் :

ஆத்தில ஊத்துத் தோண்டி,
அழுநர் சம்பா நாத்துப்பாவி,
ஆத்துத் தண்ணி வத்த வத்த,
அழுநர் சம்பா வாடுதில்லே!

சம்பா விளையுமின்னு,
சந்தோஷமாயிருந்தேன்;
சண்டாளன் பஞ்சம் வந்து
சாவியாக்கிப் போட்டிருச்சி!

மழையோ வருதின்னு,
வாங்கி வைச்சேன் கம்புவிதை;
வந்த மழை போயிருச்சே
மடாதுரைக் காளியம்மா!

வந்த மழையை நம்பி,
சந்துச் சம்பா நெல் பாவி,
வந்த மழை போகுதையா
வயக்காட்டுக் கன்னி மாரே!

இந்த மழையை நம்பி
இருந்த கம்பை நான் விதைச்சேன்;
வந்த மழை போயிருச்சே
மந்தையம்மா நீ சாட்சி!

மாசி மழை பெய்யாதோ?
மலையில் வெள்ளம் சாயாதோ?
ஏத்து மீனு ஏறாதோ?
எங்கள் பஞ்சம் தீராதோ!

(சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா)

[ காளி வயக்காட்டுக் கன்னி, மந்தையம்மா இவர்கள் செழிப்பைக் கொடுக்கும் பெண் தெய்வங்கள் ]

## 4. மேகம்போல் வண்டி

மேல்மாந்தை ஒட்டப்பிடாரம் அருகிலுள்ளதோர் ஊர். அங்கே கட்டபொம்மன் இனத்தவர் செல்வாக்குடன் வாழ்கின்றனர். அவர்கள் பக்கத்து ஊர்களுக்குச் சென்றுவரும் விமரிசை இப்பாடலில் வருணிக்கப்படுகிறது.

பச்சை வண்டி, நீல வண்டி
பார்வைக்கு ஏத்த வண்டி.
மேகம் போல் வந்திறங்கும்
மேல் மாந்தைச் சாமி வண்டி.

வண்டி நெரு நெருங்க.
வாங்காச் சத்தம் இடி முழங்க
சாலை சர சரங்க,
சமுத்திரம் போல் வந்திறங்க

மூன்றாறு வண்டியிலே
முதல் வண்டி சாமி வண்டி
சாமி வண்டிக் கடையாளம்
சவலாத்துப் போட்ட வண்டி.

மூன்றாறு வண்டியிலே
முதல் வண்டி சாமி வண்டி
சாமி வண்டிக் கடையாளம்
சந்தனப் போர்க் காளை

(சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா)

## 5. தண்ணீர்

கரிசல் காட்டில் குடிக்கவும், பாசனத்திற்கும் தண்ணீர் கிடைப்பது அருமை. ஒரு ஊரில் ஒரே ஒரு குடிதண்ணீர்க் கிணறுதான் இருக்கும். அக்கிணற்றில் ஓணானோ, தவளையோ செத்து நாற்றமடித்துவிட்டால் கிராம மக்கள் குடிதண்ணீருக்கு வெகு தூரம் அலைய நேரிடும். இத்தகைய கஷ்டத்தை முதல் பாட்டு வருணிக்கிறது. வறண்ட கரிசல் காட்டில் சில வருஷங்களுக்கு ஒருமுறை ஏரி நிரம்பும். ஏரி நிரம்பினால் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியால் நிரம்பும். வருங்காலத்தில் கம்பும், சோளமும், பருத்தியும் விளைந்து பலன் தருமல்லவா? ஏரி நிறைந்ததைக் கண்டு மகிழ்ச்சியோடு அதனைப் போற்றிப் புகழுவது இரண்டாவது பாட்டு.

நாறும் தண்ணீர் :

ஒத்தக் கிணத்துத் தண்ணி!
ஓந்தான் செத்து நாறும் தண்ணி;
பத்துக் கிணத்துத் தண்ணி!
பாண்டிய ராசா மேல் மாக்கை!

ஏரியில் நீர் :

பெரிய குளத்துக் கம்மா !
பேர் போன சின்னக் கம்மா ;
வயக் காட்டைப் பார்த்தவுடன்,
வர்ணிக்கிறேன் பேஞ்சதையும் !

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 6. வெள்ளைக்காரன்

நாயக்கர் ஆட்சி முடிந்தபின் ஆற்காட்டு நவாபுகள் தமிழ் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் அவர்களி டையே பதவிப் போட்டி ஏற்பட்டதால் நாடு இரண்டுபட்டது. இப்பதவிப் போட்டியில் வெள்ளைக்காரர்கள் முகம்மதலி பக்கம் சேர்ந்து கொண்டார்கள். அவரிடமிருந்து தமிழ் நாட்டின் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றனர். படிப்படியாக எல்லா அரசியல் அதிகாரங்களையும் அவர்கள் கைபற்றிக்கொண்டார்கள். தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் அவர்கள் எல்லாத் துறைகளி லும் தலையிட்டனர். இத்தலையீட்டைக் கேலி செய்வதே இப்பாடல் ஊரில் எவனோ வெள்ளரிக்காய்த் தோட்டம்போட, வெள்ளரிக் காய் காய்த்தபின் அதை என்ன விலைக்கு விற்க வேண்டுமென்று வெள்ளைக்காரன் காகிதம் போட்டானாம். இது அவர்கள் மக்களின் வாழ்வில் தலையிட்டு எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற முயல்வதை மக்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டுகிறது.

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டாக விற்கச் சொல்லி
காகிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்.

## 7. மாண்டாரே மகாராசா

கிராம மக்கள் நன்றி மறப்பவர்களல்ல.

“தினைத்துணை நன்றி செய்யினும்
பனைத் துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்”

இது வள்ளுவர் வாக்கு. பொட்டை நாழி போட்டு அளக்காமல் பூவரசங் கொப்பினுல் நல்ல மரக்கால் உண்டு பண்ணிஞராம் எட்டையபுரம் மகாராசா. அவர் இறந்து போனபோது உழவர்கள் பாடிய இரங்கற் பாவே இப்பாடல்.

கார்த்திகை மாத்தையிலே
கடலேக் கனே கட்டயிலே
மார்கழி மாத்தையிலே
மாண்டாரே மகாராஜா.

யார் வந்தாலும் கூப்பிட்டாலும்
போக மாட்டார் மகாராசா
யமன் வந்து கூப்பிட்டதும்
ஏறிவிட்டார் பூந் தேரில்.

பூவரசங் கப்பு வெட்டி
புது மரக்கால் உண்டு பண்ணி
நித்த நித்தம் படியளக்கும்
வள்ளத்தையா மகாராசா.

ஆடு அழுக! மாடு அழுக!
ஆயிரம் சனம் அழுக,
பட்டத்து யானே யெல்லாம்
பாதையிலே நின்றழுக.

[குறிப்பு—இப்பாடல் கோவில்பட்டி வட்டாரத்தில் பாடப்படுகிறது. எட்டையபுரம், கோவில்பட்டிக் கருகில் இருப்பதால் இப்பாடல் அங்கு பாடப்படுவதில் வியப்பெதுவும் இல்லே. ஆனுல் திருநெல்வேலிக் கருகில் உள்ள நன்செய் நிலச் சிற்றூர்களிலும் இப்பாடல் பாடப்படுகிறது. அதுதான் வியப்புக்குரியது. ஏன்? அவர் தன்னுடைய சமஸ்தானத்தில் கள்ள மரக்காலேப் போக்கி நல்ல மரக்கால் உண்டுபண்ணிய செய்தி வெளியிலும் பரவிற்று.

கள்ள மரக்காலால் குறைந்த கூலிபெற்று ஏமாற்றப்பட்ட உழவர்கள், தங்களுக்குக் கிடைக்காவிட்டாலும் எட்டையபுரம் உழவர்களுக்குக் கிடைத்த லாபத்தை வரவேற்றார்கள். அதன் விளைவாகத்தான் எட்டையபுரத்துக்கு வெகு தூரத்துக் கப்பாலும் உள்ள இடங்களில் இப்பாடல்கள் பாடப்படுகின்றன. சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா. இதே பாடலில் கடைசி நான்கடிகள் தவிர மற்றவை தருவைக்கருகில் பாடப்படுவதாக டாக்டர் பி. ஆர். சந்திரன் கூறுகிறார்.]

[அழுக—அழ கோவில்பட்டி வட்டார வழக்கு.]



# ஏழாம் பகுதி

## பல் சுவை

1. பாட்டுக்கு எதிர்ப் பாட்டு.
2. சிறு பயல்.
3. வண்ணாத்தி.
4. மாமன் வந்த வேளை.
5. கால மாறுதல்.
6. ஊர்க்குருவி.
7. ஏரோப்பிளேன்!
8. சேவற்கட்டு.
9. ரயில் வண்டி,
10. பாட்டுக்காரன்.

# 1. பாட்டுக்கு எதிர்ப்பாட்டு

பருத்தி பொறுக்கிக் களைத்த பெண்கள் கிணற்றங்கரை யருகில் மர நிழலில் உட்கார்ந்திருக்கிருர்கள். பாட்டு, களைப்புக்கேற்ற மருந்தாகிறது. வேடிக்கையாக ஒருத்தியை ஒருத்தி ஏசத் தொடங்குகிருள்; இதை ஏசல் என்று கூறுவார்கள்; இலக்கியத்தில் பள்ளுப் பாட்டில் இவ்வகையான பாடல்கள் ஓர் உறுப்பாக அமைந்துள்ளன. இது பள்ளுப்பாட்டின் முக்கிய உறுப்பாக இருப்பதால் பள்ளுப் பாட்டிற்கே பள்ளேசல் என்ற மறு பெயரும் உண்டு. ஏசலில் பெண்கள் இகழ்வதை இப்பாட்டில் கேளுங்கள்.

ஒருத்தி :

மரக்கா கலவாணி
மாவிடிக்கும் நந்தாணி
சுரக்கா கலவாணி
சொல்லிவாடி உம்பாட்டை.

மற்ருெருத்தி :

அடுப்பு நக்கி, துடுப்பு நக்கி
அடுப்பங்கரை சாம்பல் நக்கி
பருப்புப் பலகை நக்கி
பாடிவாடி உம்பாட்டை.

ஒருத்தி :

கந்தந் துணி பொறுக்கி
கடைகடைந்து நெல் பொறுக்கி
பீத்தல் துணி பொறுக்கி
பித்தா தேடு உம்பாட்டை

மற்றொருத்தி :

என்னைத் தலையுநீ
எழுத்தாணி ஆக்குநீ
சுரக்காத் தலையுநீ
சொல்லி வாடி உன்பாட்டை

நாழி வரகரிசி
நாகாழி பச்சரிசி
ஆழி வரகரிசி
ஆடி வை உன்பாட்டை.

ஒருத்தி :

ஒரு பாட்டுப் படிச்சவளே
உட்கார்ந்து போனவளே
நானுங் கிளி வாய் திறந்தா
நாண்டு கிட்டுச் சாவையிலே !

மற்றொருத்தி :

இந்தப் பாட்டுப் படியாதே !
எனக்கு வெட்கமாயிருக்கு
சுரக் குடுக்கை வாங்கித் தாரேன்
சொல்லாமல் ஓடிப்போடி.

ஒருத்தி :

பாட்டுக்குப் பாட்டடிப்பேன்
பாட்டையாவைத் தோக்கடிப்பேன்
எதிர்ப் பாட்டுப் படியாட்டா
ஏணி வைச்சுப் பல்லுடைப்பேன்.

மற்றொருத்தி :

பாட்டுக்குப் பாட்டடிப்பேன்
பதில் பாட்டு நான் படிப்பேன்
எதிர்ப் பாட்டுப் படியாட்டா
ஏணி வைச்சுப் பல்லுடைப் பேன்.

ஒருத்தி :

கடலாடிச் சீமையிலே
காசுக் கொரு விளக்கு மாறு
எதிர்ப்பாட்டுப் படியா விட்டால்
எடுப்பனடி விளக்கு மாத்தை.

மற்றொருத்தி :

பாட்டுக்குப் பாட்டடிப்பேன்
பாட்டாளரைத் தோக்கடிப்பேன்
எதிர்ப்பாட்டுப் படிக்கலேன்னு
ஏணி வைச்சுப் பல்லுடைப்பேன்.

[சேகரித்தவர் :—எஸ். எஸ். போத்தையா]

## 2. சிறு பயல்

தனக்கு மூத்தவளான மாமன் மகளை அத்தை மகன் கேலி செய்கிறான். அவள் அவனைப் பதிலுக்குக் கேலி செய்கிறாள். இக் கேலிப் போட்டியே இப்பாடல்கள்.

ஆண் :

எலந்தப் பழம் போல
எனக்கு முன்னா போறவளே
கொழுந்தைப் பய நான் வாரேன்
கொண்டாடைக்க வல்லமையா ?

பெண் :

மண்ணு ருசி நீ அறிவே
மரத்து ருசி நீ அறிவே
பெண்ணு ருசி நீ அறிவே
போடா சிறுபயலே !

[சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா]

## 3. வண்ணாத்தி

வெள்ளை கொண்டு வந்த வண்ணாத்தியிடம் வேண்டாத பேச்சுக் கொடுக்கிறான் ஒரு இளைஞன். அவள் அவன் மன அழுக்கைக் குறிப்பிட்டு வெள்ளாவி வைத்தாலும் போகாத அழுக்கு அது என்று சூடு கொடுக்கிறாள்.

அவன் :

சின்னஞ் சிறிய பிள்ளை
ஸ்ரீ வைகுண்டத்து வண்ணாப் பிள்ளை
நான் போட்ட பட்டு லேஞ்சு
நய நயமாய் வெளுத்திருக்கே.

வண்ணாத்தி: வெளுத்து வெளுத்துப் பார்த்தேன்
வெள்ளாவி வைச்சுப் பார்த்தேன்
யாரு முகம் பார்த்தியளோ!
அழுக்கு முற்றும் போவதில்லை,

## 4. மாமன் வந்த வேளை

ஊரிலே தேர்த் திருவிழா, பக்கத்துக் கிராமத்திலிருந்து இளைஞனொருவன் தனது சகோதரியையும், அவளது குழந்தைகளையும் பார்க்க வருகிறான். அவன் அக்கா வீட்டையடைந்ததும் வாசலில் அவளுடைய குழந்தை அவனை வரவேற்கிறது. மாமாவைக் கண்ட மகிழ்ச்சியில் அது ஒரு நீண்ட வரவேற்புரை நிகழ்த்துகிறது. அக்குழந்தையின் பேச்சே இப்பாடலாக அமைகிறது.

வாங்க மாமா, வாங்க;
நீங்கவந்த வேளை
கம்பஞ் சோறு
கருவாட்டுக் குழம்பு!

தின்னுபாருங்க மாமா
தேரு பார்க்கப் போவோம்
காசுதாங்க மாமா
கடலை வாங்கித் தின்போம்.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 5. கால மாறுதல்

ஒரு ஜமீன் கிராமம். ஒரு கிழவன் தன் ஆயுள் காலத்தில் கிராமத்தில் நடந்த மாறுதலை எண்ணிப் பார்த்தான். இரண்டு பஞ்சங்கள் வந்தன. ஊரில் பலர் மலைத் தோட்டங்களுக்குச் சென்றுவிட்டனர். நிலமுடையவர்கள் நிலங்களை விற்றனர். தங்க நகையுடையவர்கள் அவற்றை விற்றனர். உழைப்போர் வாழ்க்கை முன்னிலும் மோசமாயிற்று. ஆனால் இவ்வளவு மாறுதல்களிலும் சுகமாக வாழ்ந்தவர் ஒருவர் உண்டு. அவரைப் பஞ்சம் பாதிக்க

வில்லை. கிழவனுடைய இளமைக் காலத்தில் பெரிய ஜமீன்தார் வாழ்ந்திருந்தார். அவர் பேய்க் குதிரைமேல் சவாரி செய்தார். அவருடைய மகன் இப்பொழுது ஜமீன்தார். இவர் பெரிய காரில் சவாரி செய்கிருர். பஞ்ச காலத்தில் உழவர்கள் விற்ற நிலமெல்லாம் இன்று இவருக்குச் சொந்தம். காலம் மாறித்தான்விட்டது. ஏழையை மேலும் ஏழையாக்கிவிட்டது. பணமுள்ளவனை மேலும் பணமுள்ளவனாக்கி விட்டது. கால மாறுதலின் ஒரு அம்சத்தைக் குறிப்பிட்டு இப்பாடல் கிராமப்புறத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் முழுவதையும் சுட்டிக் காட்டுகிறது.

பெரிய துரை காலத்திலே
பேய்க் குதிரை சவாரி;
சின்னத் துரை காலத்திலே
சிம்மம் போலே மோட்டார்.

[சேகரித்தவர்—எஸ். எஸ். போத்தையா]

## 6. ஊர்க்குருவி

வெகு நேரமாகத் தாய்ப் பறவையைக் காணவில்லை. சிறிய குஞ்சு பெரிய குஞ்சினிடம் அம்மா எங்கே போனுள்? என்று கேட்கிறது. பெரிய குஞ்சு அம்மாவுக்கு என்ன நிகழ்ந்திருக்கும் எனத் தான் நினைக்கிறதோ அதனைச் சொல்லுகிறது.

தங்கை: அக்கா அக்கா ஊர்க்குருவி
ஆத்தா எங்கே போனு?

அக்காள்: பரவர் வலையிலே
பட்டிருப்பாள் இந்நேரம்!
வெள்ளிக் கோல் தட்டிலே
விலையிருப்பாள் இந்நேரம்!

அரிவாள் மனையிலே
அரிந்திருப்பாள் இந்நேரம்!
நயவனர் சட்டியிலே
கொதிச்சிருப்பாள் இந்நேரம்!

அன்னந்தைக் கீழே வைச்சு
ஆந்தானை மேலே வைச்சு
எச்சுப் பய மக்களெல்லாம்
மிச்சும் மிச்சுத் திம்பாக.

[சேகரித்தவர் : எஸ். எஸ். போத்தையா]

## 7. ஏரோப்பிளேன்

முதியவர்கள் குழந்தைகளோடு வீட்டில் இருக்கிறார்கள். இளைஞர்கள் வயல்வெளிக்குச் சென்றுவிட்டார்கள். ஆகாயத்தில் ஒரு இரைச்சல் கேட்டது. கிழவன் தலைநிமிர்ந்து பார்த்தான். ஒரு விமானம் பறந்து சென்றது. தன் மனைவியிடம் அதைப் பற்றி அவன் வியப்போடு பேசுகிறான். தாத்தாவும் பாட்டியும் குழந்தைகளிடம் பழங்காலத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதுண்டு. சிற்சில வேளைகளில் தற்கால நவீனங்களைக் கேலி செய்தும் பேசுவதுண்டு. பாட்டியைக் கேலிசெய்யத் தனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததென்றெண்ணி பேத்தி, உன் பாட்டன், பூட்டன் நாளையிலே பறவைக் கப்பல் பார்த்தியா ?" என்று கேட்கிறாள். பேத்தியின் கேலி பாட்டிக்குக் குத்தலாயிருக்கும். தாத்தா, பாட்டி ஆகிய இருவரது முகங்களும் மலர்கின்றன.

கிழவன் கிழவியிடம் கூறுவது :—

பாரடி ஏரோப்பிளேன் !
பறக்குதடி அந்தரத்தில்
காலுமில்லே, தலையுமில்லே
காற்றாய்ப் பறக்குதடி !.

பேத்தி பாட்டியிடம் கூறுவது :

ஏவிளா, பேத்தியா,
ஏரோப்பிளேன் பார்த்தியா !
பாட்டன் பூட்டன் நாளையிலே
பறவைக் கப்பல் பார்த்தியா !

சாகப் போற நாளையிலே
பறவைக் கப்பல் பார்த்தியா!
சாகப் போற நாளையிலே
சைக்கிளேறிப் பார்த்தியா.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 8. சேவற் கட்டு

கிராமத்தில் விழாக்களின்போது சேவற்கட்டு, மஞ்சு விரட்டு, போன்ற சண்டைப் பந்தயங்கள் நடத்துவார்கள். விளையாட்டுப் பொழுது போக்காக ஆரம்பிக்கும் இச்சண்டைப் பந்தயங்கள் ஊரையே கலக்கும். கட்சிப் போர்களாகவும் முற்றி விடுவதுண்டு. ஒரு சாவற் கட்டுப் பந்தயத்தை ஒரு பெண் பார்த்துக் கொண்டிருக்கிருள். மரத்தடியில் இரு சேவல்கள் முட்டிமோதிச் சண்டையிடுகின்றன. அவற்றில் ஒன்று அவளது காதலனது சேவல். அவனையும் அவள் பார்க்கிருள். அவன் தனது சேவலை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிருன். ஈட்டிக் கம்பைத் தரையில் குத்தித் தனது சேவலை, 'போ, போ' என்று முடுக்குகிருன். அவனது அழகைக் கண்டு அவள் சொக்கி நிற்கிருள். சேவற்கட்டு முடிந்து விட்டது. அவள் பக்கத்திலிருக்கும் தன் ஊர் திரும்புகிருள். அவனும் வருவானென்று ஊரெல்லைக்கு வெளியே காத்திருக்கிருள். இதற்கிடையே ஊர் நாய்கள் குரைக்க ஆரம்பிக்கின்றன. நாய் குரைக்கும் சத்தம் கேட்டு கிராமவாசிகள் வெளியே வருகிருர்கள். அவள் வீடு நோக்கிப் போக வேண்டியதுதான். அவனை இன்று பார்க்க முடியாது. அவளுக்கு நாய்களின் மீது கோபம் கோபமாக வருகிறது. அவை காதலர் சந்திப்பைக் கெடுத்துவிட்டன அல்லவா? நாய்கள் மேல் தோன்றிய கோபம் ஊர்மேலும் பாய்கிறது. எல்லா ஊர்களிலும் எருதுச் சண்டை, சேவற் சண்டை உண்டு. அதையெல்லாம் நடத்துவதற்கு நாதியற்ற இந்த ஊரில் நாய்ச் சண்டை தான் உண்டு என்று நாய்களையும் ஊரையும் திட்டிக் கொண்டே அவள் வீடு போய்ச் சேருகிருள்.

ஏழு புளிய மரம்
எதுக்க ரெண்டு பூத்த மரம்
பூத்த மரத்தடியில்
போர் விசயன் சாவல் கட்டு.

சாவல் பறக்குதில்லை
சமுதாடு நிற்குதில்லை
கடுக்கன் துவளுதில்லை
கட்டழகன் தன்னாருகு.

எல்லார் ஊரிலேயும்
எருதுகட்டு, சாவற்கட்டு
நாதியத்த இந்த ஊரில்
நாயோடு மல்லுக் கட்டு.

[சேகரித்தவர்: எஸ். எஸ். போத்தையா]

## 9. ரயில் வண்டி

மண்ணை வெட்டி வண்டியில் கொண்டு செல்லும் வண்டிக்காரன் ஒருவன், மண்ணெடுத்துச் செல்லும் ட்ரக்ஸ் வண்டியைப் பார்க்கிறான். தன் வண்டிக்கு ஒரு மரச்சட்டமென்றால், ரயில் வண்டிக்கு ஆறு சட்டமிருக்கிறது. இப்படி ஆறுசட்ட வண்டி நூறு வண்டிகளைக் கோர்த்து மண்அள்ளிப் போட்டு ஓட்டிக் கொண்டு செல்லுகிறான் ஒரு மனிதன்! ரயில் வண்டி செய்யும் வேலையின் அளவையும், அதை ஓட்டிச் செல்லும் மனிதனின் பெருமையையும் பார்த்து கிராமத்து வண்டிக்காரன் வியப்பில் மூழ்குகிறான். ரயிலைக் 'கிண்' என்று ஓட்டுபவன் தன்னைப்போல் ஒரு தொழிலாளி தானே என்று பெருமை யடைகிறான்.

ஆறு சட்டம் நூறு வண்டி
அம்பத்தாறு ரயில் வண்டி
கங்கை கொண்டான் மண்ணெடுத்து
கிண்ணுது பார் ரயில் வண்டி !

# 10. பாட்டுக்காரன்

கிராமங்களில் நல்ல சாரீரத்தோடு பாடுபவர்களுக்குச் சிறந்த மதிப்பு உண்டு. கீழ்வரும் நாட்டுப் பாடலில் முதற் பகுதியில் பாட்டுக்காரனது மனைவி தனது கணவனின் பாட்டுத் திறத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறாள். அதைக் கேட்ட அவளு டைய அண்ணன் நீ பாட்டைத்தான் கேட்கிறாயா? அல்லது அவனைத்தான் பார்க்கிறாயா? என்று சொல்லிக் கேலி செய்கிறான். இக்கேலிப் பேச்சு காதில் விழாததுபோல் அவள் தன் கணவன் பெருமையை மீண்டும் பேசுகிறாள். அவன் தொண்டை கட்டி விடாமல் இருப்பதற்காகச் சுக்குத் தண்ணீர் போட்டு வைத்திருப் பதையும் அண்ணனிடம் சொல்லுகிறாள். தங்கையின் இல்லற இன்பத்தை எண்ணி அண்ணன் மகிழ்ச்சியடைகிறான். அவர்கள் இருவரது உரையாடலே இப்பாடல்.

தங்கை:

பல் பிசு வேட்டி கட்டி
பந்தாளம் கையிலெடுத்து
விருத்தங்கள் சொல்லி வந்தா
வீதி இடம் கொள்ளாதே.

அண்ணன்:

அஞ்சாறு வீட்டுக் குள்ளே
அவனொருத்தன் பாட்டுக்காரன்
பாட்டைத்தான் கேட்பாளோ
பயலைத்தான் பார்ப்பாளோ!

தங்கை:

ஆசாரி மடத்து மேலே
அந்நர் சத்தம் சாமீர் சத்தம்
தொண்டையும் கம்மிராம
சுக்குத் தண்ணி போட்டுத் தாரேன்.

[சேகரித்தவர்: எஸ். எஸ். பே

[கம்மிராம—கம்மி விடாமல். அதாவது குரல் விடாமலிருக்கட்டும்.]